

KING OF TONICS




அமிர்தா

159940
H37.1.2
811, N37

# கிரஹலக்ஷ்மி

## சந்தா விவரம்

வருடசந்தா ரூ. 3, ஆறு மாதம் 1-8-0. 6 மாதத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தனிப் பிரதி விலை அணு 4. எந்த மாதத்திலிருந்தும் சந்தாதாராகச் சேரலாம். தனிப் பிரதிகள் வேண்டுவோர் நாலு அணு போஸ்டேஜ் ஸ்டாம்புகள் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். சந்தாத் தொகையை முன் பணமாக அனுப்புவது நல்லது. வி. பி. பி. வீண் அதிகச் செலுவுதான்.

## விளம்பர விகிதம்

மாதர்களுக்கு உபயோகப்படக் கூடிய பொருள்களைப் பற்றி விளம்பரம் செய்வதற்கு இப்பத்திரிகை மிகவும் பிரயோஜனமானது. விளம்பரக் கட்டணம், ஒரு தடவைக்கு ஒரு பக்கத்துக்கு ரூ. 15, அரைப்பக்கம் ரூ. 8, கால் பக்கம் ரூ. 5. நீண்டகால நிரந்தர விளம்பரங்களுக்கு 12½% கமிஷன் தரப்படும். கால் பக்கத்துக்குக் குறைந்த விளம்பரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. தனிச் சலுகைகளுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

## ஏஜண்டுகள்

பிறிதொரு பக்கத்தில் நமது ஏஜண்டுகளின் ஜாப்தாவைக் காணலாம். ஏஜண்டுகளில்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

## வியாசம் வரைவோர் கவனிக்க

வியாசங்கள் எல்லாம் ஸ்திரீகளுக்குப் பயன்படத் தக்கவைகளாகவே யிருக்க வேண்டும். அவைகள் சுருக்கமாக இருந்தால் உடனே பிரசுரிக்க இயலும். கட்டுரைகள் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதப்பட வேண்டும். பிரசுரமாகாத வியாசங்களைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். இதுபற்றி கடிதப் போக்குவரத்து அனாவசியமாக வைத்துக் கொள்ள முடியாது. ரிப்ளை கார்டு அனுப்புவோருக்கு பதில் எழுதப்படும்.

## பத்திரிகை

பத்திரிகை கிடைக்கப் பெறாத சந்தாதார்கள் பிரதிமாதம் 7ந்தேதிக்குள் விஷயத்தைக் காரியாலயத்துக்குத் தெரிவிக்க வேண்டியது. சந்தாதார்களின் விலாச மாறுதல்களை அப்போதைக்கப்போது 4 நாள்முன் கூட்டியே அறிவிக்க வேண்டியது. பத்திரிகைகள் காலா காலத்தில் வந்து சேராவிடில் தபால் இலாகா அதிகாரிகளிடம் புகார் செய்யலாம்.

## சந்தா

சந்தாவின் காலம் முடிய ஒரு மாதத்திற்கு முன்னரே சந்தாதார்களுக்கு அறிவிக்கப்படும். தங்கள் சந்தாதார் பதவியை அவரவர்கள் நீடிக்கக் கோறுகிறோம். பத்திரிகை தேவையில்லாதவர்கள் முன் கூட்டியே தெரிவித்துவிட வேண்டியது. இல்லையெனில் பத்திரிகையை வி. பி. பி. யில் அனுப்ப நேரிடும்.

## குறிப்பு

"கிரஹலக்ஷ்மி" பணசம்பந்தமான கடிதப்போக்கு வரத்துகளும், மணியார்டர்கள், போஸ்டல் ஆர்டர்கள், செக்குகள் முதலியன டாக்டர் கே.என். கேசரி, பிரசுரிப்பவர், தபால் பெட்டி நெ. 752, எழும்பூர், சென்னை என்ற விலாசத்துக்கே எழுதவேண்டும்.

33




# அர்க்கா

## சர்வஜ்வர நிவாரணி

ரோகங்களில் முதன்மையானது ஜ்வரம். பலவித ஜ்வரங்களினால் நாம் தாக்கப்படுகிறோம். வாதஜ்வரம், பித்தஜ்வரம், கபஜ்வரம் முதலிய எல்லா வித ஜ்வரங்களையும் ஆச்சர்யப்படும்படி அர்க்கா நிவர்த்தி செய்யும்.

இந்த அர்க்காவை கடந்த 25 வருஷங்களாய் ரோகிகளும், வைத்தியர்களும் உபயோகித்து இதன் குணாதிசயத்தை நன்கு உணர்ந்து புகழ்ந்திருக்கின்றார்கள். இளங் குழந்தைகளுக்கும் இதைக் கொடுக்கலாம். இன்புளூவென்ஸாவை கண்டிப்பதில் கீர்த்தி பெற்றது.

ஜ்வரம் கண்டவர்களுக்கு இதை எந்த ஸ்திதியிலும் கொடுக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| இதன் விலை 6 அவுன்ஸ் புட்டி | ரூ. 2 | 8 | 0 |
| „ 3 „ | „ 1 | 8 | 0 |
| „ 1 „ | „ 0 | 8 | 0 |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கிராம சௌபாக்கியம் | 149 |
| 2. | சட்டசபைகளில் ஸ்திரீ பிரதிநிதிகளின் கடமை | 151 |
| 3. | ரோஜா — "புஷ்பலீலா" | 155 |
| 4. | உத்தம மனைவி — ஸ்ரீமதி எஸ். கமலா | 157 |
| 5. | ஸ்ரீமதி சரோஜினி — "கண்ணன்" | 160 |
| 6. | சுந்தரி எழுதிய கட்டுரை — ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயம்மாள் | 165 |
| 7. | கவிரவீந்திரரின் பொன் மொழிகள் | 168 |
| 8. | ஹுவாங்ஹியின் கருணை — திரு எம். ராமசாமி | 169 |
| 9. | தமிழ் நாட்டு பெண்மணிகள் — டாக்டர் உ. வே. சாமிநாதஅய்யர் | 172 |
| 10. | சாமள வர்ண புடவை — "ராஜம்" | 175 |
| 11 | கர்ப்பம் — "விநோதினி" | 180 |
| 12. | ரஷியாவில் மாதர்நிலை — திரு. டி. பி. பாண்டியன், எம்.ஏ. | 182 |
| 13. | கீரைகள் — ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி | 187 |
| 14. | மோகனா — திரு. எஸ். அனந்தகிருஷ்ணன் | 189 |
| 15. | செவ்வாயுலகம் — "கலாவதி" | 196 |
| 16. | ஏழைப் பெண் — ஸ்ரீமதி பிரமீளா | 197 |
| 17. | கும்மி — "இனியன்" | 198 |
| 18. | பற்கள் பாதுகாப்பு — டாக்டர் குமரன் | 199 |
| 19. | புனிதவதி — "மைதிலி" | 201 |
| 20. | திருப்பதி — திரு. எஸ். ஆர். வெங்கோபராவ் | 205 |
| 21. | ஆஸ்திரேலியா — ஸ்ரீமதி ராமதிலகம் | 207 |
| 22. | சமையல் — ஸ்ரீமதி சுந்தரி | 211 |
| 23. | விசித்திரம் ஆனால் வாஸ்தவம் | 213 |
| 24. | செய்தித் திரட்டு | 216 |
| 25. | கதம்பம் | 218 |
| 26. | பஞ்சாங்கம் | 219 |
| 27. | பிரசவ அட்டவணை | 220 |


மூவர்ணப்படங்கள்


1. கிராம சௌபாக்யம்
2. ஏழைப்பெண்





டோங்ரேயின்

பாலாமிருதம்

என்றால் என்ன?

1. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளுக்கு மேன்மையான டானிக்.
2. டோங்ரேயின் பாலாமிருதம் குழந்தைகளின் கணச்சூட்டையும், பலஹீனத்தையும் குணப்படுத்தும்.
3. டோங்ரேயின் பாலாமிருதம் எலும்பை வளர்க்கும் சக்தியைக் கொடுக்கிறது.
4. டோங்ரேயின் பாலாமிருதம் ஜீரணசக்திக்கு உதவுகிறது.
5. டோங்ரேயின் பாலாமிருதம் பலத்தைத் தந்து சுகத்தைக் கொடுக்கிறது.
6. டோங்ரேயின் பாலாமிருதம் அநேக நாட்களாய் கஷ்டப்படுத்தும் இருமலையும் சாதா ஜுரத்தையும் போக்கும்.
7. டோங்ரேயின் பாலாமிருதம் தித்திப்பானதால் குழந்தைகளால் சந்தோஷத்துடன் சாப்பிடப்படுகிறது.
8. எவ்விதத்திலும் "டோங்ரேயின் பாலாமிருதமே" வளரும் குழந்தைகளுக்கு சரியானதாக யிருக்கிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

# கிரஹலக்ஷ்மி ஏஜண்டுகள்.

பெங்களூர் : மெஸர்ஸ் ஆனந்தா புக் டிப்போ, கண்டோன்மென்ட்.
திரு. பி. எம். ராமசர்மா, 14, மாடல் ஹவுஸ் தெரு, பசவங்குடி.
சாஸ்திரி ஹோட்டல் அண்டு ரெஸ்டாரன்ட், 89, சிக்பெட், சிடி.

திருப்பதி : மிஸ்டர். அப்துல் அஸீஸ், நியூஸ் ஏஜன்ட்.
மெஸர்ஸ். ஒய். வி. சுப்பையா அன் கோ., மெர்ச்சென்ட்.

சேலம் : திரு. எம். என். கிருஷ்ணமாச்சாரி, 17, மெயின் ரோட்.

திண்டிவனம் : திரு. எஸ். என். கோபாலதேசிகன், சுப்ரமண்யஸ்வாமி கோயில் தெரு.

கடலூர் : மெஸர்ஸ். கமலா அன் கோ., புதுப்பாளையம், நியூடவுன்.

வேலூர் : திரு. கே. சீனிவாசன், சென்ட்ரல் நியூஸ் ஏஜன்ஸி, பெரிய கடைத் தெருவு, கோட்டை.

திருநெல்வேலி டவுன் : திரு. ஆர். வி. பதிராவ், 12, கீழ்ரத வீதி.

தூத்துக்குடி: மெஸர்ஸ். சங்கரன் அன் கோ., நேஷனல் நியூஸ்மார்ட்.

பீமாவரம் : திரு. வி. அச்சுத ராமய்யா, பிராஞ்சு மானேஜர், அஸ்வின் குமார் பார்மஸி.

நிடதவோல் : திரு. கே. ஸி. சென்ன கேசவய்யர், வியாபாரி.

ஹனுமகொண்டா : திரு. கே. அச்சுதானந்தம், ஆனந்த ஆயுர்வேதாஸ்ரமம்.

சென்னை : மெட்ராஸ் நியூஸ் ஏஜன்ஸி, மவுண்டு ரோட்.

கொழும்பு : திரு. ஏ. பாலகிருஷ்ணசாமி, 191,—193, காரிஸ் ரோட்.


ரங்கூன் : திரு. வி. பகவதி சாஸ்திரி, 244, பேர் தெரு.

கோலாலம்பூர் : திரு. பி. சிவகுரு, நியூஸ் ஏஜண்டு, 108, பிரிக்ஸ் பீல்ட்ரோட் F.M.S.


ஹிஜ்ஜின்பாதம் கம்பெனியாரின் புத்தக சாலைகளில் எங்கும் கிடைக்கும்.

இன்னும் எல்லா விடங்களுக்கும் சந்தாதார் சேர்க்கவும், விற்பனை செய்யவும் ஏஜண்டுகள் தேவை. விவரங்களுக்கு எழுதவும்.

**கிரஹலக்ஷ்மி காரியாலயம்,**
தபால் பெட்டி நெ. 752,
**எழும்பூர், : : சென்னை.**



கிராம சௌபாக்கியம்



# கிராம சௌபாக்கியம்

கிராமத்துப் பெண்களைப் பார்த்து பரிகசிப்பது பட்டணவாசிகளுக்கு சகஜமாய்ப் போய்விட்டது. நன்ருக ஆலோசித்துப் பார்த்தால் கிராமங்களே சுவர்க்கம் என்பது புலப்படும். வீடு, வாசல், அன்னவஸ்திராதிகளுக்கு குறைவில்லாதவர்களுக்கு பெண்ணைக் கொடுப்பது முன்பு வழக்கமாக இருந்தது. வீடு, வீட்டை யடுத்து ஒரு தோட்டம், அந்தத் தோட்டத்திலே இரண்டொருவாழை, மாமரம் இவை யிருந்தால் வாழ்க்கைக்குப் போதுமானது.

இந்நாளில் நிலைமை மாறிவிட்டது. நமது முன்னோர்கள் சம்பாதித்துவைத்த நில புலங்களையும், வீடு வாசல்களையும் விற்று விட்டு, வெண்ணெயை உதறி விரலைக்கடிப்பதுபோல் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

கிராமவாசிகளிடத்தில் காணும் அரும் பெருங் குணங்களை நாளா வட்டத்தில் கைவிட்டு "நாகரிகம், நாகரிகம்," என்ற ஒரு சக்கையை சரக்காக மதித்து, மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களை அவைகளின் உண்மைத் தன்மையை உணராமல், நம் நாட்டுக்கும், நம் சமூக மத முறைகளுக்கும் அவைகள் பொருந்துமா வெனப் பாராமல், கைக்கொண்டு அநேக குடும்பங்கள் பரிதவிக்கின்றனர். கிராம வாழ்க்கையை வெகு கேவலமாக நினைக்கும் ஒரு வித துர்எண்ணம் நம் நாட்டு மக்களில் அநேகரிடை ஏற்பட்டுள்ளது. அது ஒழிய வேண்டும். கிராமத்தில் கிடைக்கும் சுத்தமான ஆகார பதார்த்தங்கள் நகரங்களில் எவ்வளவு பணம் போட்டாலும் கிடைக்காது. பசும்புல் தின்று, பருத்தி விதை உண்ட மாட்டின் தீம்பால் நகரத்தாருக்குக் கிடைக்குமா? புத்தம்

புதிய ருசிமிகு காய்கறிகள் அகப்படுமா? அரிசி அரிசியாக வாசனை கமழும் நெய் கிடைக்குமா? ஆடை ஆடையாக கத்தி கொண்டு வெட்டக்கூடிய தயிர் கிடைக்குமா? கிராமத்தில் இவைகளை நாம் எதேஷ்டமாகக் குறைந்த விலைக்குப் பெறலாம். கிராம மக்களுக்கு அவ்வளவு சூதுவாது தெரியாது. தருமநியாயத்துக்கு அஞ்சி நடப்பார்கள். தூய காற்றும், பரந்த வெளிகளும் நிறைந்து கிடைக்கும். அசுத்த ஆகாயத்தை சுவாசிக்கவே வேண்டியதில்லை. அத்தகைய கிராமவாழ்க்கையை ஒருவரும் அலக்ஷியம் செய்யலாகாது.

அதோ பால்கறக்கும் அப்பெண்ணைப் பாருங்கள். அருகிலிருப்பது பால்குடம். அந்தப் பசுவைப்போல் ஒரு காமதேனு, ஒரு வருஷத்திற்கு வேண்டிய தான்யங்கள், விறகு, வைக்கோல் எல்லாவற்றையும் அவள் சேர்த்துவைப்பாள். அப்பளாம், வடாம், அவல், ஊறுகாய் முதலானவற்றையும் எப்பொழுதும் சித்தமாக வைத்திருப்பாள். கொஞ்சம் பணத்தையும் கொடுத்து வாங்குகிறாள். சொன்ன வார்த்தை தவறுவதில்லை. அந்த ஊர் கர்ணம் முதல்தாலூகா தாசில்தார்வரையில் எல்லா உத்தியோகஸ்தர்களும் ஒரு முறையாவது அவள் வீட்டில் போஜனம் செய்திருப்பார்கள். அவளுடைய கணவன் பிரதிதினமும் புராண காலக்ஷேபம் செய்யப் போகிறான். என்னவென்று சொல்வது? அவளுடைய யோக்யதை, சௌபாக்கியம், மனதில் திருப்தி முதலியன மெச்சத்தக்கன. வேலை செய்வதில் சலிப்பே கிடையாது. அவசியம் நேர்ந்தால் தானே மரத்திலேறி விறகு வெட்டிக்கொள்ளுவாள். கணவனில்லாத போது வீட்டுக் காரியங்களை தானே கவனித்துக் கொள்ளுவாள்.

அவளுடைய அழகைப் பாருங்கள். என்ன குறைந்து போயிற்று? அவள் அணிந்திருக்கும் புடவை சீமைப்புடவையல்ல! அந்தவூரில் தயாரித்தநூல், தயாரித்தபுடவை. அவளது உடலில் நகைகள் கொஞ்சமாக விருந்தபோதிலும் அவையனைத்தும் தங்கம். அந்தக் குடும்பத்தில் கடன் கிடையாது.

கிராமங்களில் உள்ள கட்டுப்பாடு உங்களுக்குத் தெரியுமா? ஒருவனுக்கு கஷ்டம்வந்தால் பத்துப்பேர் சேர்ந்து அதைப் பங்கிட்டுக் கொள்ளுவார்கள். சிறியோர், பெரியோர் என்ற தாரதம்மியம், நல்ல சுமுகமானவார்த்தை இவையெல்லாம் கிராமங்களில் தான் காணப்படுகின்றன. கிராமப் பெண்களே அதிக சுகமானவர்கள்; தெய்வபக்தி யுள்ளவர்கள்.

படத்தில் காணப்படுகின்றவள் நிஜமான 'கிரஹலக்ஷ்மி', நிர்மலமான மனதை யுடையவள். பாக்கியம் என்பது அவள்பெயர். கோமாதாவான பசுவைப் போல் அவளும் ஒரு நல்ல ஆத்மா. இவள் இப்படி யிருப்பானேன்? இது சுகமா, இல்லையா? இதைப் பிறர் சொல்லுவானேன்? நீங்களே ஆலோசித்துக் கொள்ளுங்கள்.



# சட்டசபைகளில் ஸ்திரீ பிரதிநிதிகளின் கடமை

தேசமெங்கும் மாகாண சட்டசபைத் தேர்தல்கள் முடிவடைந்து விட்டன. நம் மாகாணத்திலும் முடிந்து விட்டது. புதிய அரசியலில் மாகாண சம்பந்தப்பட்ட அம்சங்கள் இவ்வருஷம் ஏப்ரல் மாதம் 1உயிலிருந்து அமுலுக்கு வரப் போகின்றன. நடைபெற்ற தேர்தலில் ஸ்திரீகளுக்கென ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்தானங்களுக்கு எல்லாவிடங்களிலும் காங்கிரஸ் மகாசபையின் சார்பாக அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டார்கள். ஸ்திரீ தேசசேவகிகள் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டு தங்கள் ஸ்தாபனத்தின் கௌரவத்தையும் காப்பாற்றி விட்டார்கள். காங்கிரஸ் கட்சியினரால் நிறுத்தப்பட்ட எல்லா அபேட்சகர்களும் பெருவாரியான ஓட்டுகளைப் பெற்றுத் தேர்ந்து எடுக்கப்பட்டனர். பொதுவாக ஸ்திரீகளுக்கு இப்பொழுது தேசம் இருக்கும் நிலையில் ஒரு தனிப்பட்ட கட்சியுடன் தங்களை ஐக்கியப் படுத்திக் கொள்வது அவ்வளவு நன்மையல்ல வென்றாலும், காங்கிரஸ்கட்சியானது சமூக சீர்திருத்த விஷயங்களிலும் முற்போக்கான கொள்கையைத் தழுவியே வந்திருப்பதனால் மாதர்கள் அச்சபையின் சார்பாக அபேட்சகர்களாக நின்று கடனுற்ற முன்வந்தது பற்றி ஆச்சர்யப் படுவதற்கு ஒன்றுமில்லை.

ஆனால் இச்சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் மாகாணத் தலைவர்கள் ஸ்திரீ பிரதிநிதித்துவத்தில் அசட்டையாக விருந்துவிட்டார்கள் என்று நாம் எடுத்துக் காட்ட வேண்டியதற்கு மிகவும் வருந்துகிறோம். சர்க்கார் ஸ்திரீகளுக்குத் தனியாக ஒதுக்கி வைத்த ஸ்தானங்கள் வெகு சொற்பம் என்பதை எந்த சீர்திருத்தவாதியும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. மத்திய சபையைப்பற்றி நாம் இப்பொழுது கவனிக்கவேண்டியதில்லை. மாகாணசபைகளில் எல்லா சபைகளிலும் மாதர்கள் பிரதிநிதித்துவம் அளிக்கப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் எங்கெந்த மாகாணங்களில் இருசபைகள் இருக்கின்றனவோ அவ்விடங்களில் ஜனப்பிரதிநிதி சபையில் மட்டும் தான் ஸ்திரீகளுக்குக் குறிப்பிட்ட ஸ்தானங்கள் ஒதுக்கப் பட்டிருக்கிறதே தவிர உயர்தர சபையில் அவர்களுக்கு பிரத்தியேகப் பிரதிநிதித்துவம் அளிக்கப் படவில்லை என்பதையும் நாம் இங்கு ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டி யிருக்கிறது.

மேலும் காங்கிரஸ் மகாசபையின் இன்றைய உன்னத ஸ்தானத்திற்குக் காரணம் ஸ்திரீகளின் ஒப்பற்ற தியாகமும் ஒன்று என்பதை எந்த காங்கிரஸ் வாதியும் மறுக்க முடியாது. தவிர காங்கிரஸ் தலைவர் தன் கடமையை உணர்ந்து எல்லா மாகாண பார்லிமெண்டு போர்டாரும் ஸ்திரீகளுக்காக ஒதுக்கப்பட்ட ஸ்தானங்கள் தவிர வேறு பொதுத் தொகுதிகளிலும்

ஏராளமாக ஸ்திரீ அபேட்சகர்களை நிறுத்தி அவர்களை கௌரவிக்க வேண்டுமென்று ஒரு சுற்றறிக்கையும் வெளியிட்டிருந்தார். ஸ்திரீகளின் கௌரவத்தையும் கண்ணியத்தையும், தியாகத்தையும் உணர்ந்த ஜவஹர்லாலுக்கு நாம் நன்றி செலுத்துகின்றோம். ஆனால் அவரது சுற்றறிக்கையை காங்கிரஸ் நிர்வாகிகள் புறக்கணித்து விட்டார்கள். பொது தொகுதிகளிலும், உயர்தரசபைகளிலும் அவர்களுக்குப் போதியஸ்தானங்கள் கிடைக்கும் வரையில் ஸ்திரீ அபேட்சகர்கள் காங்கிரஸ் கட்சியினரால் மாகாணங்களில் நிறுத்திவைக்கப்படாதது மிகவும் வருந்தத்தக்கது. மொத்தமே சர்க்காரால் ஒதுக்கிவைக்கப்பட்ட ஸ்திரீகள் ஸ்தானம் வெகு குறைவு. சென்னை மாகாணத்தில் அசெம்பிளி (ஜனப்பிரதிநிதிசபை) யின் மொத்த அங்கத்தினர்கள் 215. மாதர்களுக்கு எட்டு ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பம்பாயில் ஆறு ஸ்தானங்கள்; வங்காளத்தில் ஐந்து; ஐக்கியமாகாணத்தில் ஆறு; பாஞ்சாலத்தில் நான்கு; பீஹாரிலும் நான்குதான்; மத்தியமாகாணத்தில் மூன்று; ஒரிஸா சிந்து மாகாணங்களில் இரண்டு, இரண்டு ஸ்தானங்கள்; அஸாம் மாகாணத்தில் ஒரு ஸ்தானம் தான். ஆகமொத்தம் சுமார் 41 ஸ்தானங்களே. இந்திய ஸ்திரீகளின் ஜனத்தொகையையும், அவர்களின் முக்கியத்தையும் ஒப்பிட்டுப்பார்க்குங்கால் இது மிகக்குறைவு. வேறு சில பொதுத்தொகுதிகளிலும் ஸ்திரீகள் போட்டி போட்டு உயர்தர சபையிலும் ஜனபிரதிநிதி சபையிலும் சில ஸ்தானங்களை கைப்பற்றியிருக்கிறார்களென்பது உண்மையே. தேர்ந்தெடுக்கப்பட்ட எல்லா ஸ்திரீ பிரதிநிதிகட்கும் எங்கள் மனமார்ந்த சந்தோஷத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இனி என் செய்வது என்பது பற்றி சற்று ஆராய்வோம். மந்திரி சபையைக் காங்கிரஸ் கட்சியினர் ஏற்று நடத்துவதா அல்லவா என்ற பிரச்சினை கூடிய விரைவில் முடிவுசெய்யப்பட்டுவிடும். பொதுவாக நாட்டிலிருந்து வரும் அபிப்பிராயத்தைப்பார்க்குங்கால் பதவி யேற்புக்குப் பேராதரவு உள்ளதென்றே கூறலாம். நாமும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் பதவி யேற்றுக் கொள்ளுவதெனவே முடிவுசெய்வார்களென்று நம்புகிறோம். அப்பொழுதாவது தேர்தலில் ஸ்திரீகளுக்குச் செய்யவேண்டிய கடமையை ஏதோ சில காரணங்களுக்காக செய்யஇயலாது போன மாகாணத்தலைவர்கள் ஸ்திரீகளின் உரிமைகளையும், நலன்களையும் மனதில் வைத்து, ஒவ்வொரு மாகாணத்திலும் மந்திரி சபையில் அவர்களுக்கு ஒருஸ்தானமாவது அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். மந்திரிகளின் எண்ணிக்கை எவ்வளவு குறைவாக இருந்தபோதிலும், அந்தந்த மாகாணங்களின் சட்டசபைகளில் ஸ்திரீகளின் எண்ணிக்கை எத்தனையாகவிருந்தபோதிலும், ஒரு மந்திரி ஸ்தானமாவது மாதருக்கு அளிக்க வேண்டியது அந்த மாகாணத்தில் மந்திரி சபை அமைக்கும் அரசியல் கட்சியின் கடமையென்பதை நாம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தங்களுக்கெனத் தனித் தொகுதியோ, தனிப்பிரதிநிதித்துவமோ, வேறு இதர சலுகைகளோ சர்க்காரிடம் கேட்கமறுத்து, தேச மகாஜனங்களிடம் நம்பிக்கைகொண்டு, தேச முன்னேற்றம்





தங்கள் முன்னேற்றம் என்று கூறிய தம் சகோதரிகளின் நம்பிக்கையை தலைவர்கள் உதாசீனம் செய்ய மாட்டார்களென்று நாம் நினைக்கிறோம். சிறப்பாக நம் மாகாணத்தில் மந்திரிஸ்தானங்கள் எட்டு. அவற்றுள் ஒன்றாவது தகுந்த மாதுசிரோன்மணிக்குக் கொடுத்து, முற்போக்கான காரியங்களில் நாம் முன்னணியில் இருக்கின்றோம் என்ற நற்கியாதியை நழுவவிடாமலிருக்க வேண்டியது நம்மாகாணக் காங்கிரஸ் கட்சியாரின் மகத்தான பொறுப்பாகும். முதல் ஸ்திரீ சட்டசபை அங்கத்தினர் நம் சட்டசபையில்தான் அமர்ந்தார். ஸ்திரீ சட்டசபை உப அக்கிராசனரைப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கும் பாக்கியமும் நமக்குதான் கிடைத்தது. அதுபோல முதல் ஸ்திரீ மந்திரியை நியமிக்கும் பெருமையையும் நாமே அடைவோமாக. பொதுவாக எந்த இலாகவையும் நிர்வகித்துத் திறமையுடன் நடத்தும் வல்லமையும், சாதுர்யமும், சாமர்த்தியமும் நம் தேசத்து ஸ்திரீகளிடத்திலுள்ளது. அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்காத குறைதான். குறிப்பாக அவர்களிடம் கல்வி இலாகா சுகாதாரம், தொழிலாளர் தேவைகள், சமூக முன்னேற்றத்துக்கான இதர இலாகாக்களை ஒப்புவிப்பது மிகவும் நன்மையாகவிருக்கும்.

இப்பொழுது சட்டசபைகளில் ஸ்தானம் வகித்து வரும் சகோதரிகளின் கடமை யாது? தங்கள் சகோதரிகளின் நிலைமையை அவர்கள் யாவரும் முற்றும் உணர்ந்திருக்கிறார்கள். அவர்களின் தேவைகள் எண்ணற்கரியவை. ஏதோ புதிய அரசியலில் குறைபாடுகளிருந்தபோதிலும் சில நல்ல அம்சங்களும் இல்லாது போய்விடவில்லை. அவற்றின் உதவியால், சமய சந்தர்ப்பங்களும் சரியாகவிருந்தால் கீழ்கண்ட விஷயங்களில் நம் மாதர் பிரதிநிதிகள் தங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாதர்களின் தாழ்நிலைக்குக்காரணம் அவர்களின் அறியாமையே. அந்த இருளில் அவர்கள் அகப்பட்டுக்கொண்டு தங்களுக்கு நன்மை எது, தீமை எது என்று கூடத்தெரியாமல் தத்தளித்து நிற்கிறார்கள். எழுதப்படிக்கத்தெரிந்த ஸ்திரீகள் 100க்கு இருவர்கூட இல்லாமலிருப்பது தங்களுக்கு எவ்வளவு கேவலம் என்பது சகோதரப்பிரதிநிதிகளுக்கு நன்கு தெரியும். கட்டாய இலவச ஆரம்பக்கல்வி பள்ளிக்குப் போகக்கூடிய எல்லாச் சிறுமிகளுக்கும் அளிக்கவேண்டிய திட்டங்களையும், வசதிகளையும், சர்க்கார் நிறைவேற்றிவைக்கவேண்டி மாதர் பிரதிநிதிகள் இடையறாது போராடவேண்டும். மாதர் உலகத்துக்கு சரஸ்வதிதேவியின் கடாட்சம் பரிபூரணமாகக் கிடைக்கப்பாடு படவேண்டும். கல்வியின் அவசியத்தைப் பற்றி நாம் அதிகம் எழுதத்தேவையில்லை. கல்வியே கண்களாம்; கல்விப்படைத்திலாதார் கண்ணற்ற குருடர்கள் தான். எனவே தங்கள் சகோதரிகள் யாவரும் உண்மைக் கண்களைப் பெறும்படியான ஆக்கவேலையில் ஸ்திரீமுன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொரு பிரதிநிதியும் ஈடுபடவேண்டியது கடமை யாகும்.

சுகாதார விஷயங்களிலும் இப்பொழுது சமூகத்தில் இருந்துவரும் குறைகளை நீக்க முயற்சிக்கவேண்டும். பால்யவிவாகம்,

சிசுமரணம், பிரசவமரணங்கள் இவற்றைக் குறைக்கவேண்டிய முறைகளைக் கையாள சர்க்காரைத் தூண்டவேண்டும். சிசுமரணமும் எண்ணிக்கையில் வருஷா வருஷம் அதிகமாகிக் கொண்டு போகிறது. இவ்விரு கொடுமைகளுக்கும் ஆதிகாரணம் பால்ய விவாஹம். பால்யவிவாஹத்தடை சட்டம் (சாரதாச்சட்டம்) ரொம்பவும் மிதமானது. அதை அவசியமான சீர்திருத்தங்கள் செய்து போதிய பலனைத் தரும்படி மாற்றியமைக்கும் மார்க்கத்தைத்தேடுவது ஸ்திரீ பிரதிநிதிகள் செய்ய வேண்டிய மற்றொரு கைங்கர்யமாகும். அச்சட்டத்தில் மலிந்து கிடைக்கும் குறைகளை அகற்றவேண்டும். சிசுசம்ரட்சணை ஆலயங்கள் அதிகமாக ஆங்காங்கே நிறுவப்பட்டு அவைகளின் பராமரிப்பைக் கவனிக்கவேண்டும். பிரசவ உதவி எல்லா சகோதரிகளுக்கும் கிடைக்கும் வண்ணம் ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும்படி சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

சமூக சீர்திருத்த சம்மந்தப்பட்டவைகளான வரதக்ஷிணைக் கொடுமை, விவாகத்தரகு, விதவாவிவாஹம், கலப்புமணம், சம்பாத்தியம், ஸ்திரீதனம், பரம்பரை பாத்தியதைகள் முதலியவற்றுள் சட்டப்படி ஸ்திரீகளுக்கு இருந்துவரும் குறைபாடுகள் அனந்தம். அவற்றை கவனத்துடன் தெளிவாக ஆராய ஒரு கமிட்டியோ சபையோ ஏற்படுத்தி, அதுபோன்ற விவகாரங்களில் சட்டத்தின் உதவியை எவ்வாறு நாடலாம், இப்பொழுது இருந்து வரும் குறைகளைக்களைய எந்த எந்த அம்சங்களை, எவ்விதம் கால தேச வர்த்தமானங்களைக் கொண்டு திருத்தியமைத்தால் மாதர்களின் முன்னேற்றத்துக்கு நிரந்தர நன்மையாகும் என்று கண்டு, அவ்வித சீர்திருத்தங்களை சட்ட பூர்வமாக நிறைவேற்றி அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். சட்டமோ, மதமோ, சமூக வழக்க பழக்கங்களோ ஸ்திரீகளின் உண்மையான, நியாயமான முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போட முடியாதபடி செய்ய வேண்டியது தங்கள் முக்கிய பணியென்பதை நம் ஸ்திரீபிரதிநிதிகள் நன்ருக உணர்ந்து, அதற்கேற்ப தங்கள் வேலை முறையை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று நாம் அவர்களைகேட்டுக் கொள்ளுகிறோம். அரசியல் புயல் தணிந்திருக்கும் சமயங்களில் இவ்வித ஆக்கவேலைகள் கட்டாயம் நடந்தால் தான் மக்கள் க்ஷேமமடைவார்கள். நாடுநலம் பெறும். நாட்டுக்கும், தங்கள் சகோதரிகளுக்கும் நலன் விளையக்கூடிய நற்காரியங்களைச் செய்து இந்திய மாதர்களின் மேன்மையையும், சிறப்பையும் நிலை நாட்டுவோர்களாக: "சாத்திரங்கள் பல பல கற்று, சௌகர்யங்கள் பல பல செய்து, மூத்த பொய்மைகள் யாவும் அழித்து, மூடக்கட்டுகள் யாவுந்தகர்த்து காத்து மானிடர் செய்கையனைத்தையும் கடவுளர்க்கினிதாகச்சமைத்து ஏத்தி உலகம் போற்றிட வாழ்வராக."



# * ரோஜா *

## "புஷ்பலீலா"

புஷ்பங்களை விரும்பாதவர்கள் இவ்வுலகில் ஒருவருமில்லை. மலர்களின் வசீகர வர்ணங்களையும், வனப்பையும், சுகந்தத்தையும் கண்டு சந்தோஷிக்காத மானிட ஜீவன் ஒன்ருவது இருக்காது என்று திட்டமாகக் கூறலாம். சிலருக்கு ஒருவகையான புஷ்பங்கள் மீதும், மற்றும் பலருக்கு ஒருவிதமான மலர்கள் மீதும் விருப்பமிருக்கலாம். எப்படியும் ஏதாவது ஒரு புஷ்பத்தை விரும்பாத மானிடன் இருக்கமாட்டான். அப்பேர்ப்பட்டவன் முற்றுந்துறந்த முனிவனுக யிருக்கவேண்டும்.

சில மலர்கள் அவைகளின் கந்தத்துக்குப் பேர்போனவைகள். வேறு சில அவைகளின் கண்கவரும் அழகுக்குப் பேர்போனவை. வனப்பும் வாசனையும் ஒருங்கே யமையப் பெற்ற மலர்கள் ஒரு சிலவே. அவைகள் மக்களால் ரொம்பவும் விரும்பப்படுகின்றன. இப்படி சுகந்தமும், அழகிய தோற்றமு முள்ள ஒரு சில மலர்களில் ரோஜா ஒரு நறு மலர். புஷ்பங்களில் அது ராஜாவே. தற்காலம் வாசனைத் திரவியங்கள் செய்வதில் மேல் திசையினரே பேர் பெற்றவர்களாயிருந்த போதிலும் ஆதியில் மலர்களின் உதவியால் சென்ட் முதலியன செய்தவர்கள் கீழ் நாட்டவர்களே. அவர்களே ரோஜா புஷ்பத்தின் அருமையை முதலில் உணர்ந்தார்கள். பிறகு அவற்றின் மதிப்பை அறிந்தவர்கள் க்ரீஸ், ரோம் தேசத்தினர். ரோமர்கள் ரோஜாவை அவர்கள் திராட்சைரச புட்டிகளின் மீது அலங்காரமாக வைப்பார்கள். நாம் ரோஜாவை புஷ்பராஜா வென்று கூறுகிறோம். மேல் திசையினர் புஷ்பராணி யென்றழைக்கின்றனர். ஆண் பெண் இருபாலரும் ரோஜா மலரைக்கண்டு ஆனந்திப்பதைப் போல் மற்றெந்த மலரையும் கண்டு சந்தோஷப்படவில்லை யென்பதில் சந்தேகமில்லை.

### ரோஸ் ஸெண்ட்

ரோஜா வாசனைத் திரவியங்கள் செய்வதைப்பற்றி ஆராய்வோம். ரோஜா மலர் வாசனைத் திரவியங்கள் செய்ய முதன்முதலாக எக்காலத்தில் ஆரம்பமாயிற்று எனச் சொல்ல முடியவில்லை. சிலர் 1582—1612ம் வருஷ மத்தியில் இருக்கலாம் என்று கூறுகிருர்கள். மொகலாயச் சக்கிரவர்த்திகள் காலத்தில் இவ்வித வாசனைத் திரவியங்கள் உபயோகப்பட்டுவந்தன. மகமது ஹக்கீம் போன்ற சரித்திர ஆசிரியர்கள் ரோஜாவின் உதவியினல் செய்யப்படும் வாசனைத் திரவியங்களைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கின்றனர். பாரிஸ் நகரத்திலும், துருக்கியிலும், பல்கேரியாவிலும் ரோஜா வாசனைத் திரவியங்கள் வெகு தேர்ச்சியாக செய்யப்படுகின்றன. ரோஸ் ஸெண்ட் செய்வதில் முதன்மையானது பிரான்சு தேசம், இரண்டாவது பல்கேரியா. ஒவ்வொரு வருஷமும் சுமார் இருபது ஆயிரம் அவுன்சு செண்ட் தயாராகிறது. பல்கேரியாவில் கிராமாந்திரங்களில் தான் ரோஸ்

சென்ட்டுகள் தயார் செய்யப்படுகின்றன. ரோஜாத் தோட்டங்கள் இங்கு வெகு அதிகம். மணல்பாங்கானதும், போதிய சூரிய உஷ்ணமும், தண்ணீரும் உள்ள பூமிகளில் ரோஜா நன்றாக உற்பத்தியாகும். ரோஜா மலர்களை காலை நேரத்திலேயே கொய்து விடவேண்டும்.

வாசனைத் திரவியங்கள் செய்வதற்கு ரோஜாமலர்களை தண்ணீரில் கலந்து போட்டு நன்றாகக் காய்ச்சிப் பின்னர் அந்த சக்கையை எடுத்துவிட்டு, எஞ்சியிருக்கும் நீரையும் வற்றக் காய்ச்சி மிஞ்சியிருக்கும் திராவகத்தைவேறு சிலபொருள்கள் சேர்த்து சென்ட், அத்தர் முதலியனவும், எஸ்ஸென்சை ஆவிநீரில் கலந்து பன்னீரெனவும், போமேட் செய்தும் ஜனங்கள் உபயோகப் படுத்துகிறார்கள். சிலர் டீ வாசனையாக இருப்பதற்கு ரோஜா மலரைச் சேர்க்கிறார்கள். ரோஜா மொக்கைத் துவையல் அரைத்துச் சாப்பிட்டால் அஜீர்ணம், உஷ்ணம் முதலியவைகளுக்கு நல்லது. குல்கந்து எனப்படும் ருசியான பதார்த்தமும் ரோஜாமலரினாலேயே செய்யப்படுகிறது. இது சீதபேதி முதலிய வியாதிகளைப்போக்கும்.

நல்ல செழிப்பான பூமியில் ஒரு ஏக்கருக்கு சுமார் நூறு பவுண்டு எடையுள்ள ரோஜா மலர்கள் தினசரி கிடைக்கும். செந்நிற ரோஜாவுக்கு பிரசித்தி பெற்றது பல்கேரியா தேசம். ரோஜாவில் பலவிதக் கலர்களுள்ளன. மஞ்சள், வெள்ளை, செகப்பு, கறுப்பு முதலியன. சுத்தமான ரோஸ் சென்ட் மஞ்சள் நிறமாக விருக்கும். வெள்ளை ரோஜாவால் செய்யப்படும் சென்டுக்கும் செகப்புநிற ரோஜாவால் செய்யப்பட்ட சென்டுக்கும் வித்தியாசம் நன்றாய்த் தெரியும். ரோஸ் அத்தர், பன்னீர், சென்ட், போமேட் எல்லாமே நன்மையானவைகள்.





# உத்தம மனைவி

ஸ்ரீமதி எஸ். கமலா

ஸ்திரீ தன் கணவனை திருப்தி செய்வது கஷ்டமென்று நினைக்கக் கூடாது. சிறிது கவலையும் கவனமும் எடுத்து எது நம் கணவனுக்கு மனதுக் குகந்ததோ அதைச் செய்ய முன் வந்தால் நாமே இல்லத்தை ஆளுவோம். அந்த சக்தி நம் கையில் தான் இருக்கிறது என்று நான் திடமாகக் கூறுவேன். முக்கியமாக ஒரு உத்தம மனைவிக்கு ஆறுகுணங்களிருந்தால் அவள் கணவன் அவளை எக்காரணத்தாலும் நிந்தை செய்யமாட்டான். அவ்வாறு குணங்களைப் பற்றியும் நம் மூதாதையர் கூறியிருக்கிறார்கள். புருஷனிடத்து "அன்னைதயையும், அடியாள் பணிவும், பொன்னின் பொலிவும், புவி பொறையும், வன்னமுலை வேசைதுயிலும், விறன் மந்திரிமதியும், பேசில் இவையுடையாள் பெண்" என்றபடி நடந்து கொள்ளும் ஸ்திரீயே உத்தம குணசீலி. அவ்வாறு நடக்கும் ஒரு குணவதி "பெய்யெனப் பெய்யும் மழை" என்று பொய்யா மொழிப்புலவர் திருவள்ளுவ நாயனார் தன் திருக்குறளில் கூறியிருப்பது மணிவாசகமே. மேற் கூறிய குணங்களைப்பற்றிச் சிறிது விரித்துரைக்கலாம்.

முதலாவது "அன்னைதயை" எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது பெற்ற தாயைவிடத் தன் குழவியிடத்தில் அன்பும், பக்ஷமும் காட்டுபவர் உலகில் வேறு யாருமிலர். அதேபோல் ஒரு மங்கையும் தன் புருஷனிடத்தில் சிரத்தைகாட்டி அவர் பராமரிப்பை கவனமாகச் செய்ய வேண்டும். அவர் விரும்பும் உணவு பதார்த்தங்களை பக்குவமாகத் தயார் செய்து அன்புடன் உண்ணும்படி செய்ய வேண்டும். "தாயோடறுசுவைபோம்" என்ற முதுமொழியை பொய்யாக்க வேண்டியது மனைவியின் கடமை. பாக சாஸ்திரத்தைக் கற்றுத்தெளிந்து, முகம் கோணாமல், மலர்ந்த மதி முகத்துடன் கணவனுக்கு நல்லுணவு அளித்தல்வேண்டும். வருவாய்க்குத் தக்கபடி குடும்ப நிர்வாகத்தை சாமர்த்தியமாக நடத்தி கடன் என்னும் படுகுழியில் தன் கணவன் வீழாமல் பார்த்துக் காப்பது பத்தினியின் பான்மை. கணவன் வீடுவந்தால் மனச்சாந்தியும், குதூகலமும்பெற மனையாள் தான் காரணமாக விருக்கவேண்டும். கணவனால் இயலாத காரியங்களைச் செய்து தரும்படி வற்புறுத்துதல் குடும்ப வளர்ச்சிக்கு பங்கமும், தம்பதிகளின் வாழ்க்கையில் சிக்கலும்தான் விளைவிக்கும். படித்த பெண்கள்தான் இவ்வாறு செய்ய முடியும். படிப்பு என்றால் ஆங்கிலப்படிப்புத்தான் என்று நான் கூறவில்லை. நன்னடக்கையையும், நற்செய்கையும் வளர்க்கும் எக்கல்வியும் கல்விதான்.

"அடியாள் பணி" என்பதாவது தன் கொழுநனின் தேவைகளைக் குறிப்பால் உணர்ந்து அதையும் பணிவுடன் செய்தல் என்பதாம். ஒரு அடிமை தன் யஜமானன் இடும் கட்டளைகளை எவ்வளவு பணிவுடன் செய்வானோ அவ்வளவு பணிவு கணவனின் கட்டளைகளுக்கு மனைவி காட்டி நடத்தல் அவசியம். அதனால் கணவனுக்கு மனைவி அடிமையென்று

நான் கூறவில்லை. அப்படி நினைக்கும் புருஷனும் புத்திசாலியென்று யாரும் நினைக்கமுடியாது. தாயார் குழந்தையின் மலத்தை எடுத்தால் அவள் குப்பைக்காரி ஆகிவிடுவாளா? மாட்டாள். அதே போல் தன்னுயிருக்குயிரான காதலனின் சேவையை அடிமையைப்போல் செய்வதில் இன்பம் காணலாமே தவிர துன்பம் சற்றும் தோன்றாது. தான் விரும்பி மணந்த மணாளன் அவளை நிச்சயம் போற்றிப் புகழ்வான். இது விஷயத்திலும் "படித்த பெண்கள் குடித்தனத்துக்கு லாயக்கில்லை" என்று ஒரு வித தப்பபிப்பிராயம் இருந்து வருகிறது. அது தவறு. இல்லாள் குடும்பகாரியம் முழுவதும் கணவர் சொல்லாமலே செய்யும் குணவதியாய் இருக்கவேண்டும்.

"பொன்னின் பொலிவு" என்றதனால் பொன்போன்ற தேஜசும் குணமும் இருக்க வேண்டும் என்பது அர்த்தமல்ல. 'பொன்னின் பொலிவு' என்பது வெறும் தேகத்தின் அழகைமட்டும் குறிப்பிடுவதன்று. அழகு இயற்கையாய் ஏற்படுவது தான். அகம் அழகாகவே யிருக்கவேண்டும். குண அழகுதான் குறிப்பிடப் படுகிறது. அழகு இயற்கையாக அமையப் பெறாதவர்களும் தாங்கள் நடந்துகொள்ளும் தன்மையால் பொலிவு பெறுகின்றார்கள். தங்களிடம் உள்ள சுத்த ஆடைகளால் அலங்கரித்துக்கொண்டு, ஸ்நானம் செய்து, நெற்றியில் குங்குமமோ, சாந்துப் பொட்டோ இட்டு அமைதியுடன் இருப்பவர்களுக்கு அழகும் லக்ஷ்மீகரமும் தானாகவே உண்டாகும். தானிருக்கும் சுத்த ஆசார நியதிகளைக் கண்டு கணவன் வியந்து தன் மனைவியை பக்ஷமாக நடத்தவேண்டும்.

"புவி பொறை" என்பதிலிருந்து பொறுமைக்குப் பேர்போனவள் பூமா தேவி எனத் தெரிகிறது. பூதேவி எவ்வளவு கஷ்டங்களிலும், நஷ்டங்களிலும் தன் பொறுமையை இழக்க மாட்டாளாம். அதுபோல் இல்லக் கிழத்தியும் எவ்வித நிலையிலும் தன் நிதானத்தை யிழக்கக் கூடாது. "ஆண்டவன் காப்பான்" என்று மனச் சாந்தியுடன் வாழ்க்கையை நடத்த வேண்டும்.

"வேசை துயிலும்" என்றபடி கணவனுக்கு அவன் விரும்பும் சுகத்தை அவ்வித லீலைகளுக்குப் பேர்போன தாசிகளைப் போல் அளிக்கவேண்டும். கணவன் அவளை விட்டுப் பிரிவதென்றால் வருந்துமாறு அவ்வளவு இன்பத்தை அவன் நுகரும்படி மனையாள் நடந்து கொள்ளல் அவசியம். இவ்வாறு மனைவி இருப்பாளாகில் எவ்வித கொடூர புருஷனும் அவள் அன்புவலையில் சிக்குண்டு அப்பாசத்தால் நிச்சயம் கட்டுண்டு கிடப்பான். தம்பதிகள் இல்லறம் நல்லறமாக விளங்கும். அவர்களைப் பிணைத்திருக்கும் அன்புத்தளை இலகுவில் அறுபடாது.

கடைசியாக "விறல் மந்திரிமதி" என்றதற் கிணங்க குடும்பவிஷயங்களில் எல்லாவற்றிலும் புருஷனுக்கு உற்ற தோழனாகவிருந்து, நல்லமந்திரியைப்போல் தகுந்த யோசனைகளையும், புத்திமதிகளையும் அப்போதைக் கப்போது எடுத்துச்சொல்ல வேண்டும். கணவனுக்கு விதிவசத்தாலோ வேறு காரணங்களாலோ கெடுமதி தோன்றுங்கால் நன்னெறியை அவனுக்கு அன்புடனும் ஆதரவுடனும் எடுத்துக் காட்டவேண்டும்.





மேற்கூறிய தூயகுணங்கள் உள்ள பெண் கட்டாயம் கல்வி கற்றவளாக விருக்கவேண்டும். நான் மனைவியின் குணங்களை விளக்கியதினின்றும் சீர்திருத்தவாதிகள் கலங்கவேண்டாம். கணவனும் மனைவியின் கடமைகளை யுணர்ந்து ஒரு வண்டியில் கட்டிய இருமாடுகளைப்போல் குடும்பமாகிய வண்டிநேரே போவதற்குத் தன் மனைவியுடன் ஒத்துழைக்க பிரயாசைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அவருடைய கடமை. மனமொத்த வாழ்க்கையே இன்ப வாழ்க்கையாம். சதிபதிகள் இவ்வாறு இருப்பதற்கு அடிப்படையானது இருவரும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் மணம் செய்து கொள்ளுமுன்னரே காதலித் திருக்கவேண்டும். காதல் பந்தத்தில் ஈடுபட்டு மணம் செய்து கொண்டமணமக்கள் மேற்கூறிய குணங்களைக்கைப்பிடித்து நடப்பதில் சிரமம் இருக்காது. பொருத்தமற்ற மணம் நடந்தால் ஒரு நங்கை இவ்வித குணங்களைப் பெற்று நடப்பது சற்றுக் கஷ்டமானதென்பது வாஸ்தவம் தான். ஆகையால் அவ்விதமான விவாஹங்கள் நடைபெறாதபடி பார்த்துக் கொள்ளல் தாய்தந்தையரின் பொறுப்பாகும். "ஸ்திரீ சுதந்ரம்" என்பது கட்டுக்கடங்காததல்லவென்பதையும் நான் கூறி முடித்துக் கொள்ளுகிறேன். வாழ்க பெண்மை, வாழ்க இல்லறம்.

# ஸ்ரீமதி சரோஜினி

"கண்ணன்"

இன்று இந்திய மாதர்களில் தலைசிறந்து விளங்குபவர் சரோஜினி தேவியார் என்பது யாவரும் உணர்ந்ததே. அவரது புகழ் நம்நாட்டிலு மன்றி உலகம் பூராவும் பரவி யிருக்கிறது. சர்வதேசச் சிறப்பும், மதிப்பும், கௌரவமும் வாய்ந்த இந்திய ஸ்திரீகளுள் ஸ்ரீமதி சரோஜினி முதன்மை ஸ்தானம் வகித்து வருகிறார். அவர்களது தியாகத்தையும், தேச சேவையையும், வாக்குச் சாதுர்யத்தையும், கல்வித்திறமையையும் கண்டு களிக்க நமக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்ததற்கு ஆண்டவனுக்கு நம் நன்றியைச் செலுத்துகிறோம். பாரத அன்னை ஈன்று எடுத்த தவப்புதல்விகளில் சரோஜினிதேவி ஓர் புனித ரத்தினம். அவரது சரித்திரத்தைக் கீழே சுருக்கமாக எழுதுகிறேன்.

## பால்யம்

ஸ்ரீமதி சரோஜினி 1879-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 13ந் தேதி ஹைதராபாதில் பிறந்தார். இவர்தான் மூத்த குழந்தை. இவரது தந்தையின் பெயர் டாக்டர் அகோரநாத் சடோபாத்யாயா. அவர் வங்காளத்தைச் சார்ந்த பிராமணர். ஆனால் அவர் தன் உத்தியோகத்தின் நிமித்தமாக ஹைதராபாத்துக்கு வந்து சேர்ந்தார். அந்நகரையே தன் சொந்த ஊராகப் பாவித்து விட்டார். எனவே அவ்விடத்திலேயே நிரந்தரமாகக் குடியிருந்து வந்தார். அகோரநாதர் கல்விமான். பல வித்தைகளிலும் நூல்களிலும் பாண்டித்யம் பெற்றவர். தருமசிந்தனை மிக்கவர். ஏராளமாக ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார். ரசவாதம் செய்வதையும் கற்றுக் கொண்டார். தருமம் செய்வதிலும், ரசவாதம் செய்வதிலும் பொருளை விரயம் செய்தார். தன் பொருள் நஷ்டங்களை மறந்திருப்பதற்காக நல்ல புஸ்தகங்களையும் இலக்கியங்களையும் படித்து ஆராய்ச்சி செய்துவந்தார். அவரும் வங்காளி பாஷையில் அநேக கவிதைகள் இயற்றினார். அப்பாக்களை வாங்காளிகள் மனமுவந்து படித்துப் பாடி மகிழ்ந்தனர்.


"விரையொன்று போட்டால், சுரையொன்று முளைக்குமா?" வென்ற பழமொழிக் கேற்ப கவிதாவன்மை மிகுந்த அகோரநாதருக்குத் தலைக் குழந்தையாக ஸ்ரீமதி சரோஜினி அவதாரம் செய்தது ஆச்சர்யமல்லவே. குழந்தை சரோஜினி வெகு அழகாகவும் தீட்சண்யமுள்ளவளாகவும் இருந்தாள். தாய் தந்தையருக்கு அவர்மீது அளவிலா அன்பு.

## கல்வி


"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்றபடி சரோஜினியின் பெருமையும், மேன்மையும் இளமையிலேயே தெரிந்தன. கல்வி கற்பதில் வெகு ஆர்வமும் சிரத்தையும் காட்டினார். தனது பன்னிரண்டாவது வயதிலேயே சென்னை சர்வகலாசாலையில் மெட்ரிகுலேஷன் பரீட்சை பாஸ் செய்துவிட்டாரென்றால் அவரது சாமர்த்தியத்தைப் பற்றி அதிகம் சொல்



ஸ்ரீமதி சரோஜினி.



ஜான்ஸியில் காங்கிரஸ் தேர்தல் பிரசாரம்.



பம்பாய் தேர்தலில் முஸ்லீம் ஸ்திரீகளின் ஊக்கம்.



லத் தேவையில்லை. அக்காலத்திய சீர்திருத்தக்காரர்களும் இதரர்களும் சரோஜினியின் கல்வித் திறமையைக் கண்டு ரொம்பவும் ஆச்சர்ய மடைந்தார்கள். தவிரவும் தனது இளவயதிலேயே தானுகவே கவிகள் இயற்றும் சாமர்த்தியத்தையும் அடைந்தாள். அதிலும் ஆங்கில பாஷையில் பாட்டுக்கள் எழுதும் சக்தி அவருக்கு விரைவிலேயே ஏற்பட்டது.

தான் மெட்ரிகுலேஷன் பாஸ் செய்த உடனேயே இங்கிலாந்து சென்று தன் தந்தையைப் போல் உயர்தரக் கல்விபயில வேண்டுமென்று சரோஜினிக்கு அவா வேற்பட்டது. அகோரநாதரும் மூட வைதிகக் கொள்கைகளை தகர்த்து எறிய வேண்டுமென்று கருதினவர்தான். அவ்வாறே தன் வாழ்க்கையையும் நடத்தி வந்தார். ஸ்திரீயை வெளிநாட்டுக்கு மணமாகுமுன் அனுப்புவது உசிதமல்லவென்று பலர் சொன்னதை தந்தை சற்றும் பொருட்படுத்தவில்லை. ஆனால் 12 வயதுக் குழந்தை எவ்வாறு இங்கிலாந்தில் போய் படிப்பது என்று நினைத்து தன் குமாரியை சிலவருஷங்கள் பொறுக்குமாறு சொன்னார். வயது பதினறு ஆனவுடன் 1895-ம் வருஷம் ஸ்ரீமதி சரோஜினி உயர்தரக் கல்விக்காக லண்டனுக்குச் சென்றார்.

சீமையில் முதலில் அரசர் கல்லூரியில் (King's College) சிலகாலம் உயர்தரப் படிப்பைப் பெற்றார். கலாசாலையில் இவரது அபாரத்திறமையையும், வன்மையையும் கண்டு ஆசிரியர்களும், சகமாணவர்களும் பெரிதும் வியப்பு அடைந்தனர். சரோஜினிக்கு தகுந்த கெளரவம் அவர்கள் அளித்தார்கள். பின்னர் கேம்ப்ரிட்ஜுக்குச் சென்று கிரிட்டன் (Girton) கல்லூரியில் சில வருஷங்கள் கல்விபயின்று வந்தார். அங்கும் அவர் நற்கியாதிபெற்றார். 1898-ம் வருஷம் வரையில் உயர்தரக் கல்விக்காக இங்கிலாந்தி லிருந்தார். பின் அவ்வருஷம் செப்டம்பர் மாதம் புறப்பட்டு இந்தியா வந்து சேர்ந்தார்.

## திருமணம்

கலப்புமணம் செய்வதற்கு வழிகாட்டிகளுள் ஸ்ரீமதி சரோஜினியும் ஒருவராவர். அவர் லண்டனிலிருந்து வந்தவுடன் அவருக்கும் ஹைதராபாத்தில் டாக்டர் தொழில் நடத்திவந்த ஒரு நாயுடு வாலிபருக்கும் நட்புண்டாயிற்று. இருவரும் ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டனர். கேட்கவா வேண்டும் அக்காலத்தில்? பிராமணப் பெண்ணுவது தாழ்ந்த ஜாதியில் பிறந்த நாயுடுவைக் கல்யாணம் செய்து கொள்வதாவது என்றெல்லாம் வைதீகக் குழாங்கள் கூக்குரலிட்டனர். ஆனால் சீர்திருத்த வெள்ளத்தில் மிதந்த சரோஜினிக்கு அவர்கள் மிரட்டல்கள் நகைப்பைத்தான் விளைவித்தன. அவர் ஒப்புக்கொண்ட ஜாதி ஒன்றுதான். அது மானிடஜாதி. அதில் ஜாதிப்பிரிவுகள் சொல்லி, தாழ்வென்றும் மேலென்றும் சொல்லுவது மடத்தனம் என்று மனமார அவர் உணர்ந்தார். டாக்டர் நாயுடுவையே 1898-ம் வருஷம் டிசம்பர் மாதம் மணம் புரிந்து கொண்டார். தம்பதிகளின் இன்ப வாழ்க்கை அன்றுபோல் இன்றும் இன்பமயமாகவே இருந்து வருகிறது. இருவர் மனமும் ஒரு மனமாகவே அவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். டாக்டர் நாயுடு தன் மனைவியின் பொதுச் சேவைகளுக்கு

இடையூறு செய்யாமல் தன்னாலியன்ற உதவியை அளித்து வருகிறார்.

## கவித் திறம்

ஸ்ரீமதி சரோஜினியின் பெயர் முதன் முதலில் பிரசித்திபெற்றது அரசியலுலகில் அல்ல. இலக்கிய உலகில் இப்புதுச்சுடர் முதலில் தன் ஜோதியைக் காட்டிற்று. சுதந்திரநாட்டில் இந்தஜோதி தோன்றியிருந்தால் ஒரு பெரிய கவியரசியாகவே திகழ்ந்திருக்கும். ஆனால் அரசியல் என்ற சுழலிலும் அவர் அடிபட வேண்டியிருக்கிறது. ஸ்ரீமதிசரோஜினி தேவியின் கவித்திறமை தெய்வ வரப்பிரசாதம் என்றே சொல்லவேண்டும். தன் முயற்சியில் அவ்வளவு இளம்பிராயத்தில் அவ்வளவு அழகிய கவிகள் இயற்ற சாமான்யருக்குச் சற்றும் இயலாது. தெய்வ கடாட்சம் என்றே சொல்ல வேண்டும். ஸ்ரீமதி நாயுடு தான் முதலில் எழுதிய பாட்டைபபற்றிக் கூறியிருப்பது ஈண்டு கவனிக்கத் தக்கது:—

"நான் பதினேறு வயதா யிருக்கும் போது 'அல்ஜீப்ரா' பயின்று கொண்டிருக்கையில், அப்பாடத்தைப் பாட்டாகப் பாடினேன். ஒழுங்காகப் பாட்டு வரவில்லை. ஆனால் வேறொருபாட்டு அதற்குப் பதிலாக வந்துவிட்டது. அதைக் காகிதத்தில் எழுதினேன். அதுதான் என் முதல் செய்யுள். அப்பால் பதின்மூன்று வயதில் "பொய்கையின் பெருமகள்" என்ற ஒரு சிறுநூல் எழுதினேன். அது 1300 அடிகளைக் கொண்டது. பிறகு ஒரு நாடகத்தை எழுதினேன். அது இரண்டாயிரம் வரிகளை யுடையது."

ஸ்ரீமதி சரோஜினியின் தாயாரும் பாட்டுகள் இயற்றும் வல்லமையுள்ளவளாகவும், வங்காளிபாஷையில் சில சிறு பாக்களை அவள் எழுதினாள் என்றும் தெரியவருகிறது. எனவே "புலிக்கு பூனைக்குட்டி பிறக்குமா" வென்னும் மொழிக் கிணங்க சரோஜினி தேவியார் கவிதிலகமாக விளங்குவதில ஆச்சர்யம் அதிகமில்லை. அவரியற்றிய பாக்கள் சொற்சுவை, பொருட்சுவை மிகுந்து விளங்குகின்றன.

## வாக்கு சாதுர்யம்

ஸ்ரீமதி நாயுடு எவ்வளவு பெரிய கூட்டத்தில் பேச வெழுந்தாலும் முதலில் அமைதி எங்கும் நிலவும். அமெரிக்காவிலும், இன்னும் இதர மேற்றிசை நாடுகள் பலவற்றிலும் சரோஜினி தேவியாரின் பிரசங்களைக் கேட்க உயர்ந்த கட்டணங்கள் செலுத்தி டிக்கட்டுகள் வாங்கி ஏராளமானவர்கள் கூடுவார்களென்றால் அவர்களின் வாக்கு வன்மையை என்னவென்று சொல்லவும் வேண்டுமா. அவரது குயிலினுமினிய தீங்குரலால் உத்வேகத்துடன் பேசுவது கானம் போன்றிருக்கும். தங்கு தடையின்றி வாக்கியங்கள் மழைபோல் சொறியும். எந்த வூரில் எத்தனைதடவை பேசினாலும் ஒருதரம் சொன்ன திருஷ்டாந்தத்தையே மறுபடியும் கூற மாட்டார்கள். அவரது பிரசங்கம் அறிவு . ஊற்றாகவே தோன்றும். ஸ்ரீமதி சரோஜினிக்கு 'இந்திய கோஹிலம்' என்ற பெயரும் உண்டு. அவர் பிரசங்கத்தை கர்ணாமிர்தமான சங்கீதம் என்றாலும் பொருந்தும். வாக்கியத்துக்கு வாக்கியம் எழும்பியும், தாழ்ந்தும் வரும் ஒருவித இசை கேட்போர் மனதை உற்சாக மூட்டும்.





## பொது சேவை

சரோஜினி தேவியார் சமூகத் தொண்டிலும் மிகுந்த சிரத்தை காட்டி உழைத்திருக்கிறார். இந்தியாவிலுள்ள எல்லா அகில இந்திய ஸ்திரீ ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் பலவழிகளிலும் வேலை செய்து வந்தார். இன்றும் மாதர் முன்னேற்றத்தை மறந்தவரல்லர். ஸ்திரீகள் மஹாநாடுகளில் அநேக தடவைகளில் தலைமை வகித்தும், கலந்து கொண்டும் ஊழியர்களுக்கு உற்சாகத்தையும் ஊக்கத்தையும் அளித்து வருகிறார்.

ஆனால் அவர் உள்ளத்தைக் கவர்ந்து அவர் காலத்தைப் பூராவும் ஆட்கொண்டிருப்பது அரசியலே. இந்தியா சுதந்திரம் அடையவேண்டுமென்று அனவரதமும், அல்லும் பகலும் உழைத்து வருகிறார். தேசபக்தி அவருக்கு இளவயதிலேயே ஏற்பட்டது. காங்கிரஸ் வருஷாந்திர மஹாநாடுகளில் முதன் முதலில் தேசீய கீதம் பாடும் பாக்கியம் சிறுமியாக விருக்கும் பொழுதே ஸ்ரீமதி சரோஜினி தேவியாருக்குக் கிடைத்தது. அதே ஸ்தாபனத்தின் தலைவியாக அமரும் பாக்கியம் பெற்ற ஸ்திரீகள் இருவரில் அவர் ஒருவர். மற்றவர் ஸ்ரீமதி அன்னிபெசன்ட். சரோஜினி தேவியார் காங்கிரஸ் மஹா சபைக்குத் தலைமை வகித்தது 1925ம் வருஷம். அதற்கு முன்னர் அவர் மஹாத்மா காந்தியடிகளின் ஒத்துழையா இயக்ககாலத்திலும், பின்னரும் அரிய தேச சேவை புரிந்து வந்தார். தேச மக்கள் அச்சேவைக்குத் தங்கள் நன்றியறிதலைத் தெரிவிக்கும் வண்ணம் 1925ம் வருஷம் கான்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மகா சபைக்கு சரோஜினி தேவியாரைத் தலைவியாகத் தேர்ந்து எடுத்தார்கள்.

பின்னர் 1930 ம் வருஷம் காந்தியடிகள் உப்புசத்தியாக்ரஹம் ஆரம்பித்துச் சிறை செய்யப்பட்டபின் அந்த இயக்கத்தை தலைமை வகித்து நடத்தி சர்க்காரால் சிறை தண்டனை விதிக்கப்பட்டு தண்டனையைக் குதூகலமாக ஏற்று அனுபவித்தார். காங்கிரஸ் மஹாசபையின் காரியக்கமிட்டியில் அநேக வருஷங்கள் அங்கத்தினராக விருந்து வந்தார். இப்பொழுதும் காரியக்கமிட்டியில் இருந்து வருகிறார். 1931 ம் வருஷம் லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மகா நாட்டுக்கு மஹாத்மா காந்தியடிகளுடன் சென்று தேசீயத்தை யாதரித்து நின்றார். ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடுபட்டு வருபவர்களில் சரோஜினி தேவியும் ஒரு முக்கியஸ்தர். தேச விடுதலையில் அவருக்கிருக்கும் ஆர்வம் அளவு கடந்தது. காங்கிரஸ் மகா சபையின் தூண் போன்றவர்களில் ஸ்ரீமதி சரோஜினியும் ஒருவராவர்.

## குடும்பம்

ஸ்ரீமதி நாயுடுவுக்கு நான்கு குழந்தைகள். ஒருவர் பெயர் ஜயசூர்யா. இவரும் பிரபல அரசியல் வாதியே. இவர் அபேதவாதி. இவர் சில வருஷங்கள் ஜெர்மனியில் அபேதவாதக் கிளர்ச்சிகள் செய்து வந்தார். ஹிட்லர் ஆதிக்கம் வந்தவுடன் இவர் நாஜியர் காவர்கூடத்து அடைக்கப்பட்டு பெரும் கிளர்ச்சியின் பேரில் விடுதலை பெற்றார். அடுத்தவர் பத்மஜா என்னும் குமாரி. இவரும்

ஸௌ. ராஜலக்ஷ்மி

"தூலைப்போல சேலை, தாயைப்போல பிள்ளை" என்பதற்கொப்ப பலகலைகளும் பயின்ற அறிவாளி. அடுத்த புதல்வர் தான் ரணதீரர். நான்காவது குழந்தை ஒரு பெண். லீலாமணி என்று பெயர். அரசியலிலும், கவிதா உலகிலும் புகழ் பெற்றவரும் தற்சமயம் அரவிந்தரின் ஆசிரமத்தில் வசித்து வருப வருமாகிய ஸ்ரீயுத ஹரேந்திரநாத சட்டோபாத்தியாவும் இவர் சகோதரர் தான். குடும்பத்தில் சந்தோஷமும், அமைதியும் எப்பவும் நிலவி வருகிறது.

பெண்ணுலகில் ஒரு திலகம் போல் விளங்கும் ஸ்ரீமதி சரோஜினி நாயுடு நீண்ட காலம் வாழ்ந்து நம் நாட்டின் கீர்த்தியையும், இந்தியப் பெண்மணிகளின் மேன்மையையும் உலகுக்கெடுத்துக் காட்டவேண்டுமென்று எல்லாம் வல்ல பாரதாணி பராசக்தியை இறைஞ்சுகிறேன்.

---

# காதலற்ற விவாகம்

விண்ட்ஸர் கோமகன் (மாஜி மன்னர் எட்வர்ட்,) எனஸெஸ் பெல்டில் தம்முடைய முடிதுறவு பற்றி, தமக்கு இடமளித்திருக்கும் ராத்ஷில்ட் நண்பர்களிடம் கீழ்க் கண்டவாறு கூறியதாகத் தெரிகிறது.

விண்ட்ஸர் கூறுகிறார்:—"உன்னதமான நோக்கத்துடனேயே நான் முடிதுறந்தேன் என்பதை அடுத்த தலைமுறை கூட சீக்கிரத்தில் அங்கீகரிக்கப்போகிறது. மிகக் குறைந்த காலமே நான் ஆட்சி புரிந்ததற்காக என்னை அவை கௌரவிக்கப் போகின்றன.

காதலற்ற விவாகம் அக்கிரமானது. இயற்கைக்கு விரோதமானது.

தனி நபர்களுக்கும் சரி, அதனால் தீங்கு தான் விளையும். யோக்யப் பொறுப்புள்ளவர்கள் காதலற்ற விவாகத்தை ஏற்றுக் கொள்ளவே மாட்டார்கள்.

லோகாயதமான காரியங்களுக்காக மட்டுமே செய்யப்படும் விவாகங்களைப் போல் அசிங்கமானதை மனதினாலும் எண்ண முடியாது. ராஜ்ய விவகாரங்களைக் காரணமாகக் காட்டி அத்தகைய விவாகங்களைச் செய்வது கால் நடைப் பண்ணைகளில் அனுஷ்டிக்கப்படும் சம்பிரதாயமான பழக்கவழக்கங்களைப் போன்றது.

மத குருக்களின் பாய்ச்சலும் குறை கூறுதலும் அவர்களுக்கே அவமானத்தை விளைவிக்கத் தக்கவை. அவர்கள் பிரதிநிதிகளாயுள்ள ஸ்தாபனங்களுக்கும் அதனால் கெடுதல் தான் நேரிடும்.

காதலற்ற விவாகத்தைக் கலைத்து விடுவது சரியே. இயற்கை காதலற்ற மண வாழ்க்கையில் பிணிக்கப் பட்டிருப்பவர் பிரிக்கப்பட வேண்டும்.

சாதாரண ஜனங்களிடையே இருப்பவர்கள் போல், பெரிய அந்தஸ்துகளில் இருப்பவர்களும் வெளி வேஷத்தைவிட உண்மையையும் ஒழுக்கத்தையும் கடைப் பிடிப்பதே சாலச் சிறந்தது; புத்திசாலித்தனமாகும்."



# சுந்தரி எழுதிய கட்டுரை

ஸ்ரீமதி எஸ். ஆர். ஜயம்மாள்

ஸ்திரீ, புருஷர்கள் ஆதியாய் எல்லோரும் கட்டுரைகளையும், கதைகளையும் பத்திரிகைகளுக்கு அனுப்புவதும், அவைகளை நித்தியம் பலரும் வாசித்து சந்தோஷப் படுவதையும் பார்த்து, சுந்தரிக்குத் தானும் கட்டுரை எழுதுவோரில் ஒருவளாக வேண்டுமென்று வெகுநாட்களாக ஆசை. பாவம்! ஆனால் கட்டுரையை எவ்விதம் எழுத ஆரம்பிப்பதென்று யோஜித்து யோஜித்து அவளுக்கு 'போது' மாய் போய்விட்டது. என்னவானாலும் சரி, இன்றைக்கு தனக்கு வந்தமாதிரி ஒரு கதையை எழுத ஆரம்பித்தே விடுகிறதென்று தீர்மானித்துவிட்டாள். சுந்தரி ஒரு கிருஹிணி. அதுவுமன்றி நான்கு குழந்தைகளின் தாயார். அவளுக்கு கதை எழுத எங்கே நேரம்? எப்பொழுதாவது சமயம் அகப்பட்டாலும்கூட அவளுக்கு நிச்சப்தமாக விருக்கவேண்டும். நான்கு குழந்தைகள் இருக்கும் அகத்தில் நிச்சப்தம் எப்படி ஏற்படும்? அன்றைக்கென்னமோ அவள் பிடிவாதமாக, தன் கணவன் கச்சேரி செல்ல, குழந்தைகளையும் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பிவிட்டு, கைக்குழந்தையை தொட்டிலில் விட்டு தூங்கச் செய்துவிட்டு கதை எழுத உட்கார்ந்தாள்.

ஒரு காகிதம், இரண்டு, மூன்று, சரி; நான்கைந்து காகிதங்களில் பிராரம்பித்து, கிழித் தெரிந்து ஆறுவது காகிதத்தில் "ஒரு ஊரில்........" என்று எழுதுவதற்குள், அடுத்தாத்து அனந்தலக்ஷ்மி மாமி வீட்டினுள் பிரவேசித்தாள்.

"சுந்தரீ, கொஞ்சம் முத்துசாரை பிடி தாடீம்மா. எங்காத்துபிடியின் ஓமப்பொடி தட்டு கெட்டுபோய் விட்டிருக்கு. ஏண்டீம்மா, கார்த்தாலே என்ன சமயல்" என்று சொல்லிக்கொண்டே பாய்மீது வந்து உட்கார்ந்து விட்டாள்! சுந்தரி உக்ராணத்திற்குபோய் முத்துசாரை பிடியை தேடி எடுத்துவந்து அம்மாமியின் கையில் கொடுத்தபின்கூட, அந்தம்மாள் நிதானமாகப் பேசிவிட்டு அரைமணிக் கப்புறந்தான் சுந்தரியின் வீட்டைவிட்டுக் கிளம்பினாள். "வெடிஞ்சுதுடாப்பா" என்று மனதில் நினைத்தவாறு அந்தம்மாளை அனுப்பிவிட்டு சுந்தரி மறுபடியும் கதை எழுத ஆரம்பித்தாள். அதற்குள் தூங்கிக்கொண்டிருந்த குழந்தை முழித்துக்கொண்டு அழத் தொடங்கிற்று. அதை மறுபடியும் தூங்கச் செய்வதற்கு சுந்தரிக்கு அரை மணிநேரம் பிடித்தது. சுந்தரிக்கு மிகவும் திண்டாட்டமாய் நேர்ந்தது.

"அப்பாடா"வென்று கையில் காகிதத்தையும் பேனாவையும் எடுத்தாள். ஜவான் கருப்பன் வந்து "அம்மா, ராமகவுண்டர் வூட்டு பொம்பளேங்கோ வந்திருக்காங்க," என்றான். வந்தவர்களை அனுப்பிவிட்டு "இன்றைக்குத்தானா இவர்களும் அழைப்பதற்கு வரணும், கிரஹசாரம்" என்று மொணமொணத்துக் கொண்டே கதையை எழுதலானாள். ஆனால் தான் முன்பு நினைத்துக் கொண்டிருந்த பீடிகையை ஞாபகம் செய்துகொள்வதற்குள் சமையல்கார சாமா வந்து "அம்மா, டிபன் என்ன செய்வது? குழந்தைகள் வந்துடுவாளே!" என்று வினவினான்.

"என்னத்தையாவது பண்ணி தலையேன்! என்னை வெருமனே வந்து தொந்திரவு செய்யாதே. குழந்தைகள்.........."

என்பதற்குள் சாமா "குழந்தைகள் வந்த க்ஷணம் வந்து தெரிவிக்கிறேன்," என்று சுந்தரி ஆரம்பித்த வாக்கியத்தை சொல்லி முடித்துவிட்டான்.

சுந்தரி கோபத்துடன் "நான் பேசி முடிப்பதற்குள் உனக்கென்னடா அவசரம்? குழந்தைகள் வந்ததும் அவர்களை என்னிடம் வரவிடாமல் நீயே அவர்களுக்குக் காப்பி பலகாரம் கொடுத்து பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிடு என்றேன். தெரிந்ததா? எஜமானருக்கும் சீக்கிரம் காப்பிசெய்து தர்மோஸில் நீயே கொட்டி ஆபீஸிற்கு அனுப்பிவிடு," என்றாள்.

சாமா "ஆகட்டும், அம்மா" என்று புறப்பட்டுபோக, சுந்தரி "இந்த ஆட்களின் தொல்லைவேறு. கஷ்டம்," என்றவாறு கதையை மேலும் யோஜிக்க வாரம்பித்தாள். அதற்குள் "அம்மா" என்ற குரல் கேட்கவே, "என்னடா அது? மறுபடியும், மறுபடியும் வந்து தொந்திரவு செய்யாதே என்று அப்பவே நான் சொல்லலையாடா?" என்று கோபத்துடன் அதட்டினாள்.

சமையல்காரன் கையை பிசைந்தவண்ணம் "இல்லே அம்மா, உப்புமா செய்யலாமென்றால்...ரவை தீர்ந்துபோய் விட்டது."

சுந்தரி: "ரவை இல்லாவிடில் வேறு ஏதாவது பண்ணுவதுதானே!"

சாமா: "பஜ்ஜிக்கு கடலைமாவு இல்லை. புளிஅவல் செய்யலாமென்றாலோ அதற்கு அவல் வேண்டும்."

சுந்தரி பெட்டியைத் திறந்து நாலணா கொண்டுவந்து அவனிடம் எறிந்துவிட்டு "திரும்பவும் வந்து ஹிம்சிக்காதே. எது வேண்டுமோ ஆளைக் கடைக்கனுப்பி தருவித்துக்கொள்," என்று உட்கார்ந்தாள். முனியன் வந்து "அம்மா தோபி (வண்ணான்) வந்திருக்கான். மடித்துணி கொணர்ந்திருக்கான்," என்று சொல்லவும், சுந்தரி வெருப்புடன் எழுந்து சென்று வண்ணானிடமிருந்து மடித்துணிகளை எண்ணி வாங்கிக்கொண்டு அழுக்கு துணிகளை அன்றைக்குப் போடமுடியாதென்றும் "அடுத்த நாள் வா" என்றும் சொல்லிவிட்டு, தொட்டிலில் அழுது கொண்டிருக்கும் குழந்தையை வந்தெடுத்துக்கொண்டாள். குழந்தைக்கு பால் போட்டு முனியனிடம் கொடுத்துவிட்டு, விளையாட்டுக் காண்பிக்கும்படி சொல்லிக் கொண்டிருக்கும்பொழுதே, கருப்பன் பள்ளிக்கூடத்திலிருந்து குழந்தைகளை அழைத்துவந்தான். சமயல்கார சாமா குழந்தைகளை நேராக சமயலறைக்கு அழைத்துச் செல்வதற்காக பிரம்மப்பிரயத்தனப்பட்டாலும் முடியவில்லை.

ஒன்றுக்கொன்று சண்டை பிடித்த வண்ணம், நேராக சுந்தரியினிடமே ஓடி வந்தன. "அம்மா, கிட்டு என்னை அடித்தான்". என்று சுப்புவும், "அம்மா அவன் என் பலப்பத்தை பிடுங்கிக்கொண்டு உடைத்துவிட்டான். அதற்கு நான் அவனை அடித்தேன். அவனும் என்னை நன்றாக குட்டினாம்மா. எனக்கு இன்னொரு பலப்பம் குடுமா, இப்பவே குடுமா" என்று கிட்டுவும், "அம்மா தெய்யல் வாத்தியாரம்மா, இரண்டணா கொண்டுவர சொல்லி இருக்கா. கொண்டுவராவிட்





டால் பெஞ்சி மேல் நிறுத்தராளாம். சீக்கிரம் இரண்டணா கொடுமா, அப்புறம் மறந்துபோய்விடும்" என்று எட்டுவயது பாலகியான இந்திரா, அம்மாவின் தலைப்பை பிடித்து இழுக்க, சுந்தரி அதிக கோபத்துடன் பௌண்டன் பேனாவையும், காகிதத்தையும் மேஜைமீது விட்டெறிந்து விட்டு, குழந்தைகளின் சண்டையைத் தீர்த்து, அவர்களுக்கு காப்பி, டிபன் எல்லாம் கொடுத்து ஸ்கூலுக்கு அனுப்பிக் கொண்டிருக்கும்பொழுதே, முதல் நாள் தைப்பதற்கு கொடுத்திருந்த துணிகளை எடுத்துக்கொண்டு தையல்காரன் வந்து சேர்ந்தான். "அய்யோ, கிரஹசாரமே" என்று தைத்த துணிகளின் கூலி வகையராக்களை கணக்குத் தீர்த்து அவன் சென்றதும் "உஸ், அப்பா" வென்று காகிதத்தையும், பேனாவையும் கையிலெடுத்துக் கொண்டு கதையின் போக்கை நினைப்பு மூட்டிக் கொள்ளலானாள். அப்பொழுது சில குழந்தைகள் வீட்டிற்குள் நுழைந்தன. அவைகளின் பின்னால் அவைகளின் தாயார்களான மஞ்சுளா, மாதவி, சுமித்திரா மூவரும் சம்பாஷித்துக் கொண்டே வீட்டினுள் பிரவேசித்தனர்.

இந்த கலாட்டாவை கேட்டவுடன் சுந்தரி எங்கு தன் நேசிகள் தன் காரியத்தை பார்த்து விடுவார்களோ என்று ஜடுதியில் கையிலிருந்த பேனாவையும், காகிதத்தையும் மேஜை டிராயற்குள் வைத்து சாத்திவிட்டு எல்லோரையும் வரவேற்று பாயில் உட்காரச் சொன்னாள்.

மஞ்சுளா: என்னடி சுந்தரி? இன்றைக்கு சமாஜத்தில் பாட்டுக்கச்சேரி இருக்கென்பதை மறந்துட்டாயா, என்ன? இன்னும் தலைகூட வாரி பின்னிக்காமல் உட்கார்ந் திருக்கிறயே?

சுமித்திரா: நான்கு மணிக்கு சரியாக பாட்டுக்கச்சேரி ஆரம்பமாகிறதாம். இப்பொழுதே 3½-மணி ஆய்விட்டது. நீ இன்னும் எந்தகாலத்துக்குப் புறப்படுவது?

சுந்தரி "நான் இன்றைக்கு வருவதில்லை போ. எனக்கென்னமோ இன்றைக்கு உடம்பே சரியாகவில்லை. நீங்கள் போய் விட்டு வாங்கள்" என்று உபாயத்துடன் தப்பித்துக்கொண்டு, அவர்களுக்கு குங்குமம் கொடுத்து அனுப்பிவிட்டாள்.

மணியும் நாலடித்துவிட்டது. சுந்தரி தலைவாரி பின்னிக்கொண்டுவிட்டு அப்புறம் எழுதலாமென்று தலைவாரிக் கொண்டிருக்கும்பொழுதே அவள் கணவன் சந்திரசேகரனும் ஆபீஸிலிருந்து வீட்டிற்கு வந்துவிட்டான். சுந்தரி அவனுக்கு காப்பி பலகாரம் கொண்டு வந்து கொடுத்து, தான் கதை எழுதப் புறப்பட்டதையும், தனக்கு எழுத முடியாமல் பலவித தடங்கல்கள் ஏற்பட்டதையும், இந்தகலாட்டாவில் தான் எழுதவெண்ணி யோஜித்திருந்த கதையின்போக்கே (Plot) மறந்து போய் விட்டதென்றும் தன் கணவனிடம் முறையிட்டாள்.

இதைச்செவியுற்ற சந்திரசேகரன் சிரித்தவண்ணம் "நீ பெரிய சம்சாரியல்லவா. நம்மளுக்கெல்லாம் இப்பேர்பட்ட குறைகள் இருந்தே இருக்கின்றன. அதற்கென்ன செய்யலாம் சொல்லு. நான் ஒரு யோஜனை கூறுகிறேன் கேள். இன்றைக்கு ராத்திரி உட்கார்ந்துகொண்டு நீ கதை எழுதப் புறப்பட்டதிலிருந்து நடந்த சமாசாரங்களை எல்லாம் எழுதிவிடு. இதே ஒரு சிறிய தமாஷ்கதையாக விருக்கும்" என்றான், சுந்தரியும் வெகு குதூகலத்துடன் அன்றிரவே அன்றையதினம் நடந்த சமாசாரங்களை எழுதி, ப்ரசித்தமான பத்திரிகைக்கு தன் கட்டுரையை அனுப்பினாள். அந்தக் கட்டுரை பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு வந்ததினம் சுந்தரிக்குண்டான ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

# கவீந்திரர் தாகூரின் பொன்மொழிகள்

## மணம்

திருமணமென்றால் ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் அறக்கடவுள் முன்னிலையில் முடிபோடுவதாகும்.

.... .... ....

## இல்வாழ்க்கை

கிழக்கிலிருந்து மேற்கேயும், மேற்கிலிருந்து கிழக்கேயும் மேகம் சஞ்சாரம் செய்கிறது. இது காற்றினாலேற்படுவது. இல்லறமும் இத்தகைத்தே. மேகத்தைப் போல் பொறுமையோடு எதையும் ஏற்றுக் கொள்ளும் குணம் இல்லறத்தார்க்கு வேண்டும்.

... ... ...

## மனைவி

மனைவி தன்னுடைய மிரட்டலுக்கு அஞ்சி, தன் ஆட்சிக்கு அடங்கி வாழ்வாள் என்று சில ஆண்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் மனைவியுடன் பழகுவதற்கு தனித்திறமை வேண்டும். பழகுவதில் வெற்றியோ தோல்வியோ ஏற்படக்கூடிய சந்தேகங்களிருக்கின்றன. பெரிய பெரிய நிபுணர்களுக்குக்கூட இது மூளையில் ஏறுவதில்லை.

... ... ...

பச்சிளம் பாலர்கள் கையிற் கொடுத்த கனியைச் சட்டென்று ஆலோசிக்காமல் வாயிற்போட்டு உண்பதுபோல இக்காலத்தில் இளைஞர்கள் கண்மூடித்தனமாய் இல்லற வாழ்க்கையில் இறங்கி விடுகின்றனர்.

## ஒழுக்கம்

ஒழுக்கம் என்னும் ' எண்ணெயை வாழ்க்கை என்னும் வறண்ட விளக்கில் விடாமல் பெண்மை என்னும் திரியை மட்டும் எரியவிட்டால் ஒப்பிலா உயிர் எரிந்து சாம்பலாய்விடும்.

... ... ...

## சமநிலை

பெரியவன் சிறியவன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்பவைகளெல்லாம் அர்த்தமற்றவை. மனிதர்கள் தாமாகச் செய்துகொள்ளும் அர்த்தமற்ற கட்டுப்பாடுகள். நுரையிலிருக்கும் குமிழிகளில் எந்தக்குமிழி எந்த இடத்தில் இருந்தாலென்ன ? இயற்கையோடு இசைந்து நட. பிறர் உன்னை எதுவும் செய்யமுடியாது.

... ... ...

## வயிறு பெரிதே

ஒருவன் தன்னுடைய வயிற்றுக்கு வழி தேடிக்கொண்டபிறகே மற்றொரு வயிற்றுக்கு வழி தேடவேண்டுமென்று நறுமணம் செய்துகொள்ளாது சாக்குப் போக்குகள் சொல்லி வருகிறான். அவனுடைய கொள்கை எவ்வாறு யிருப்பினும் அவனுடைய வயிறு சாதாரணமானதல்ல. ரொம்பவும் பெரியதுதான் என்று தெரிகிறது.

... ... ...

பிரம்மச்சரியம் கடைப்பிடித்து வாழ்க்கை நடத்துபவனுடைய மனதை எப்பேர்பட்ட நங்கையாலும் அசைத்துவிட முடியாது என்று நினைக்கவோ சொல்லவோ முடியாது. சபலம் புருஷனின் இயற்கை.

# ஹூவாங்ஹியின் கருணை

திரு. எம். ராமசாமி

சீன தளகர்த்தர் கவாகிங்ஹாவின் பிறந்தினக் கொண்டாட்டம். தேக் கச்சேரி நடந்துகொண்டிருந்தது. ஒரு மூலையில் சீன தளகர்த்தரின் அழகிய மனைவியும் ஆங்கில கனவான் ஜெனரல் ராபர்ட்ஸூம் பேசிக்கொண்டிருந்தனர். தளகர்த்தரது அழகிய மனைவியின் முகமானது ஜெனரலின் பழைய நினைவுகளை நினைப்பூட்டியது. கலங்கிய அவரது முகமானது பார்க்க விகாரமா யிருந்தது.

"உங்களுக்கு இவ்வளவு மனக்கலக்கத்தை யுண்டாக்கிய அப்பழங்கதையை யான் கேட்க மிகவும் ஆவலுள்ளவளாக இருக்கிறேன்," என்றாள் அப்பெண்மணி.

" ஆம் ! அது ஒரு துக்ககரமான சம்பவமே. இருந்தாலும் அதைப்பற்றி இது வரையில் யான் ஒருவரிடமும் பேசியதில்லை," என்று தனது கதையைத் துடங்கினார் ராபர்ட்ஸ் துரை :

" சுமார் 23 வருடங்களுக்கு முன்பு நான் சைனாவில் ஒரு சாதாரண சிப்பாயாக இருந்தேன். அப்பொழுது சீனபாஷையறிந்த எங்களுக்கு நல்ல பதவியும் பொருளும் கிடைத்தன. எனக்கும் எனது மேல் அதிகாரிகள் அப்பாஷையைக் கற்கும் பொருட்டு ஆறு மாதம் ரஜா கொடுத்தார்கள். நானும் மிகவும் சிபார்சின்பேரில் அப்பாஷையைக் கற்க சீன சக்கிரவர்த்தியின் மைத்துனராகிய சேனாதிபதி ஹூவாங்ஹியிடம் ஒரு சிஷ்யனாகப் போய் சேர்ந்தேன்."

"யாரு? சேனாதிபதி ஹூவாங்ஹியா?" என்று சற்று ஆச்சர்யத்துடன்கேட்டாள் ஜெனரலின்முன்பு வீற்றிருந்த அம்மங்கை.

" ஆம். ஹூவாங்ஹிதான். வயதானவர். சேனாதிபதியாகிய அவர் சீனபாஷை கற்பிப்பதில் கைதேர்ந்தவர். நான் ஐந்தே மாதத்தில் நன்றாக உங்கள் பாஷையை எழுதவும், படிக்கவும் கற்றுக் கொண்டேன்.

இனிமேல்தான் அத்துக்கசம்பவத்தின் ஆரம்பம். ஹூவாங்ஹியிக்கு நைசாங்மா வென்ற ஒரு அழகிய மனைவி ; 20 வயதே முடியப்பெற்ற அவள் அழகில் ரதியைப் போல் இருந்தாள். எங்கள் இருவருக்கும் பரஸ்பரம் அன்புண்டாகி அது நாளடைவில் காதலாக மாறியது. நாங்கள் இருவரும் சேனாதிபதி இல்லாத சமயங்களில் பேசவும் கூடிக்குலாவவும் ஆரம்பித்தோம். முடிவில் எப்படியாவது இருவரும் எங்காவது ஓடிவிடுவது என்று தீர்மானித்தோம்.

பகவான் எங்கள்பேரில் கருணை வைத்தார். நாங்கள் எதிர்பார்த்த சந்தர்ப்பமும் வாய்த்தது. தான் ஏதோ அலுவலாக வடக்கேயுள்ள "கார்சீவா" கிராமத்திற்கு செல்லவேண்டுமென்றும், திரும்ப இன்னும் நான்குநாள் ஆகுமென்றும் அவர் சொல்லிச் சென்றார்.

இதைத்தான் நாங்கள் எதிர்ப்பார்த்தோம். அவர் கிளம்பிய சிறிது நாழிகைக்கெல்லாம் நாங்களும் புறப்பட்டோம். ஆனால் தென்திசையை நோக்கி எப்படி

யாவது காண்டன் நகரம் சென்றுவிடுவது என்றும் அங்கிருந்து இந்தியா சென்றுவிடுவது என்றும் தீர்மானித்தோம்.

சுமார் ஆறு மணிநேரம் கடும் வெயிலில் பிரயாணம் செய்து "கடுப்ராவோசி" கிராமத்தை யடைந்தோம். இன்னும் காண்டன் நகரம் பத்து மைல்களே யுள்ளது. அங்கு சென்றுவிட்டால் எங்களை ஹுவாங்ஹி கண்டு பிடிப்பது மிகவும் சிரமம். வெய்யிலில் வழிநடந்த களைப்பு ஒரு புறமும், எங்கு நாங்கள் ஓடிவிட்டது சேனாதிபதிக்கு தெரிந்துவிட்டதோ என்ற பயமும் எங்களை வாட்ட, இரவு களைப்பாறும் பொருட்டு கடுப்ராவோசி கிராமத்தின் விடுதியை நோக்கி நடந்தோம்.

எங்களை விடுதியின் சொந்தக்காரன் வரவேற்று எங்களது பெட்டிகளை ஒரு அறையில் கொண்டு வைத்துவிட்டு சாப்பாட்டுக் கூடத்திற்கு அழைத்துச் சென்றான்."

இவ்விடத்தில் தனது கதையைச் சற்று நிறுத்தி தனது எதிரில் உள்ள கன்னிகையின் முகத்தை யுற்றுநோக்கினார் ஜெனரல் ராபர்ட்ஸ். அவளது கருவிழிகளில்' நீர் கலங்குவதை அவர் காணாமலில்லை.

"கூடத்திற்குள் நுழைந்ததும் 'ஹா' என்ற சத்தத்துடன் கீழே விழுந்து மூர்ச்சையானாள் நைஸாங்மா. எனக்கும் தூக்கிவாரிப் போட்டது. அங்கு நான் கண்ட காட்சியை என்னவென்று உரைப்பேன். அங்கு தனது ஆட்களுடன் சேனாதிபதி ஹுவாங்ஹி போஜனம் அருந்திக்கொண்டிருந்தார். எங்களையும் பார்த்து விட்டார்.

தனது மனைவியைக் கண்டதும் அவருக்குண்டான கோபமானது என்னைக்கண்டதும் கோபச்சிரிப்பாக மாறியது. 'அடே! இவளை அந்த அறைக்குக் கொண்டு செல்லுங்கள்' என்று சொல்லிவிட்டு என்னைப் பார்த்து,

"வாருங்கள், ராபர்ட்ஸ் துரையே! உங்களைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்றார்.

"எனக்கு யாது செய்வது என்று புலப்படவில்லை. இப்படி கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டோமே என்ற பயமும், குருத்துரோகம் செய்தோமே என்ற வருத்தமும், சேனாதிபதி என்ன செய்வாரோ என்ற கிலி ஒருபுறமும் என்னை வாட்டத் தொடங்கியது.

ஒரு கோபச்சிரிப்புடன் என்னைப் பார்த்து பேசத்தொடங்கினார் சேனாதிபதி.

"நீங்கள் எங்கு போவதாக உத்தேசமோ?"

"நடுவில் ஒரு தடங்கலும் இல்லாவிட்டால் நேரே இந்தியாவே சென்றிருப்பேன்" என்றேன் சற்று தைரியமாகவே. வேறு வழியில்லை.

"அடா அசட்டு வாலிபா! உங்கள் திருட்டுக் காதல் எனக்குத் தெரியாமலில்லை. நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதைக் காணவே நான் வடக்கு பக்கம் செல்வதாகப் பொய் புகன்று தென் பக்கம் வந்தேன். எல்லாம் நான் நினைத்தபடியே நடக்கிறது" என்று சொல்லிக் கொண்டே என்னை உற்று நோக்கினார். அவரது பார்வையில் கட்டுக்கடங்காத கோபம் கூத்தாடியது. மறுபடியும் பேசத் தொடங்கினார்.

"ஏய்! ராபர்ட்ஸ், இப்பொழுது நான் நினைத்தால் உன்னை இங்கேயே இரு துண்





டாக வெட்டி விடலாம். என்னைக் கேட்பாரில்லை. இருந்தாலும் என்னைத் துரோகம் செய்த அந்தப் பாபி உன்னுடன் வரப் பிரியப்பட்டால் நீங்கள் இருவரும் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்" என்று சொல்லிக் கொண்டே ஒரே தாவில் எனது காதலியை அவரது ஆட்கள் தூக்கிச் சென்ற அந்த அறைக்குச் சென்றார்.

எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. சித்தப்பிரமைகொண்டு அங்கேயே நின்றேன். "ஹா!" என்ற எனது காதலியின் கூக்குரலே எனது சுய ஞாபகத்தைக் கொணர்ந்தது. மறு நிமிடம் என் முன் சேனாதிபதி தோன்றினார்.

"ஏய்! ஆங்கில வாலிபா! உன்னுடன் வர அவளும் பிரியப்படுகிறாள். ஆகையால் நீங்கள் இருவரும் எங்கு வேண்டுமானாலும் தடையின்றி செல்லலாம்," என்று சொல்லிவிட்டு தனது ஆட்களுடன் வெளியே சென்றார்.

துள்ளிக் குதித்தேன் சந்தோஷத்தினால்! சேனாதிபதியை என் மனமார வாழ்த்தினேன். அவசர அவசரமாக உள் நுழைந்தேன் எனது காதலியைத் தேடி!! அங்கு நைசாங்மா குப்புறக்கிடந்தாள்; எனது இரு கைகளாலும் வாரி யெடுத்தேன்; தனது கைகளால் முகத்தை மூடிக்கொண்டு அவள் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தனள். அவளது கைகளை விலக்கி முகத்தை நோக்கினேன். என்னவென்று உரைப்பேன் நான் அடைந்த வருத்தத்தை? அவளது இரு கண்களிலிருந்தும் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

என்னுடன் தனது மனைவியை விட்டுச் சென்ற சேனாதிபதி தன்னுடன் அவள் இரு கண் விழிகளையும் எடுத்துச் சென்றுவிட்டார். என்னே! ஹுவாங்ஹியின் கருணை!!

என்று தனது கதையை முடித்தார் ஜெனரல் ராபர்ட்ஸ். அவரது முன்னிருந்த சீனதளகர்த்தர் கவாகிங்ஹாவின் மனைவியின் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது. அதைத் துடைத்துக்கொண்டே அவள் "பின் என்ன நடந்தது ஜெனரல்" என்றாள்.

"பின் நைசாங்மா விஷம் அருந்தி இறந்தனள்" என்றார் ராபர்ட்ஸ்.

இதுவரை வருத்தத்துடன் வீற்றிருந்த அவரது எதிரில் இருந்த அம்மங்கையின் கண்களில் இப்பொழுது கோபத்தணல் வீசியது.

"ஆனால் ஜெனரல் துரையே. நான் இதே கதையை இதற்கு முன் கேட்டிருக்கிறேன். அது வேறு விதமாக முடிகின்றது" என்றாள்.

இதைக் கேட்ட ஜெனரல் திடுக்கிட்டார். "எப்படி முடிகின்றது."

"அக்கள்வனும், துரோகியுமாகிய அந்த ஆங்கிலன் பழுதடைந்த மாணிக்கமாகிய அந்நைசாங்மாவை அவ்விடமே விட்டு விட்டு ஓடிவிட்டான். பின் சேனாதிபதி ஹுவாங்ஹியே அவளை தனது மனைவியாகச் சேர்த்துக் கொண்டார்," என்றாள்.

ஜெனரல் ராபர்ட்ஸின் மதி கலங்கியது. திருட்டு முழி முழிக்கலானார். "உனக்கு இக்கதையைச் சொன்னது யார்?" என்றனர்.

"யாரா? ஏ துரோகி! நான் தான் அக்குருட்டு நைசாங்மாவுக்கும், சேனாதிபதி ஹுவாங்ஹியிக்கும் பிறந்த பெண்" என்றாள் அப்பெண்மணி.

# தமிழ் நாட்டு பெண்மணிகள்

**டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்**

மக்களில் ஆடவர் எங்ஙனம் நாட்டினது பெருமைக்குக் காரணமாக இருக்கிறார்களோ அங்ஙனமே பெண்டிரும் காரணமாகின்றனர். அறிவு ஆடவர் மகளிர் ஆகிய இருவகையார்க்கும் பொதுவாகும். கடைச் சங்க காலத்தில் பல பெண்கள் நற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனரென்று தெரிய வருகின்றது. ஏறக்குறைய ஐம்பது பெண்பாலார் இயற்றிய செய்யுட்கள் இப்பொழுது கிடைக்கின்றன.

## பெண் புலவர்

காக்கைபாடினியார், சிறுகாக்கை பாடினியார் என்ற பெண்புலவர் இருவர் யாப்பிலக்கண நூல்கள் இயற்றியிருக்கின்றனர். அள்ளூர் நன் முல்லையார் என்பது ஒரு பெண்புலவர் பெயர். அவர் இயற்கையை வருணிப்பதில் சிறந்தவர். ஒக்கூர் மாசாத்தியாரென்றவர் ஒரு தேர்ப்பாகனை ஒரு சேனாபதி பாராட்டியதாக ஒரு செய்யுள் கூறியிருக்கிறார். ஒரு வீரப் பெண்ணைப் பற்றி இவர் பாடிய அழகிய செய்யுளொன்று புறநானூற்றில் இருக்கிறது.

காக்கை பாடினியார் நச்செள்ளையாரென்பது ஒருவர் பெயர். அப்பெண் மணியார் தம் அன்பர் வருவதற்கு நன்னிமித்தமாகக் காக்கை கரைந்ததைப் பாராட்டி ஒரு செய்யுள் பாடியதால் அப்பெயர் பெற்றார். இவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்ற அரசனைப் பாடி ஆபரணத்துக்குப் பொன்னும், வேறு பல பரிசுகளையும் பெற்றனர்.

குறமகள் குறியெயினி, குறமகள் இளவெயினி என்னும் இரண்டு குறப் பெண்டிரும், வெண்ணிக்குயத்தியார் என்னும் குயவர் குலத்துதித்தவரும் பாடிய செய்யுட்கள் உள்ளன. இவற்றால் அக்காலத்தில் எல்லாச் சாதிமகளிரும் நற்புலமை வாய்ந்தவர்களாக இருந்தனரென்று தெரிகின்றது. பொன்முடியாரென்ற ஒருவர் வீரனுடைய கடமையைச்சிறப்பித்து ஒரு செய்யுள் கூறியுள்ளார். அவர் முடிபுனைந்தவரென்று தெரிகின்றது. புலவர்கள் முடிபுனையும் வழக்கம் முரஞ்சியர் முடிநாகராயர், வில்லிபுத்தூரர், சேக்கிழார் முதலியோர் வரலாறுகளானும் தெளியப்படுகிறது. சில பெண்புலவர்கள் இளமையிலேயே சிறந்த கவிஞர்களாக விளங்கினர்.

## ஔவையார்

சங்க காலத்துக்குப் பிறகு விளங்கிய பெண் புலவர்கள் பலர். ஔவையாரென்ற ஒருவர் ஆத்திசூடி முதலிய அரிய நீதி நூல்களைப் பாடியிருக்கின்றனர். ஆண்டாளுடைய பாசுரங்கள் திவ்யப் பிரபந்தத்தில் ஒரு பகுதியாக விளங்குகின்றன. காரைக்காலம்மையார் பாடல்கள் பதினோராம் திருமுறையில் சோமசுந்தரக் கடவுள் பாசுரத்துக்கு அடுத்தபடியாக இடம் பெற்றிருக்கின்றன.



" கோவிலுக்கு "



**தனலக்ஷ்மி — தர்மலிங்கம்.**

வைசியகுல விதவைப் பெண் ஸ்ரீமதி தனலக்ஷ்மிக்கும் (பி.எஸ். கோவிந்தராஜுலு செட்டியார் புதல்வி) பெத்த நாயக்கன் பாளையம் வெங்கடராம செட்டியார் புதல்வர் தர்மலிங்கத்துக்கும் சேலம் வைசிய மடத்தில் பல பிரமுகர்கள் முன்னிலையில் நடந்தது. வைசியகுலத் தலைவர்கள் பூரண ஆதரவு கொடுத்தது போற்றற்குரியது.



வரகுணபாண்டியன் மனைவி, அம்மைச்சி உத்தரநல்லூர் நங்கை, தமிழறியும் பெருமாள், கம்பர்தாதி, சொக்கம் பட்டி ஜமீன்தார் மனைவி முதலிய பல பெண்பாலார் நற்புலமை வாய்ந்தவர்கள். சிலர் வாதமிட்டு வென்றிருக்கிறார்கள். குண்டலகேசி அத்தகையவள். கம்பர் பெண்கள் கல்வியிற் சிறந்தவர்களென் பதைப் பல இடங்களில் சொல்லி யிருக்கின்றார்.

பண்டைகாலத்துப் பெண்மணிகளுக்குச் சங்கீதம், வைத்தியம், சோதிடம், சித்திரம், சிற்பம் முதலியவற்றிலும் பயிற்சி இருந்தது.

அவர்களுக்கு மனோபலமும் தேகபலமும் அதிகமாக இருந்தன. பொறுமையென்பது அவர்களுடைய பூஷணம். தன்னுடைய குடும்பம் வறுமையுற்ற காலத்தில் செல்வமுள்ள தன் பிறந்தகத்துக்குப் போகாமல் ஒரு வேளைமட்டும் உணவுண்டு வாழ்ந்த ஒரு பெண்ணைப்பற்றி நற்றிணையிற் கூறப்பட்டுள்ளது. வீரம் நிறைந்த பெண்களுள் கண்ணகி சிறந்தவள். வீரபத்தினியென்று அவளைச் சொல்லுவார். வீரக்குடியிற் பிறந்த பெண்களைப் பற்றிப் புறநானூற்றில் அரிய வரலாறுகளைக் காணலாம்.

## விளையாட்டுகள்

பெண்கள் உடல் வலிமை பெறுதற்கு அக்காலத்தில் பலவகை விளையாட்டுகள் இருந்தன. பந்தாடுதலென்பது பெண்களே கைக்கொண்டிருந்த விளையாட்டு. பெருங்கதையில் ஓர் அத்தியாயம் முழுதும் சில பெண்கள் தம்முள் பந்தயங் கூறிப் பந்தாடிய செய்தி மிக அழகாகவும் ஆச்சரியமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. தெள்ளேணம், சாழல், தோணோக்கம், உந்தி கும்மி, கோலாட்டம் முதலிய விளையாட்டுக்கள் பெண்களுக்குரியன.

## மனைத்தலைவி

ஒரு வீட்டின் தலைவி பெண்ணென்பது நம் நாட்டினர் வைத்த அமைப்பு. அதனால்தான் இல்லென்றும் மனைவி யென்றும் அவர்களுக்குப் பெயர்கள் உண்டாயின. இல்லாளுடைய சம்மதத்தைப் பெற்றே தலைவன் தர்மம் செய்ய வேண்டும். விருந்தினரை உபசரிப்பதில் பெண்களே அதிகக் கருத்துடையவர்களாக இருந்தனர். கண்ணகி கோவலனைப் பிரிந்து வாழ்ந்த காலத்தில் உண்டான குறைகளாக வேறொன்றையும் கூறாமல் அறவோர் முதலியோரை உபசரியாததையே பெருங் குறையாகச் சொல்லுகிறாள். கனவனுக்கும் மனைவிக்கும் ஏதாவது மனஸ்தாபம் உள்ள காலத்திலும் விருந்தினர் வந்தால் அந்த மனஸ்தாபம் நீங்கி உபசாரம் செய்தல் பெண்கள் வழக்கம்.

பெண்டிரைப் பிராயம், சாதி முதலிய வரையறை யில்லாமல்தாய் என்றே கருதி வந்தனர். அம்மை, அம்மா, ஆச்சி என்று அமைந்திருக்கும் தமிழ்ப் பெயர்களே இந்தக் கொள்கைக்குச் சிறந்த அடையாளமாகும். பெண்களைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் தமிழ் நாட்டிற் பழங் கால முதல் இருந்துவருகிறது.

ஒரு பெண்மணி தன் வீட்டில் ஏவலாளாகவும், புருஷனுக்கு மந்திரியாகவும், குழந்தைக்கு உபாத்தியாயராகவும், குடும்பத்திற்கு வைத்தியராகவும், பொக்கிஷ மந்திரியாகவும் இருந்து வந்தாள். ‘தற்கொண்டான் வளத்தக்கால் வாழ்க்கைத்

துணை' என்பது குறள். வரவுக்கேற்ற செலவைத் தெரிந்து செய்தல் அவள் கடமை.

அறம், பொருள், இன்பமென்னும் மூன்று விஷயங்களிலும் பெண்களுடைய சம்பந்தத்தால் தமிழ் நாட்டுக்கு நன்மையுண்டாயின. அப்படியே மோக்ஷத்தையடையும் முயற்சிகளிலும் அவர் சிறப்படைந்திருந்தனர். நாயன்மார் பலருடைய மனைவியர் அவர்களுடைய தொண்டுக்குத் துணையாக நின்று உதவியிருக்கின்றனர். மங்கையர்க் கரசியார் தம் கணவனைத் திருத்தி ஞானசம்பந்தருடைய ஆற்றல்களை வெளிப்படுத்தினர். திலகவதியார் அப்பர் சைவசமயாசாரியாராவதற்குக் காரணமாக இருந்தார்.

வைஷ்ணவர்களுள் ஆண்டாள், கோங்குப் பிராட்டியாரென்ற பெண்களும், பௌத்தர்களுள் மணிமேகலை முதலியவர்களும், ஜைனர்களில் கவுந்தியடிகளாதி பேர்களும் மத விஷயமாகப் பல தொண்டுகளை செய்திருக்கிறார்கள்.

---

# இறந்தவரைப் பிழைப்பிக்க முயற்சி

மாஸ்கோவில் ஓர் உடற்கூறு ஆராய்ச்சிச் சாலையில் மனிதனின் மரணத்தைப் பற்றிய விபர முழுவதையும், மரணாவஸ்தை ஏற்பட்டது முதல் மரணமடையும் வரையில் தேக மாறுதல்களைக் கவனிக்க வேண்டி, அற்புத ஆராய்ச்சிகளைச் செய்து வருகின்றனர். மனிதன் இறக்கும் தறுவாயில் எந்தச் சமயம் வரையிலும் டாக்டர்களால் புத்துயிர் கொடுக்கப்பட்டு சுகமடைவானென்றும், எந்தச் சமயத்திற்கப்புறம் டாக்டரின் உதவி அடைய முடியாதென்பதை அறியவும் அதிக முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

பரீக்ஷார்த்தமாகச் செயற்கை இருதயத்தை வைத்து மனிதனைச் சில மணி நேரம் உயிர்பெறச் செய்யப் பட்டது. ஆனால், நீண்ட நேரம் நிலை நிறுத்த முடியவில்லை.

மேலும் ஆராய்ச்சிகள் பலசெய்து, போன உயிரை நிரந்தரமாகக் கொண்டு வர முயன்று வருகிறார்கள். தற்போது இது செயற்கை முறையால் கொல்லப் பட்ட பிராணிகளிடத்தில் அதிகப் பலனளித்து வருகிறது. 5 நாய்கள் விஷம் முதலியவைகளால் கொல்லப்பட்டு மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டுச் சாதாரணமாகவே தேக ஆரோக்கியத்துடனிருக்கின்றனவாம்.

மரணத்தின் முன் ஏற்படும் அதிர்ச்சிகளின் தன்மையைப் பற்றியும் ஆராய்ந்து வருகின்றார்கள். மிருகங்களிடத்து அநேகவிதமான அதிர்ச்சியை யுண்டுபண்ணிக் கொன்று மீண்டும் உயிர் கொடுத்து மிருக்கின்றனர். மரணத்திற்கு முன் ஏற்படும் அதிர்ச்சியால் இரத்தத்திலும் பல்வேறு அங்கங்களிலும் ஏற்படும் மாறுதல்களை நுணுக்கமாகக் கவனித்து வருகின்றனர். திடீரென்று மரணமடைவோருக்கு மீண்டும் உயிர்ப் பிச்சையளிக்கவல்ல ஆராய்ச்சிகளையும் ஆவலுடனே செய்து வருகிறார்கள். இவர்கள் வெற்றி பெற்றால், ஜன சமூகத்திற்கே மிகுந்த நன்மை கிடைக்கும்.



# சாமளவர்ண புடவை

'ராஜம்'

இதைப் படிக்கும் நீங்கள் ஒரு ஸ்ரீமதியாகவிருந்தால் சாமளவர்ண பட்டுப் புடவையின் மதிப்பும் அதன்மீது மாதர்களுக்கு உள்ள ஆசையும் உங்களுக்கு நன்கு தெரியும் அல்லவா?

புடவையென்றால் அதுதான் புடவை! சாமளவர்ணத்தை அப்புடவையில் தான் காணலாம். ஏன்! சாதாரணமாக அதை வாங்கி விட முடியுமா? அதன் விலை ரூபா நாற்பது. அந்த அபூர்வமான புடவை, பலர் கண்டு மகிழும் விதம் ஒரு சில்க் கடையில், வெளிப்புறம் மாட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது.

மாலையில் கதிரவன் இதைக்கண்டு 'ஆகாயத்தையே புடவையாக மாற்றி இங்கு தொங்கவிட்டார்களோ,' என்று சந்தேகித்துத் தனது கதிர்களையனுப்பி விஷயத்தை அறிந்து வரும்படி ஏவினன் போலும்! கதிரவன் கதிர்கள் புடவையின்மீது படவே, புடவை முன்னிலும் பன் மடங்கு தகத்தகாயமாய் பிரகாசித்தது.

அதைப் பார்த்து மகிழ்ந்தவர் பலர். என்ன தான் பார்த்தும் மனத்திருப்தியடையாமல், முன்னும் பின்னும், வலது புறமும் இடது புறமுமாக நகர்ந்து நகர்ந்து அதைப் பார்த்த வண்ணமே இருந்தாள் பதினெட்டு வயது நிறைந்த பாவை ஒருத்தி; 'அம்மாடி' என்று கூறிவியந்தாள். இந்த ஒரு சொல்லே அவளிடம் ஒரு வாலிபனை நெருங்க வைத்தது.

நெருங்கிய வாலிபன் நல்லவனோ, கெட்டவனோ, அன்றி அப்பெண்மணியைப் போலவே இரண்டுக்கும் மத்தியில் 'விட்டப் பூனைபோல்' இருப்பவனோ எனக்குத் தெரியாது. ஆனால், இயற்கையாகவோ, செயற்கையாகவோ தோன்றும் அழகிய பொருட்களைக் கண்டால் அவன் மனம் மாறும் என்று எனக்கு நிதரிசனமாகத் தோன்றியது.

வாலிபன் முதலில் புடவையைப் பார்த்தான். வியந்தான். பின் பெண்மணியைக் கண்டான், களிகொண்டான். பின்னும் புடவையைக் கவனித்தான். அதன் பின் பெண்மணியைக் கூர்ந்து நோக்கினன். பின் பேசலுற்றான்.

"பெண்ணே, உன்போன்ற அழகிகள் உடுத்துவதற்காகவே இப்புடவைகள் தோன்றுகின்றன. உன் தேகத்தின் மீது பட்டவுடனேயே புடவையின் அழகு மிகைப்படும்."

நங்கையும் வாலிபனைப் பார்த்தாள். தனது வலக்கையிலிருந்து—உபாதை யளித்த—பாரச் சுமையை இடக்கரத்துக்கு மாற்றிக் கொண்டாள். அவள் கூறினள்:—

"ஐயா! அது எனக்காக நெய்யப்பட்டதல்ல. இவ்வுலகில் ஒருவரும் அவ்விதம் கூற மாட்டார்கள்."

வாலிபன்:—(நகைத்தவாறு) பெண்ணே! ஒருவரும் நினைக்க வேண்டாம்; நானே உனக்காக அதை வாங்கினேனென்று வைத்துக்கொள்; உன்னிடம் அதை உடுத்திக் கொள்ளும்படி கூறி கொடுத்து விட்டேனென்று வைத்துக் கொள். முதலில் உன்னுடைய பெயர் என்ன வென்பதைத் தெரிவி.

பெண்மணி:—என் பெயர் கமலநாயகி. 'கமலா' என்று அழைப்பார்கள். ஆ!

அப்புடவை என்ன அழகாக விருக்கிறது! என் ஆயுள் காலம்வரை நான் அதை மறக்க மாட்டேன்.

வாலிபன் :—கமலா! இதோ பார்! உண்மை என்ன வென்றால் உன்னுடைய தந்த மேனிக்கு உகந்த புடவை அது. ம்... நீ உனது பாரத்தை ஒரு புறம் இறக்கி வைத்துவிட்டு என்னுடன் கடைக்குள் வந்து இன்னும் நன்றாக அதைப்பார். நான் அதை வாங்கி உனக்குப் பரிசாக அளிக்கிறேன். அதை நீ உடுத்துச் சலித்த பின் இன்னும் அழகிய புடவைகள் வாங்கித் தருகிறேன்.

விடன் கூறியதைக் கேட்ட பேதை நெஞ்சம் களிகொண்டு, ஐயத்துடன் கலந்து நின்றது. அப்புடவையை வேண்டியும் வேண்டாமலும் தாண்டவமாடியது. பின் ஆசைப் பேயினால் தூண்டப்பட்டவளாகிய பெண்மணி அவனோடு உட்செல்ல முடிவு கொண்டாள்.

இச்சமயத்தில் ஒரு பெரியார் அப்பக்கமாக வந்தார். வந்தவர், கமலா அங்கு பாரச்சுமையுடன் நிற்பதைக்கண்டு "கமலா! நீ எப்பொழுதும் சிற்றெறும்பு போல் ஓடியாடி வேலை செய்து கொண்டிருக்கிறாய்; ஏனம்மா! இங்கு ஏன் இப்பாரத்தைத் தாங்கிக்கொண்டு நிற்கிறாய்" என வினவினார்.

கமலா புடவையைப் பற்றி அவரிடம் கூறினாள். வாலிபன் பெரியாரைக் கண்டதும் என்ன நினைத்துக் கொண்டானோ, மாயமாய் மறைந்து விட்டான்.

பெரியவர் என்னமோ மனதில் யோசித்துக் கொண்டிருந்ததனால் கமலா கூறியது அனைத்தும் அவருக்குக் கேட்கவில்லை.

பெரியவர் :—பெண்ணே! நீ அப்புடவையை வாங்க வேண்டுமானால் அதற்குத் தக்க விலை கொடுக்க வேண்டுமே!

கமலா :—சுவாமி! நான் ஏன் கொடுக்க வேண்டும்? அந்த வாலிபரல்லவா எனக்கு வாங்கிக் கொடுப்பதாகக் கூறினார்.

இவ்விஷயத்தைக் கேட்டுப் பெரியவர் திடுக்கிட்டார்.

"பெண்ணே எந்த வாலிபன் அவ்விதம் கூறியவன்; இங்கு ஒருவனும் காணப்படவில்லையே! ஓஹோ உனக்கு அப்புடவையை பரிசாக வழங்கும் கர்ணன் மறைந்து விட்டானோ! குழந்தாய்! நீ பெற்றுக்கொள்ளவிருந்த இந்தப் பரிசு, தன் எடைக்குத் தக்க கண்ணீரை, நாளா வட்டத்தில், சிறிது சிறிதாக, அதன் விலையாக, உன்னிடமிருந்து பெற்றுவிடும். பேதாய், இப்புடவை உனக்கு வேண்டுமானால், நீ உழைக்க வேண்டும். உடலைக் கசக்கி, வயிற்றைச் சுருக்கி மெய் துயரமடைந்து, அல்லலுற்றலைந்து, பணம் சேர்க்க வேண்டும். ஆகவே, உழை! உழை!! உழை!!!" என்று கூறிச்சென்றார்.

கமலா வெட்கினாள்; கன்னங்கள் சிவக்கத் தலைகுனிந்தாள். "அந்தோ, புடவையின் விலை நாற்பது ரூபாய், நம் பாழும் மனம் அப்புடவையையே நாடுகிறது; அதைப் பரிசாகப் பெறின் தீங்குறும் எனப் பெரியார் கூறுகின்றார்—உழை. ஆ! இன்னும் எப்படி உழைக்கிறது! காலை முதல் மாலை வரை குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும்படி, நம்மை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருக்கிறார்கள்; இரண்டு ரூபாய் சம்பளத்தில், நாம் என்ன செய்ய முடியும்; நாற்பது ரூபாய், இருபது மாதச் சம்பளம்; நம்மால் இப்புடவையை வாங்க முடியுமா? நாம் வாங்கும் வரையில் புடவையும் இங்கேயே இருக்குமா? வேறு எவரேனும் வாங்கிக்கொண்டு சென்று விடமாட்டார்களா? ம்......இன்னும் எவ்வளவோ இதேமாதிரி புடவைகள் வரும்," என்று பல விதம் அவள் மனம் நினைந்துருகியது.





"ஆம்! நாம்........" என்று என்னவோ நினைத்தாள். முகமலர்ச்சி யடைந்தவளாய் வீடு நோக்கி நடந்தாள்.

.... .... ....

கமலாவுக்குத் தன் தாய் தந்தையர் எவர் என்பது தெரியாது. எவளோ ஒருத்தி வேண்டா வெறுப்பினால் பெற்று தர்மசாலையில் விடுத்துச் சென்று விட்டாள். இளகிய மனதையுடைய ஊரார் குழந்தைக்குக் 'கமலா' என்ற பெயரிட்டு வளர்த்து வந்தனர். வயது வந்த பின் தர்மப் பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்த்து விட்டனர். எட்டாவது வகுப்பு வரை படித்தாள். பின் உபாத்தியாயினி படிப்புக்கு அனுப்பப்பட்டாள். ஆங்கு இரண்டு வருடம் பயின்றாள். ஆனால் மாசற்ற அவள் நெஞ்சத்தைச் சோதனை செய்யக் கடவுள் அவளுடைய படிப்புக்கு மட்டம் போட்டு விட்டார். பரிதாபம். பரீட்சையில் தேறாமல் போகவே தர்மப்பள்ளிக்கூடத்தினின்றும் துரத்தப்பட்டாள்.

சில காலம் படாத பாடுபட்டாள். பின் ஒரு தனவந்தர் வீட்டையடைந்தாள். அவர் ஒரு தேசோபகாரி; அவருடைய மனையாளும் அப்படியே. இருவரும் கமலா மீது கருணை கொண்டு அவளைத் தம் பணிப்பெண்ணாக ஏற்றுக் கொண்டனர். அன்ன மிட்டு, உடை கொடுத்து மாதம் இரண்டு ரூபாய் சம்பளம் கொடுத்து உதவினர்.

தன் மனமுவந்து ஆங்கு பணி செய்து வந்தாள் கமலா. தனது சக்தியைப் பொருத்த மட்டிலும்—ஏன்! சக்திக்கு மீறியும்—உழைத்து வந்தாள். ஆ! கள்ளங் கபடமற்ற உல்லாச பறவை அவள்! அவளைக் கண்டோர் அனைவரும் அவள்மீது அன்பு கொண்டனர். இவ்விதம் தனது வாழ்க்கையை நடத்தி வந்த அந்நாட்களில் ஒரு தினம், அவள் அப்புடவையைப் பார்க்கும்படி நேரிட்டது.

.... .... ....

அப்பொழுது கமலாவுக்கு வயது பதினெட்டு. ஏற்கனவே மிகுந்த அழகையுடைய கமலா, வயது முதிர முதிர, தேகக்கட்டும் இளமைப் பொலிவும் விளங்க மிக அழகாகத் தோன்றினாள். எத்தனையோ காளைகள், அவளுடைய அன்பைப்பெற எண்ணி ஏங்கினர். அவளுடைய குலம் யாதோவென்ற ஐயம் சிலருக்கு. தனவந்தரைக்கண்டு சிலர் அஞ்சினர்.

தன் நிலை உணர்ந்த கமலாவை, இயற்கை வேதனையும், அவள்கற்ற அநாசார ஆங்கிலக் கல்வியும் படாத பாடு படுத்தின. நவீன நாகரீகங்களைக்கண்டு அவள் மனம் மலர்ந்தது. அறிவென்ற கொட்டாப்புளி, மலர்ந்த மனத்தை அடித்துச் சுருக்கிற்று. அவளிடம் இருவர் நட்பாளராக விருந்தனர். ஒருவர் நற்புத்தி; மற்றொருவர் துன்மதி.

துன்மதி உலக மாய்கையைப் பற்றிப் 'பன்னிப் பன்னி'க் கூறி அவளை மயக்கும். நற்புத்தி தீமைகளை எடுத்தோதி அவளை நடுங்கச் செய்யும். அன்று முதல் காசு சேர்க்க ஆரம்பித்தாள். ஒரு உண்டிகைப் பெட்டி வாங்கி, அதில் மாதந்தோறும் கிடைக்கும் இரண்டு ரூபாயில், சிலவு ஒரு ரூபா போக மிகுந்த ஒரு ரூபாயைப் போட்டு வந்தாள். 'நாற்பது ரூபாக்கள் சேர நாற்பது மாதங்கள் ஆகும்; இன்னும் மூன்று வருடங்கள் வரை நாம் காத்திருக்க வேண்டும்; நமக்கு அப்பொழுது இருபத்திரண்டாவது வயது நடக்கும்; எனவே நாம் நமது இளமைப் பருவத்திலேயே இம்மாதிரிப் புடவையை உடுத்துக் களிக்கலாம்' என்று எண்ணிமகிழ்ந்தாள்.

'நாம் ஒன்று நினைக்கத் தெய்வம்...........' என்ற பழமொழி உண்மையல்லவா?

கமலா மிக இளகிய நெஞ்சமுடையவள். அவளது நன்மதி ஆட்சி புரியுங்காலத்து உண்டி காலியாகி விடும். துன்மதி ஆட்சி புரியுங்காலத்து—மாதக்கடைசியில்— உண்டியில் ஒரு ரூபாய் விழும்.

எவனாவது ஒரு பிச்சைக்காரன் குழந்தை குட்டிகளுடன் எதிர்ப்பட்டால், அவளுடைய நன் மதி, அவள் சிலவுக்காக வைத்திருக்கும் ரூபாயை, அவனிடம் கொடுத்து விடும்படி தூண்டும். கெடுமதி இதை மறுக்கும். ஆனால் நன்மதியே வெல்லும். அவளுடைய தன் பெருமை, வறியோனிடமிருந்து சில்லரையை வாங்க மறுக்கும். கையிலிருந்த ரூபாய் சென்றுவிடின் அவளுடைய கைகள் தாமாகவே உண்டியை நாடும். உண்டியும் காலியாகும். மறுமுறையும் மாதமுடிவில் உண்டியில் ஒரு ரூபாய் விழும்.

சதாகாலமும் இவ்விதமே நடக்குமா? ஆறுவது மாத முடிவில் உண்டியில் மூன்று ரூபாய் இருந்தது. தற்செயலாகக் கமலாவின் பள்ளித்தோழி ஒருத்தி அவளைக் கண்டாள். தோழியைத் தன்னுடன் சில நாட்கள் தங்கி இருக்கும்படி கமலா வேண்டினாள். இரண்டு நாட்களுக்குப் பிறகு தோழிக்குக் கடுஞ்சுரங் கண்டது. உண்டியிலிருந்த ரூபாக்களும் அவளுடைய நோவுக்குப் பலியாகிவிட்டன.

இரண்டு வருடங்களாகின. உண்டிகையில் பதினைந்து ரூபாய்கள் சேர்ந்தன. கமலாவுக்குத் தனவந்தருடைய கைக்குழந்தை ராஜாவின் மீது மிகப்பிரியம். அதைத் தனது குழந்தை போலவே கவனித்து வந்தாள் கமலா. அவளைவிட்டு அக்குழவியும் பிரியாது. ஒரு நாள் அக்குழந்தை கடையிலுள்ள விளையாட்டுப்பதுமை ஒன்றைத் தாவியெடுத்தது. குழந்தை களித்ததைக் கண்டு கமலா அகமகிழ்ந்தாள். ஐந்து ரூபாய்கொடுத்து அப்பதுமையை வாங்கிக் குழந்தையிடம் கொடுத்து விட்டாள்.

. . . . . . . .

அத்தெருவில் உள்ள பணிமக்கள் அனைவரும் மாலைப்பொழுதில் கமலாவைக் கண்டு, அவளிடம் பேசிவிட்டுப் போவது வழக்கம். அவர்களனைவருக்கும் கமலா புகையிலை வாங்கிக் கொடுப்பாள். தினமும் இவ்விதம் அரையணா சிலவாகும்.

மூன்றாவது வருஷமுடிவில் உண்டிகையில் இருபது ரூபாய்கள் இருந்தன. ஒரு நாள் எவளோ ஒரு கிழவி, தன் பேரனுடன் கமலாவை அடைந்தாள். கமலா பரவசமடைந்தாள். கமலா தனக்கு உறவினள் என்று கூறினாள். அவளுடைய பெற்றோர்களைப் பற்றிப் புகழ்ந்து கூறினாள். கிழவி தன்னுடைய பேரப்பிள்ளையைப் படிக்கவைக்கப் பணமில்லாமல் கஷ்டப்படுவதாகக் கூறிவருந்தினாள். அவர்களிருவரையும் பார்க்கவே கமலா பரிதாபப்பட்டு உண்டியிலிருந்த பணத்தை கிழவியிடம் கவிழ்த்து விட்டாள்.

நான்காவது வருஷ முதலில் உண்டிகை காலி. இன்னும் புடவையை மறந்தபாடில்லை. தனது ஓய்வுப்பொழுதில் 'ஏதாவது தொழில் செய்து சம்பாதிக்கலாம்' என்று நினைத்துத் தன் எஜமானியை அனுமதி கேட்டாள். அனுமதி பெற்றாள். அவளுடைய மனதுக்குகந்த வேலையொன்றும் கிடைக்கவில்லை.

அவ்வூரில் ஜலக்கஷ்டம் அதிகம். ஒரு காபி ஹோட்டலில் தினம் நூறுகுடம் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றி மாதம் ஐந்து ரூபாய் பெற சம்மதித்தாள். அவள் தண்ணீருக்காகச் செல்லவேண்டியிருந்த இடம் சுமார் அரை மைல் தூரமிருக்கும்.

தனவந்தருடைய வீட்டில் காலை பத்து மணி வரை பணிசெய்வாள். பதினொரு மணிக்கு ஹோட்டலுக்குச் சென்று நீர்க்குடம் ஏந்துவாள். வேகாத வெய்யிலில் 'இட்ட அடி நோவ, எடுத்த அடிகொப்புளிக்க' நீர் நிறைந்த குடத்துடன் மாலை மூன்று மணி வரையில் நடந்து துடிப்பாள். அவள் மெய்வருந்தி





உழைக்கும் பொழுதெல்லாம் அவளுடைய மனம் 'உழை! உழை!! உழை!!!' என்று பெரியார் கூறியதையே ஜபிக்கும். தான் இயற்றிவந்த பணியை பிறிதொருவரிடமும் கூறினாளில்லை. இவ்விதம் மூன்று மாதங்கள் கழிந்தன.

ஹோட்டல் வாலாக்கள் சிறுகச் சிறுக 'சமிக்கை' முதலிய அற்பச் செயல்களை அவளிடம் காட்ட ஆரம்பித்தனர். அவர்களுடைய பாஷையும் வித்தியாசப்பட்டது. கமலா துடிதுடித்தாள். அவ்வேலையை விடுத்தாள். துயரமும் உழைப்பின் மிகுதியும் சேர்ந்து அவளுடைய தேகபலத்தை உறிஞ்சி விட்டன. காற்றாடி போலாகி விட்டாள். நாள் செல்லச் செல்ல தன் அனுபவமிகுதியால் உலகை வெறுத்தாள். அவளைக்கொடிய வைசூரி பற்றிக்கொண்டது. தனவந்தர் என்ன சிகிச்சை செய்தும் நோய் மிகத்தீவிரமாக மூண்டது.

.... .... ...

ஒருநாள் மாலை மணி ஐந்து. பெரியவர் தன் அறையில் வீற்றிருந்தார். தனவந்தருடைய ஆள் ஒருவன் அச்சமயம் அவரையணுகினான். கமலா மரணாவஸ்தையிலிருப்பதாகக் கூறினான். பெரியவர் திடுக்கிட்டார். உடனே எழுந்து அவனுடன் தனவந்தர் வீட்டுக்குப் புறப்பட்டார்.

கமலா இந்திரசபை போன்ற ஓர் அறையில் வெல் வெட்டுப் பஞ்சணையின் மீது கிடத்தப்பட்டிருந்தாள். அவளுடைய மேனி வாழைக் குருத்துப்போன்று மெலிந்து வெளுத்திருந்தது. மெல்லிய தென்றற்காற்று இயற்கை நறுமணத்துடன் கூடி ஜன்னல் வழியாக உள்ளே வீசிற்று. அறைமுழுதும் புஷ்பங்களின் வாசனை நிரம்பி இருந்தது. எங்கும் ஒரே அமைதி. ஆகாயம் ஒரே சாமள வர்ணத்துடன் சிறிதும் களங்கமின்றி விளங்கியது.

இளந்தென்றல் கமலாவின் கன்னங்களின் மீது மிருதுவாக முத்தமிட்டது. கமலா விழித்தாள். பெரியவரின் மீது அவளுடைய திருஷ்டிவிழுந்தது. கைகூப்பினாள். தழுதழுத்த குரலில் "சுவாமி! தாங்கள் அன்று அந்த வாலிபரிடமிருந்து புடவையைப் பெற வேண்டாமென்று தடுத்ததனால் நான் பிழைத்தேன். எனக்கு அது மிக்க இன்பத்தைக் கொடுத்தது. (ஆகாயத்தைச் சுட்டி) அதோ! பாரும்! இறக்கைகளுடன் கூடிய ஆயிரக்கணக்கான அழகிய யுவர்-யுவதிகள் அந்த சாமள வர்ணப் புடவையைத் தாங்கி எனக்காகக் கொண்டு வருகின்றனர். ஆ! அது எவ்வளவு அழகாகவும் பரிசுத்தமாகவும் இருக்கிறது. நான் அதைப் பெற்றுக் கொள்ளலாமல்லவா!" என்றாள்.

பெரியவருக்குத் துக்கம் தாளவில்லை. கண்களில் நீர்ததும்பியது. 'கண்ணே! அவர்கள் கொண்டு வரும்புடவை உனக்கு எம்மாத்திரம்! பயப்படாதே! அதிசீக்கிரம் நோய் குணப்பட்டு வரும்' என்றார்.

கமலாவின் முகத்தில் புன்முறுவல் பூத்தது! ஆஹா! அது முகத்திற்கு எவ்விதலாவண்யத்தையும் சாந்தத்தையும் அளித்தது! அவளுடைய கண்ணிமைகள் தாமாகவே மூடிக்கொண்டன. கமலா வானுலக சாமளவர்ணப் புடவையைப் பெற்றுவிட்டாள். அதை உடுத்திக் களிக்க வானுலகு சென்று விட்டாள்.




## புராதனக் குருட்டு நம்பிக்கை

பண்டையோர் எந்த அரூபியான ஆண் ஆவியாவது நம் பெண்களைக் காம இச்சையோடு பார்ப்பதனால் அவர்கள் கருப்பமாகி விடுவார்கள் என்று நம்பினர். இன்னும் பல தேசங்களில் இந்நம்பிக்கை இருப்பதாகத் தெரிகிறது. சிலர் இரு பெண்கள் தெருவழியாக வருகையில் காம உணர்ச்சியுடைய ஓர் ஆடவன் இருவரையும் பார்த்த வண்ணம் அவர்கட்கிடையில் புகுந்தால் இருவருக்கும் கருப்பம்தோன்றி விடுமென்று நம்புகின்றனர். ஆகவே, ஆடவரைக் கண்டால் பெண்கள் எதிர்த்துப் போகாமல் ஒதுங்கிப் போகும் வழக்கம் இந்தியாவிலிருந்து வருகிறது. கிரீக், டோங்கா, சோமா முதலிய நாடுகளில் பல கன்னிப் பெண்கள் ஆண் ஆவிகள் அணுகிக் கர்ப்பந் தரித்திருப்பதாகக் கூறுகிறார்கள். தென்னமெரிக்காவில் கன்னிப் பெண்களையும் வயதான பெண்களையும் சில பாம்புகளும், பேய் பிசாசுகளும் சேர்ந்து பிள்ளைகள் பெற்றதாக ஏராளமான கதைகள் உண்டு. பிலிப்பைன் தீவிலுள்ள சில மலை ஜாதியாரிடம் அக் கொள்கை இன்னமும் இருந்து வருகிறது. சந்திர சூரியர்களாலும் நக்ஷத்திரங்களாலும் கூடப் பெண்கள் கருத்தரிப்பதாகச் சொல்லப் படுகிறது. சமுத்திரங்களில் ஸ்நானம் செய்வதாலும், மழையில் நனைவதாலும் சில ஆகாரங்களை யுட்கொள்வதாலும் சிலர் ஆண் சம்பந்தமின்றிக் கருத்தரித்ததாகவும் நம்பப்படுகிறது.

சூரிய ஒளியானது பெண்கள் கர்ப்பத்துக்கு ஆதாரமாயிருக்கின்றதென்பது பல தேசங்களில் ஒத்துக் கொள்ளப்பட்டு வருகிறது. இந்தியாவில் இளம் பெண்கட்கு மாதவிடாய் கண்டிருக்கும்போது வெளியே விடப்படுவதில்லை. காரணம் அவர்களுக்குச் சூரிய ஒளியால் கர்ப்பமேற்பட்டு விடுமென்று எண்ணப் படுகிறது. மஹாபாரதத்தில் குந்திதேவி இவ்வாறு தான் சூரியனாலும் பின்னர் நக்ஷத்திரங்களாலும் கருத்தரிக்கப் பெற்றதாக எழுதப் பட்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள சுதேசிகளிடம் இவ்வழக்கம் இன்னமுமிருந்து வருகிறது. சந்திரனே பெண்களின் முதற் கணவன் என்ற கொள்கை பல நாடுகளில் காணப் படுகின்றன. பெண்கட்கு மாதவிடாய் காணப் படுவதற்குச் சந்திரன்தான் காரணமாம். இபிஸ் என்ற கடவுள் பசுவின்மீது சந்திரவொளி பட்டதால் பிறந்தாரென்று எகிப்தியர் எண்ணி வருகிறார்கள். இதே போல நக்ஷத்திரங்கட்கும் பெண்கட்குக் கருப்பம் கொடுக்கக் கூடிய சக்தியுண்டென்று சொல்லப் படுகிறது. முற்காலத்தில் இங்கிலாந்திலிருந்து வந்த கெல்டிக் ஜாதியாரின் தேவதையான எய்டான் அல்லது மாடாக் என்பவர் நக்ஷத்திரத்தினடியாய்ப் பிறந்ததாய்க் கருதப்படுகிறது. அத்தேவதையின் தாய் ஒருநாள் வெளியே தூங்குகையில் ஒரு நக்ஷத்திரம் எரிந்து அவளுடைய வாயில் விழுந்ததாம். ஆதல் பற்றியே எய்டான் பிறந்தானும். கிழக்கிந்தியத் தீவாகிய அம்பேன் யூலியாசே என்ற சிறு தீவில் அல்பினேஸ் என்ற தேவதை வணங்கப் பட்டு வருகிறது. இத்தேவதையும் அதன் தாய்க்கு விடியற்காலையில் தோன்றும் பெரிய நக்ஷத்திரத்தால் ஜனிப்பிக்கப் பட்டதென்று எண்ணப் படுகிறது.

## காற்றால் கருத்தரிக்கும் பெண்கள்

காற்றுக்கும் பெண்களைக் கருத்தரிக்கச் செய்யும் சக்தி யுண்டென்று எண்ணப்படுகிறது. ஹனுமான் வாயுபகவானுக்குப் பிறந்ததாகக் கூறுவது ஹிந்துக்கள் கூற்று. ஹீரா என்ற பெண் காற்றை உட்கொண்டு ஹெபாஸ்டோ என்ற வீரனைப் பெற்றதாகக் கிரேக்கர் நினைக்கின்றனர். அல்கானகின் பிரதேச வீரனாகிய மிச்சாடோவைக் கன்னிப் பெண்ணாகிய அவனது தாய் மேற்குத் திசையிலிருந்து வீசும் காற்றை யுட்கொண்டதால் பெற்றாள் என்று கதை யிருக்கின்றது. பின்லாந்தில் கன்னிப்பெண்ணா யிருந்த இல்மாத்தர் என்பவள் கிழக்குத் திக்கிலிருந்து வீசிய காற்றை யுட்கொண்டு விஜார்ட் வெய்னமொய்னன் என்னும் வீரனைப் பெற்றதாகக் கதைகள் கூறுகின்றன. காற்றில் பல அரூபிகள் கலந்திருப்பதால் பெண்கள் கர்ப்பம் தரிக்கின்றார்களென்று ஆஸ்திரேலியா சுதேசிகள் நினைக்கின்றார்கள். ஸ்காட்லாந்திலும் இவ்வித எண்ணமிருந்து வருகிறது.

## நீராவி முட்டையாகிக் குழந்தையாகப் பிறந்த கதை

மழையில் பெண்கள் நனைவதால் கருப்பமேற்படுவதுண்டென்று சில பகுதிகளில் எண்ணப்படுகிறது. மெக்ஸிகோவில் கன்னிப் பெண்ணொருத்தி மழையில் நனைந்ததால் கருவுற்று மாண்டகமா வென்ற அறிவியல் வாதியைப் பெற்றதாகக் கூறுகிறார்கள். சீனாவில் பரம்பரையாக ஒரு மூட நம்பிக்கை இருந்து வருகிறது. ஆகாயத்தில் நீராவி ஒரு முட்டை வடிவத்தில் திரண்டது என்றும், அது மெதுவாக இறங்கிக் கீழே இருந்த ஒரு பெண்ணின் வாய்க்குள் புகுந்ததென்றும், அப்பால் குழந்தையாகப் பிறந்ததென்றும் அக்குழந்தை பெரிய சாம்ராஜ்யத்தை ஆண்டதென்றும் சொல்வதே மேற்படி மூடக்கொள்கை. இந்த அரசனின் சந்ததியாரே போ—யு என்னும் வம்சத்தாரென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆஸ்திரியா, புஷ்மன் முதலிய நாடுகளில் மழைக் காலத்தில் பெண்கள் வெளியே இறங்குவதில்லை. ஹாட்டன் டாக் என்ற பிரதேசத்துப் பெண்கள் நிர்வாணமாக மழையில் நிற்பதாலேயே குழந்தைகள் பிறக்கின்றனவென்று நம்பி நல்ல மழை பெய்யும்போது நிர்வாணமாய்க் குளிக்கின்றார்கள். மங்கோலியாவில் மழையிலகப்பட்ட ஒரு ராஜகுமாரி ஒரு புதல்வனை பெற்றதாகக் கதை சொல்லப்படுகிறது.

# ரஷியாவில் மாதர் நிலை

திரு. டி. பி. பாண்டியன், எம். ஏ., பார்-அட்-லா.

லண்டன் பொருளாதார சாஸ்திரப் பள்ளிக்கூட கோஷ்டியுடன் நான் ரஷ்யாவுக்குச் சென்று சுமார் ஒரு வருஷம் ஆகிறது. நாங்கள் ரஷ்யாவில் மூன்று வாரங்களே தங்கியிருந்த போதிலும் எங்கு சென்றாலும் புதுமையைக் கண்டோம். புதிய அரசியல் அமைப்பு, நூதனப் பொருளாதார முறை, புதிய லட்சியம், உலக வாழ்க்கை ஒழுக்கத்தில், லட்சியத்தில் நூதன மாறுதல், ஏன் நாகரீகத்தின் சரித்திரத்திலேயே எல்லா அம்சங்களிலும் புதிய சகாப்தம் ஏற்பட்டிருப்பதை நாங்கள் எங்கும் தெளிவாகக் கண்டோம். ரஷ்யாவில் நடந்து வருவது ஒரு சாரமற்ற அரசியல் பரிசோதனையல்ல என்பதை நாங்கள் நன்கு உணர்ந்தோம். ரஷ்யா ஒரு பரந்த தேசம். ஆர்க்டிக் சமுத்திரத்தை ஒரு புறம் எல்லையாகவும் மற்றொரு புறம் காஸ்பியன் கடலை எல்லையாகவும் உடைத்தாயிருக்கிறது. உலக நிலப்பரப்பில் ஆறிலொரு பங்கு ரஷ்யா தேசம். அதன் ஜனத்தொகை சுமார் 20 கோடி. இவ்வளவு பெரிய தேசத்தில் எல்லாத் துறைகளிலும் ஸ்திரீகள் செய்து வரும் வேலையைக் கண்டு நாங்கள் ரொம்பவும் ஆச்சர்யமடைந்தோம்.

## சமத்துவம்

சோவியத் ரஷியாவில் ஸ்திரீகளுக்கு இருக்கும் சமத்துவத்தையும் சுதந்தரத்தையும் போல வேறு எந்த தேசத்திலுமே இல்லையென்று கூறுவது மிகையாகாது. அங்கு பெண்களுக்கு சட்டப்படியோ வழக்கப்படியோ குறைபாடுகள் ஒன்றும் கிடையாது. பொது வாழ்க்கையிலும் சரி, அவள் ஆடவருக்குச் சரிசமானமானவளே. எந்த வேலைக்கு அவள் லாயக்குள்ளவளாய் இருந்தபோதிலும் அந்த வேலைக்கு அவள் தாராளமாய் யாதொரு ஆட்சேபணையின்றி அமர்த்தப் படுகிறாள். மாஸ்கோவில் அநேகம் ஸ்திரீகள் டாக்டர்களாகவும், ஆசிரியர்களாகவும், எஞ்சினியர்களாகவும், டெக்னிஷியன்களாகவும், பத்திரிகாசிரியர்களாகவும், ஜட்ஜ்களாகவும் வேலை பார்த்து வருவதை நாங்கள் பார்த்தோம். நம் நாட்டிலிருக்கும் ஸ்தல ஸ்தாபன சபைகளுக்கு ஒப்பான ரஷ்ய சோவியத்துகளில் ஆடவர்களைக் காட்டிலும், மாதர்களே அதிகமாக இருக்கிறார்கள். ஸ்தானீகம், வியாபாரம், கப்பல் தொழில், விமான இலாகா போன்றவைகளிலும் மாதர் பணியாற்றி வருவதைக் கண்டது பெரும் களிப்பைத் தந்தது.

## மாதர் முன்னேற்றம்

சோவியத் ரஷியாவில் ஜனத்தொகையில் பாதியான மாதர்களையும் ஒழுங்குபடுத்தி சமூகத்தில் அவர்களும் பிரயோஜனமான அம்சங்களாக விளங்கும்படி செய்திருக்கிறார்கள். குறிப்பாக கைத்தொழில் அபிவிருத்தியில் அவர்களின் சேவை பெரிதும் மதிக்கப்பட்டு வருகிறது. எல்லாத் தொழிற்சாலைகளிலும், யந்திரசாலைகளிலும் ஸ்திரீகள் பெருவாரியாக வேலைபார்த்து வருகிறார்கள். நெசவுத் தொழிலில் தான் ஸ்திரீகள் ரொம்பவும் அதிகமாக வேலை செய்து வருகிறார்கள். சில நெசவுசாலைகளில் மிகவும் பொறுப்பு வாய்ந்ததும், அதிகார முள்ளதுமான டைரக்டர், மானேஜர் உத்தியோகங்களைக்கூட மாதர்களே நிர்வகித்து வருகிறார்கள்.



## பொதுக்குடி

ரஷ்ய தொழிற்சாலை ஒரு தனி பொதுக் குடி போலுள்ளது. அச்சாலையில் கீழ்கண்ட ஸ்தாபனங்களும் சேர்ந்திருக்கின்றன:—கிளப், சாப்பாட்டு அறை, தொழிற்சாலை, பள்ளிக்கூடம், சிறு குழந்தைகளை வளர்க்கும் நர்ஸிங் ஹோம் முதலியன. எல்லா தொழிலாளர்கள் குழந்தைகளும் பொது நர்ஸிங் ஹோமில் பராமரிக்கப்படுகின்றன. பள்ளிக்கூடத்தில் பொது கல்வியும் தொழில் கல்வியும் அவைகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளுடன் பொது உணவு சாலையும் இணைக்கப்பட்டிருப்பது ரஷ்யாவில் மட்டும் நூதனமாயுள்ளதொரு குறிப்பிடத்தக்க விஷயமாகும். எல்லா தொழிலாளர்களும் அந்த பொது உணவு விடுதியில்தான் சாப்பிடுகிறார்கள். எனவே ஸ்திரீ தொழிலாளர்கட்கு சமயற் கவலையும், இதர குடும்பக் கவலைகளும் இல்லாது போய்விடுகிறது.

## ரயில்வே

ரயில்வே நிர்வாகம், ரயில் வண்டிகளை ஓட்டுவது இவைகளிலும் மாதர்களிருக்கிறார்கள். மாஸ்கோவில் அநேக பெண்கள் ட்ரெயின் கன்ட்ரோலர்களாகவும், ஷ்டேஷன்மாஸ்டர்களாகவும் இருப்பதை நாம் பார்க்கலாம். லண்டனில் ஸ்திரீ மின்சார வண்டி ஓட்டியைக் காண முடியாது. ஆனால் மாஸ்கோவில் மின்சார வண்டியோட்டுபவர்களில் அநேக மாதர்களிருக்கிறார்கள். ஓடும் ட்ராம் வண்டிகளில் பலமணி நேரம் நின்றுகொண்டே வேலை செய்து வருவதால் தங்கள் தேகசௌக்கியத்துக்கு பங்கம் விளைந்த போதிலும் பெரும்பாலும் ஸ்திரீகளே ட்ராம் கண்டக்டர்களாக இருக்கிறார்கள்.

## வைத்திய ஆராய்ச்சி

ரஷ்யாவில் வைத்திய ஆராய்ச்சிகள் பொதுவாக பெண்களாலேயே நடத்தப்பட்டு வருகிறது.

நான் ஒரு வைத்திய ஆராய்ச்சி சாலைக்குச் சென்றிருந்தேன். அதன் தலைவி கிராப் வைத்திருந்த ஒரு நடுத்தர வயதுள்ள ஸ்திரீ. அவளைச் சுற்றி பூதக்கண்ணாடிகள் முதலிய ஆராய்ச்சிக் கருவிகள் கிடந்தன. அவளைச் சுற்றி அவளுக்கு ஆராய்ச்சி செய்வதில் உதவி செய்துவரும் மாதர்களிருந்தனர். சோவியத் குடியரசில் கீழ் பாகத்திலும் தென் பிரதேசத்திலும் மலேரியாவை யோட்டியடிக்க வேண்டி தாங்கள் செய்துவரும் வேலையைப்பற்றி அவள் எங்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினாள். அவளுக்கு உதவியாயிருந்த ஆடவர்கள் அவளது உத்திரவுகளைப் பள்ளிச் சிறுவர்கள்போல யாதொரு எதிர்ப்புமின்றி குதூகலமாய் நிறைவேற்றி வந்தார்கள்.

## கல்வி

ரஷ்யா பூராவும் கல்வியின் மேற்பார்வை மாதர்களின் கைவசமே இருந்து வருகிறது. கல்வி மந்திரி சபையில் முக்கிய ஸ்தானங்களை ஸ்திரீகளே வகித்து வருகிறார்கள். பள்ளிக்கூடங்கள், கலாசாலைகளில் உபயோகிக்க வேண்டிய புஸ்தகங்களைப் பரிசீலனை செய்வது, புதிய உபாத்தியாயர்கள் நியமிப்பது இதுபோன்ற அதிகாரங்களும் அவர்கள் கையிலேயே இருந்து வருகின்றன. படிப்பின்மையை நாட்டை விட்டுத் துறத்தும் புனித வேலையையும், வயது வந்தவர்கள் கல்வி வளர்ச்சியையும் அவர்கள் கவனித்து வருகிறார்கள். புதிதாகப் படையில் சேர்த்துக் கொள்ளப் படுபவர்களின் கல்வியையும் ஸ்திரீகளே கொடுத்து வருகிறார்கள். கல்விப் பிரசுரங்கள் தேசத்தில் பெருவாரியாக வினியோகிக்கப்பட்டுவருகின்றன.

## நீதி இலாகா

ஒரு தொழிலில் மங்கையர்கள் உன்னதமான வேலை செய்து வருகிறார்கள். அது நீதி பரிபாலன இலாக்காவே. ஒரு வயது முதிர்ந்த ஸ்திரீ பாரிஸ்டர் ஆபீஸில் நான் ஒரு மத்தியானம் பூராவும் உட்கார்ந்து அங்கு நடைபெற்ற விஷயங்களை கண்டு ரொம்பவும் சந்தோஷம் அடைந்தேன். அங்கு வந்த பிராதுகள் வினோதமாகவே யிருந்தன. எவ்வளவு சச்சரவுகளை கோர்ட்டுக்கு வெளியிலேயே ராஜி செய்ய முடியுமோ, அவ்வளவும் ராஜி செய்யப்பட்டு வருகின்றன. அவள் உதவியையும் புத்தியையும் நாடிவந்தவர்கள் பெரும்பாலும் கிருஷிகர்களே. வெகு தூரத்திலிருந்தும் அவரது கட்சிக்காரர்கள் அவளைத் தேடி வருகிறார்கள்.

## சினிமா

வியாதிகளைப்பற்றியும், அவைகளை எவ்வாறு தடுப்பது, எப்படி குணப்படுத்துவது என்பனவற்றைப்பற்றியும், விளக்கிக் காட்டும் சினிமாப் படங்களை ஊர் ஊராகச் சென்று சர்க்கார் அடிக்கடி ஜனங்களுக்குக் காட்டி வருகின்றனர். அந்த வேலையிலும் ஸ்திரீகள் தகுந்த அளவு பங்கெடுத்து வேலை செய்து வருகிறார்கள்.

## பெண்களின் சபைகள்

லெனின்கிராடில் மாதர்கள் கூட்டங்கள் சிலவற்றை நாங்கள் பார்க்கச் சென்றிருந்தோம். இள நங்கையர்கள் தோலால் செய்யப்பட்ட கோட்டணிந்தும், குறுகிய கால் சட்டைகளையுடுத்தும், தலையில் செகப்புக் கைகுட்டைகளைக் கட்டிக்கொண்டும் அணிவகுத்து ஒழுங்காகக் குதித்து நடந்துகொண்டே புரட்சி கீதங்களை கூட்டாகப்பாடும் காட்சி வெகு உருக்கமாக விருந்தது. அவர்கள் கூட்டங்களில் தீவிரமான பேச்சுகள் தான் நிறைந்திருந்தது. நகைப்பு காணவே முடியாது. பேச்சுகளில் ஹிட்லர் பெயரும் மாக்டோனால்டு பெயரும் பிரஸ்தாபிக்கப்படுகிறது. கூட்டம் கலையுமுன் "சர்வதேச" பாட்டுப் பாடப்படுகிறது. இப்பாட்டுப் பாடப்படும்பொழுது சபையினர் எழுந்து மிக மரியாதையுடன் லெனின் உருவச்சிலையை நோக்கி நிற்கிறார்கள்.

## கலைகள்

கண்காட்சி சாலைகள், புஸ்தக சாலைகள், ஸ்டால்கள் எல்லாவற்றிலும் மகளிரே





வேலை பார்த்து வருகின்றனர். ரெட்ஸ்குயரில் நடைபெற்ற ஒரு கலை கண்காட்சிக்கு நாங்கள் சென்றபொழுது பிரபல ரஷ்ய மாதர்களால் வரையப்பட்ட சித்திரங்களைக் கண்டு களித்தோம். காட்சியில் உலகில் இதர பாகங்களில் தொழிலாளர்களின் கஷ்டங்களையும், வாழ்க்கை நிலைமையும் அப்படங்கள் சித்தரித்துக் காட்டுகின்றன. ரஷ்ய தொழிலாளர்கள் எல்லோரும் நல்ல தேகக்கட்டுள்ளவர்களாயும், வீரம் செறிந்தவர்களாகவும், வாக்குவன்மைமிகுந்தவர்களாகவும், சுறுசுறுப்பின் அவதாரங்கள் போலவும் சித்திரங்களில் காட்டப்பட்டிருக்கின்றனர். முதலாளி தேசத்திலுள்ள தொழிலாளர்கள் ஆத்மாவை அழிக்கும் பளுமிகுந்த யந்திரத்தின் பாரம் தாங்கமாட்டாமல் முதுகு வளைந்து ஒடிந்துபோவது போல காட்டப்பட்டிருக்கின்றனர். "பூர்ஷ்வா"க்களையும் ரொம்பவும் பரிதாபமாகவே காட்டியிருக்கிறார்கள். இரட்டை நாடியுள்ள நடைப் பிணங்களாம் அவர்கள்.

## ராணுவம்

ரஷ்யாவைத் தவிர உலகிலே இதர தேசங்களிலெல்லாம் ராணுவத்தில் ஆடவர்கள் மட்டும்தான் சேரலாம். ஸ்திரீகளுக்கு இடமில்லை. ஆனால் ரஷ்யாவில் பெண்களும் சிப்பாய்களாகப் பயிற்சி அளிக்கப்படுகிறார்கள். 1934-ம் வருஷம் 20,000 ஸ்திரீகளுக்கு ராணுவப் பாசறைகளில் விமானப் பாதுகாப்பு பயிற்சியும், 460,000 மாதர்களுக்கு மெஷின்கன்கள் உபயோகிக்கும் முறையிலும், 50,000 ஸ்திரீகளுக்கு மோட்டார் ஓட்டுவதில் விசேஷ பயிற்சியும் அளிக்கப்பட்டு வந்தது. விமானம் ஓட்டுவதற்கு லைசென்சும் சர்டிபிகேட்டும் பெற்று ஆயிரக்கணக்கான மாதர்கள் இன்று ரஷ்யாவில் இருக்கிறார்கள். உயர்தரக் கல்வி பெற்ற ரஷ்ய மாதர்களும் சிகப்புப்படையில் கமாண்டர் வேலைக்கு தங்களை லாயக்குள்ளவர்களாக ஆக்கிக்கொள்ள வேண்டும். ஒரு சிறுமி தவராமல் எல்லோருக்கும் துப்பாக்கியை உபயோகிக்கும் விதம் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

## சிசு சம்ரட்சண ஸ்தாபனங்கள்

ரஷ்யாவிலுள்ள சிசு சம்ரட்சண ஸ்தாபனங்களும், பிரசவ ஆஸ்பத்திரிகளும் உலகிலுள்ள வேறு எந்த நாட்டிலுள்ளவைகளையும் விட மிகச்சிறந்தவை. வருஷத்தில் சராசரி 60 லட்சம் குழந்தைகள் அந்தப் பெரிய தேசத்தில் பிறக்கின்றன. தாயின் உடல் நலத்தையும், குழந்தைகளின் போஷணையையும் கவனித்துப் பாதுகாக்க சர்க்கார் போதிய வசதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மாஸ்கோவில் மட்டும் ஸ்திரீகள் தங்கள் வேலை சமயத்தில் குழந்தைகளை விட்டுப்போக 200 ஸ்தாபனங்களிலிருந்து வருகின்றன வென்றால் அதிகம் சொல்லத் தேவையில்லை. தாயை விட்டுப் பிரிந்திருக்கும் இக்குழந்தைகளை தகுந்த பயிற்சி பெற்ற தாதிகள் குளிப்பாட்டி, புது உடை உடுத்தி, உணவளித்து விளையாட்டுக்காட்டி போதனையும் செய்து பராமரிக்கிறார்கள். குடும்ப அலுவல்களைக் கூட இவ்விதமாக சோவியத் சர்க்கார் சமூக மயமாக்கி விட்டார்கள்.

## அழகிய கன்னி

ஒரு காலத்தில் வனப்புக்கும், அழகுக்கும், ஒய்யாரத்துக்கும், சாதுரியத்துக்

கும் பேர்போன மங்கையர்கள் நிறைந்திருந்த ரஷ்யாவில் இன்று அழகிய கன்னிகைகளைப் பார்ப்பது வெகு அபூர்வமாயிருக்கிறது. அவர்கள் தங்களை அதிக அலங்காரமும் அழகும் படுத்திக்கொள்வதில்லை. ஐரோப்பிய மாதர்களைப்போல ரஷ்யப் பெண்கள் பவுடர் மூஞ்சியில் அடித்துக்கொள்வதும், உதட்டுக்கு கலர் பூசிக்கொள்வதும், வாசனைத் திரவியங்களை உபயோகிப்பதும் கிடையாது. பொது உடைமைக் கூட்டங்களும், கிரிஷிகரின் அணிவகுப்புகளும் ஒருவாறு நடனங்களையும் இராக்கால களிப்புகளையும் ஒழித்துவிட்டன. வெறும் குதூகலம் எங்கும் காணமுடியாது. தங்கள் சந்தோஷத்தையெல்லாம் தேச முன்னேற்ற வேலையில் ஒவ்வொருவரும் காட்டி வருகிறார்கள். அதுவே அவர்களுக்கு சந்தோஷத்தையும் தருகிறது. காதல் சம்பந்தமான 'வினை தங்களைப்பற்றி இளமங்கையர்கள் சிந்திப்பது கிடையாது. காதல் பைத்தியம் தேசத்துக்கு விரோதமானதென்று கூடக் கருதப்படுகிறது. இந்தப் புதிய சமுதாயத்தில் வேலை செய்வதில்தான் கருத்து செலுத்தப்படுகிறது. ரஷ்ய சமுதாய வாழ்க்கையிலேயே புதிய மாறுதல்கள் இன்று செய்யப்பட்டு வருகின்றன.

# அழகு

## சினிமா நடிகைகளின் அபிப்பிராயங்கள்

*நார்மா ஷீரர்:*—பெண்கள் அழகானது கபடமற்ற தன்மையினாலல்லாது, செயற்கை யழகுகளால் சோபிக்காது. அப்படிச் செயற்கை யழகையே பெரிதும் செய்து கொள்பவர்கள் உலகத்தோரால் வெறுக்கப்படுவர்.

*ஜோன் கிராபோர்டு:*—வசீகரிக்கும் சக்தியே பெண்களது அழகுக்குக் காரணம். ஓர் பெண்ணானவள், தேக அமைப்பில் சற்றுக் குறைவாக இருந்தபோதிலும் தனது வசீகர சக்தியால் மற்றையோரது மனத்தை வென்றுவிட்டால், அவள் அதிக அழகுள்ளவளாகவே கருதப்படுகிறாள்.

*மிர்னா லாய்:*—பெண்களுக்கு அழகிய மிருதுவான சரீரமே அதிக அழகைத் தருகின்றது. சிலர் மயிலின் தோகையை விட்டுவிட்டுக் கோகிலத்தின் இன்குரலை மெச்சுகிறார்கள். ஆகையால் ஓர் பெண்மணி அழகுசெய்து கொள்வதில் செலவிடும் நேரத்தில் பாதியைத் தனது குரலின் சுக சாரீரத்தை விருத்தி செய்து கொள்வதில் செலவழித்தால் அதி சீக்கிரத்திலேயே அவளது அழகானது சோபிக்கும்.

*ஜேனெட் மாக்டொனல்டு:*—அழகின் சிறந்த மூலதனம் அதை நயத்துடன் வெளியிடுதலே. ஸ்திரமாக இருக்கும் ஓர் அழகிய கற்சிலையைவிட, நடமாடிக் கொண்டு அழகின் நயத்தை வெளியிடுவதே மிகவும் அனுபவிக்கத் தக்கதாகும்.

*ஜின் ஹார்லோ:*—மன நிம்மதியுடன் இருப்பதே அழகிற்கு வழி. அழகை அதுவே விருத்திசெய்யும்.



# கீரைகள்

ஸ்ரீமதி எஸ். நாகலக்ஷ்மி

“என்னடி, விடிஞ்சு எழுந்திரிச்சா நாசமாப் போறவள் கீரை கீரென்னு கத்திட்ரா, நீயும் அதை வாங்கிப்போட்டு என் பிராணனை வாங்கிடுராய். நோக்கு ஒரு தக்காளி, ஒரு பெங்களூர் கத்திரிக்காய், உருளைக் கிழங்கு வாங்கரதுன்னா கையிலே புத்து வச்சிடும். போதுண்டியம்மா கீரை. ஒன்னை இனிமேல் கீரைக் கண்ணுட்டின்னு கூப்பிட வேண்டியதுதான்” என்று கோபாலய்யர் தன் மனைவி சுந்தரிமீது ஒருநாள் பாய்ந்தார். அவர் உணவுப் பொருள்களின் குணகுணங்களை யுணர்ந்து சாப்பிடுபவர் அல்லர். எல்லா இங்கிலீஷ் நவநாகரீகக் காய்கறிகளும் நல்ல சத்துப் பொருள்களும் வைட்டமீன்களும் நிறைந்தவை என்றும், நம் நாட்டுக் காய்கறிகள் எல்லாம் உபயோகமற்றவை என்றும் அவர் கருதிவந்தார். சுந்தரிக்கோ பாட்டி போதனையால் நல்ல கீரைகளில் பைத்தியம். தினம் ஏதாவது ஒருவகைக் கீரையை வாங்கி வெகு ருசியாகவும் பக்குவமாகவும் சமைத்து சாப்பிடுவது தேக ஆரோக்கியத்துக்கு நல்லது என்று கருதினாள். அய்யர் போட்ட சத்தம் அவளிடத்தில் பிரதிபலிக்க ஆரம்பித்தது. உடனே அதே உச்சஸ்தாயியில் கீரைகளின் மகாத்மியத்தைப்பற்றி ஒரு பிரசங்கம் ஆரம்பித்தாள் சுந்தரி.

“போங்கோ, கீரை கீரென்னு ஏன் நடுங்குகிறீர். அதன் குணங்களை சற்றாவது உணர்ந்திருந்தீர்களானால் மலச்சிக்கல்னு எப்சம் சால்ட், மேக்செல்ப் உப்பு முதலியவற்றைத் தேடி அலையவேண்டாமே. நல்ல வேளை, ஞாயிற்றுக்கிழமை அகப்பட்டுண்டேள். சொல்லறத்தைக் கொஞ்சம் கவனமாய்க் கேளுங்க. பாட்டி, தாத்தாவெல்லாம் சொன்னதுதான் நானும் சொல்லப் போறேன். கேட்டதுக் கப்புறம் கீரை வேண்டாம்னு சொல்லரேளான்னு பார்க்கிறேன்.

வாஸ்தவத்தில் கீரை வகைகள் மானிடரின் உடல் நலத்துக்கு ரொம்பவும் உபயோகமானதெனக் கருதப்படுகிறது. அவைகளில் பலவித சத்துப்பொருள்களும் தேக வளர்ச்சிக் கானவைகளும் அடங்கியிருக்கின்றன. உடலுக்கு நன்மை விளைவிக்கக்கூடிய கால்ஷியம், சோடியம், குளோரைன் எனப்படும் உலோகப் பொருள்கள் கீரைகளில் நிரைந்திருக்கின்றன. கீரையில் ஒருவித உப்பு பதார்த்தம் இருக்கிறது. அதற்கு உணவுகளிலும், ஆகார பண்டங்களிலும் உள்ள புளிப்பை மாற்றி, மக்களின் இரத்தம் சரியாக இருக்கவேண்டிய நிலைக்கு கொண்டுவரும் சக்தி இருக்கிறது. இந்த குணத்தினால் குடல், சீவாசயம் முதலிய உறுப்புகளுக் கேற்படும் வியாதிகள் நீக்கப் படுகின்றன. கீரையின் வைத்தியப் பிரயோஜனங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. பல கீரைகளிலும் வைட்டமின் ஏ. பி. ஸி. என்னும் ஜீவசத்துப் பொருள்களும் அடங்கி யிருப்பதால் கரப்பான், சொறி முதலிய சர்ம வியாதிகளையும் தடுக்கும் சக்தி கீரை பெற்றிருக்கிறது. மலசுத்தி செய்வதில் கீரை இணையற்றது என்று எல்லா வைத்திய நிபுணர்களும் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். கீரையில் சர்க்கரைச் சத்துக் கிடையாது. எனவே அதை

நீரழிவு வியாதி யுள்ளவர்கள்கூட தாராள மாக பயமின்றி தங்கள் ஆகாரத்துடன் சேர்த்து உண்ணலாம். கீரையில் நீர்சத்து அதிகம். அதனால் தேகத்திலுள்ள உஷ்ணத்தைத் தணித்து குளிர்ச்சியைக் கொடுக்கும் குணமும் கீரைக்கு உண்டு.

அரைக்கீரை, சிறுகீரை, முளைக்கீரை, பசலைக்கீரை, முருங்கைக்கீரை, அகத்திக் கீரை, மணித்தக்காளிக் கீரை, புளிச்சக் கீரை, வெந்தயக்கீரை, மந்தாரை, புதினா, பொன்னாங்கணி, வேளைக்கீரை, தூதுவளை, காலிப்ளவர், முட்டைக்கோஸ் முதலியவை கள் எல்லாம் அநேகமாக ஒரே இனத்தைச் சார்ந்தவை. இவைகள் எங்கும் விளை விக்கக்கூடியன. ஒரு சிலவற்றைத் தவிர கீரை வகைகள் எல்லாம் மலிவாகக் கிடைக்கக் கூடியன.

புதினா, தூதுவளை முதலியவற்றை துவையல்செய்துசாப்பிட்டால் உடம்புக்கு நல்ல ஆரோக்கிய முண்டாகும். தூது வளையை நெய்யில் வருத்துச் சாப்பிட்டால் ஜலதோஷம், ஆஸ்த்மா முதலிய நோய்க ளுக்கு பரிகாரம் செய்யுமாம். பொன்னாங் கணி யென்ற கீரைக்கு அப்பெயர் வந்த தற்குக் காரணம் அது பொன்மேனியைக் கொடுக்கும் சக்தி வாய்ந்திருப்பதால்தான் என்று கூறுகிறார்கள். அகத்திக்கீரையை அரிசிகழுவின தண்ணீருடன் போட்டு வேகவைத்துச் சாப்பிட்டால் வாய்ப்புண் முதலிய நோவுகள் நீங்கும். அதுவும் உஷ்ணத்தைப் போக்கி குளிர்ச்சியைத் தர வல்லது. ஆகையால் ஏகாதசிப் பட்டினி கிடந்தவர்கள் துவாதசி யன்று குளிர்ச்சி பொருந்திய அகத்திக்கீரையையும், நெல் லிக்காயையும் உபயோகப்படுத்தவேண்டும் என்று பெரியவர்கள் சொல்லி யிருக்கிறார் கள். பசலைக்கீரை, மூளைக்கீரை, மணித் தக்காளி முதலியவற்றை பருப்பு தேங் காய் முதலியன போட்டு துவட்டல் செய் தும், புளியிலாக்கரியாகவும் செய்து சாப்பிட்டால் ருசியாகயிருப்பது மன்னி யில் தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் அவைகள் அளிக்கின்றன.

மேலும் கீரையை அதிகமாக வேக வைப்பதால் அதிலுள்ள வைட்டமின் ஏயும், ஸீயும் கெட்டுப்போகும். அதை வேகவைத்த தண்ணீரையும் அடியோடு இறுத்து விடுவதில் பிரயோஜன மில்லை. அப்படி இறுத்துவிட்டால் இந்தத் தண்ணீருடன் வைட்டமின்ஸீயும் கரைந்து போய்விடுகிறது. ஆகையால் கீரையை முதலில் நன்றாக சுத்தமான தண்ணீரில் போட்டு அலம்பிவிட்டு ஒரு பாத்திரத்தில் கொஞ்ச தண்ணீரில் அளவாக வேக வைத்து சமைத்துச் சாப்பிடுதல் பெறும் பயன் விளைவிக்கும்.

"என்ன வாயைத் திறந்தபடியே இருக் கேளே! புரிஞ்ஞதா?" என்று சுந்தரி தன் பேச்சை முடித்து அய்யரைக் கேட்டாள்.

கோபாலய்யர், "ஏதுடீ, நீகூட செந்தமி ழில்லே பிரசங்கம் பண்ணுவை போலிருக் கே. கீரை குணம் எப்படி யிருந்தாலும் இருக்கட்டும். நீ சொன்ன அழகு ரொம்ப குணமாக இருக்கே. இந்த வைத்திய குணங்களை ஆருடி கண்டா. என்னமோ கீரைன்னு வெறுப்பா யிருக்கு. இனிமே அப்படி சள்ளுனு விழமாட்டேண்டி. அப் பப்ப நன்னா ஏதாவது கீரையைச் சமைச்சு வையடி, சாப்பிடுரேன். நான் வரவரக் கறுப்பாயிண்டு வரேன்னு சாம்பு சொன் னாண்டி. பொன்போலே ஆரத்துக்கு ஒரு கீரை இருக்குன்னெயே, அதை அடிக் கடி கறிபண்ணித்தாடி" என்று வெகு குதூ கலமாகப் பேசினார். சுந்தரியும் தான் வெற்றிக்கொடி நாட்டிவிட்டோம், எப்சம் சால்ட்டுக்கும், மெக்சல்ப் உப்புக்கும் இனித் தன்வீட்டில் இடமில்லையென்று களிப்புடன் சமையலறைக்குள் புகுந்தாள். கோபாலய்யர் பொன்னாங்கணிக் கீரைக் கூட்டு வாசனையை எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்.





காரைக்குடி

ஸ்ரீமதி. குப. சிவ. பழ. அழகம்மை ஆச்சி.

[சென்னை மாகாணம் இராமநாதபுரம் ஜில்லாவில் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகப் பெண்மணி களில் முதன் முதலாக ஸ்தல ஸ்தாபனங்களில் அங்கம் வகிப்பவர் ஸ்ரீமதி அழகம்மை ஆச்சியவர்களே.]



வெண்ணை திருடி.

# மோகனா

திரு எஸ். அனந்தகிருஷ்ணன்

குமலாபுரி என்னும் ஊரில் "லக்ஷ்மி விலாஸ்" என்ற ஓர் மெத்தை வீட்டில் மூவர் உட்கார்ந்து ஸம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். அம்மூவரில் ஒருவனாகிய நீலகண்டன் என்பவன் மற்றிருவரின் மருமகன். மற்ற இருவரும் ஸகோதரர் ஆவர்கள். இப்படியாக ஸம்பாஷித்துக் கொண்டிருக்கையில் மணி பத்து அடித்தது. உடனே நீலகண்டன், "பேச்சு ஸ்வாரஸ்யத்தில் காலையில் ஊருக்குப் போக வேண்டு மென்பதைக்கூட மறந்துவிட்டேன். நேரமாகின்றது, சற்று கண் அயர்வோம்," என்று சொல்லவே, மூவரும் படுக்கைக்குச் சென்றார்கள்.

பொழுதுபுலர்ந்தது. நீலகண்டன் பயணத்திற்கு ஆயத்தமானான். உடனே பரிசாரகன் மூன்று கோப்பைகளில் காப்பி எடுத்துக் கொண்டுவந்து நீலகண்டன் உட்கார்ந்திருந்த அறையில் வைத்துவிட்டுப் போனான். நீலகண்டன் பயணப்பட வேண்டி யிருந்ததினால் முன்பாகவே காப்பி அருந்திவிட்டான். பிறகு ரயிலுக்கு நேரமாகி விட்டதை அறிந்து மாமன்மார்களிடம் விடைபெற்றுக் கொண்டான்.

மத்தியானம் மணி பதினொன்றிருக்கும், போலீஸ் இன்ஸ்பெக்டர் கஜபதி வீட்டில் டெலிபோன் மணி "கணகண" வென்று அடித்தது. உடனே இன்ஸ்பெக்டர் டெலிபோனை எடுத்து காதில் வைத்துக்கொண்டு "ஹலோ" வென்று கேட்கவே, அதற்கு அவ்விடமிருந்து "லக்ஷ்மி விலாஸத்தில் ஓர் கொலை" என்றும், சீக்கிரம் வரவேண்டுமென்றும் பதில் வந்தது. உடனே இன்ஸ்பெக்டர் லக்ஷ்மி விலாஸிற்குச் சென்று அங்கே நடந்ததை விசாரித்தார்.

அதாவது அவ்வீட்டிற்கு அதிபதியானவரும் மிக்க செல்வந்தருமான ராஜேந்திரர் என்பவர் திடீரென்று தனது அறையில் யாராலோ கொலை செய்யப்பட்டுக் கிடப்பதாயும், அவரது தம்பியாகிய சந்திரசேகரர் மூர்ச்சையாய்க் கிடப்பதாயும் அவ்விடத்து வேலைக்காரர்கள் சொன்னார்கள். பிறகு இன்ஸ்பெக்டர் அவ்வறைக்குச் சென்று, தான் கண்ட எல்லாவற்றையும் விபரமாகக் குறித்துக்கொண்டு, சீக்கிரம் ஒரு டாக்டரை வரவழைத்து மூர்ச்சையாய்க்கிடந்த சந்திரசேகரரை பார்க்கச் செய்தார். டாக்டர் உடம்பை நன்றாய்ப் பரிசோதித்து விட்டு, இன்ஸ்பெக்டரை நோக்கி, 'இந்த மனிதருக்கு நாலு மணி நேரம் நிலைத்திருக்கக்கூடிய மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சற்று நேரத்திற்குள் இவருக்கு மயக்கம் தெளிந்துவிடும்' என்று உரைத்தார். அரை மணி நேரம் கழிந்தது. சந்திரசேகரருக்கு சற்று பிரக்ஞை வர ஆரம்பித்தது. அங்குமிங்கும் புரள ஆரம்பித்தார். உடனே அங்கிருந்த வேலைக்காரர்கள், டாக்டர் சொல்படி சிறிது ஜலம் கொண்டுவந்து அவரை அருந்தச்செய்து, விசிறியால் விசிறி சற்று களைப்பாறவைத்தார்கள்.

பிறகு மெதுவாக நடந்த ஸங்கதிகளை வினவ அவர் தமக்கு காலையில் காப்பி சாப்பிட்டதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது என்று சொன்னார்.

இன்ஸ்பெக்டர்: (சற்று ஆலோசித்து) உமது மருமகனுக்கும் உங்களுக்கும் ஏதாவது மனஸ்தாப மேற்பட்டதுண்டா?

சந்திரசேகரர்: ஒருபோதுமில்லை. நாங்கள் மூன்று பேரும் சொந்த சகோதரர்களைக் காட்டிலும் மேலான அன்பும், விஸ்வாசத்தோடு மிருக்கிறவர்கள். அதுவுமல்லாமல் அவர் இன்று காலையில் அயலூருக்குச் சென்றுவிட்டார். நாங்களிருவரும்தான் அவரை வழி கூட அனுப்பினோம்.

இன்ஸ்பெக்டர்: வேலைக்காரர்களைப் பார்த்து "நீங்கள் உங்கள் எஜமானரை எப்பொழுது கடைசியாகப் பார்த்தீர்கள்? அப்பொழுது அவர்கள்கூட வேறு யாராகிலும் இருந்தார்களா? அவர் அப்பொழுது எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். எல்லா விவரங்களையும் உங்களுக்குத் தெரிந்தமட்டில் சொல்லுங்கள்," என்று உரைத்தார்.

உடனே பக்கத்தில் நின்று கொண்டிருந்த சமையல்காரன் சபாபதி தான் காலையில் அவர்களுக்கு காப்பி கொடுத்ததையும், அவர்கள் அருந்தியதையும், பிறகு மருமானாகிய நீலகண்டன் அயலூருக்குச் சென்றதையும் அறிவித்தான்.

இன்ஸ்பெக்டர்: நீலகண்டன் போன பின்பு இவ்விடம் யாராவது வந்ததுண்டா?

சபாபதி: ஒருவயது சென்ற கிழவரைத் தவிர வேறுயாரும் வரவில்லை.

இன்ஸ்பெக்டர்: அக்கிழவர் அந்த அறையில் சென்றிருந்தபொழுது நீ அறைப்பக்கம் எதற்காவது வந்துபோனதுண்டா?

சபாபதி: ஆம், என் சட்டை அந்த அறைப் பக்கம் மாட்டியிருந்ததால் அதை எடுப்பதற்குப் போனேன். ஆனால் அப்பொழுது அந்த அறை கதவு சாத்தப்பட்டிருந்தது மல்லாமல், அவ்விடத்தில் நிசப்தமும் குடிகொண்டிருந்தது. நான் ரகஸ்யமாக ஏதோ பேசிக்கொண்டிருக்கலாமென்று நினைத்து திரும்பவும் சமயலறைக்குச் சென்றுவிட்டேன். பத்து நிமிஷம் கழிந்ததும் யாரோ வேகமாக ஓடுவதுபோல் ஒரு சப்தம் கேட்டது. அதை நான் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. பிறகு நான் என் வழக்கம்போல் பதினொரு மணிக்கு அவர்களிருவரையும் சாப்பிடக் கூப்பிடுவதற்காகச் செல்லவும் இவ்வித கோரக்காக்ஷியை கண்ணுற்று உடனே டெலிபோனில் தங்களைக் கூப்பிட்டேன்.

இன்ஸ்பெக்டர் கஜபதிக்கு ஒன்றும் விளங்கவில்லை. மௌனமாக சற்று ஆலோசித்தார். ராஜேந்திரர் கொலையுண்டு கிடக்கும் அறையை நன்றாகச் சுற்றிப் பார்த்தார். மூலையில் கத்தி ஒன்று தென்பட்டது. அது ரத்தத்தில் தோய்ந்திருந்ததனால் ஒரே கருப்பாயிருந்தது. அதை நன்றாக உற்றுப்பார்த்தபொழுது "ச" என்ற ஒரு எழுத்து மாத்திரம் தென்பட்டது. ஒருவருக்கும் தெரியாமல் அதைத் தன் சட்டைப்பைக்குள் வைத்துவிட்டு சந்திரசேகரரை நோக்கி, "வீட்டில் ஏதாவது திருட்டுப்போயிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்," என்று சொல்லவே, சந்திரசேகரர் தனது சட்டைப்பையைத் தட்டிப் பார்த்தார். பின்பு ஏதோ பைத்தியம் பிடித்தவனைப்போல் அங்குமிங்கும் ஓடினார். சாவி அகப்படவில்லை. இரும்புப் பெட்டி திறந்து கிடந்தது. சிலதுண்டுக் காகிதங்களைத் . தவிர வேறு ஒன்றுமில்லை. அதற்கு முதல் நாள் தான் இம்பீரியல் பாங்கியிலிருந்து சபாபதியைக்கொண்டு வாங்கிவரச் சொன்ன ரூபாய் 50,000 மும் காணவில்லை.

இதை யறிந்த இன்ஸ்பெக்டர் உடனே சபாபதியை அழைத்து தன்னிடமிருந்த கத்தியை காண்பித்து "இது யாருடையது என்பது உனக்குத் தெரியுமா?" என்று கேட்க, உடனே சபாபதி திடுக்கிட்டு அக்கத்தி தனக்கு தன் யஜமானனால் வீட்டு வேலைக்காக வாங்கிக் கொடுக்கப்பட்டிருந்ததாயும், தான் மூர்த்தின





நான் காலையில் தனது வேலை முடிந்ததும் சமையல் அறையில் வைத்திருந்ததாயும், பிறகு ஸாயங்காலம் அதைப் பார்த்தபொழுது கிடைக்காததால் தோட்டக்காரனிடமிருந்து அவன் கத்தியை வாங்கி தன் வேலையை முடித்துக் கொண்டதாயும் கூறினான்.

இதைக்கேட்ட இன்ஸ்பெக்டர் நகைத்து மற்றவர்களைப் பார்த்து "நான் இக்கொலையின் காரணம் சபாபதி என்றே நினைக்கின்றேன்; அவன் சொல்வதை நான் சற்றாகிலும் நம்பவில்லை. அதற்குப்போதுமான இரண்டு துப்பும் கிடைத்திருக்கிறது. ஒன்று அவனுடைய கத்தி அவ்விடத்தில் கிடப்பது. இரண்டாவது அவன் அஸாதாரணமாக சட்டை எடுக்கவந்ததாகச் சொல்வது. இன்னும் உங்களுக்கு ஸந்தேகமிருப்பின் இன்னுமொரு ஸமாசாரமும் நான் சொல்லுகிறேன். இன்றுகாலையில் அவன்தான் காப்பி கொடுத்திருக்கிறான். அக்காப்பியைக் குடித்த ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் சந்திரசேகரர்தனக்கு ஒன்றும்தெரியாமல் மூர்ச்சித்து விழுந்து விட்டதாகவும் தெரிகிறது. ஆகையால் இவன்தான் காப்பியில் மயக்க மருந்து ஒன்றைக் கலந்து இருவருக்கும் கொடுத்துவிட்டு, பிறகு அவர் மயங்கி இருக்கும் ஸமயத்தில் வந்து ராஜேந்திரரைக் கொலை செய்துவிட்டு, சாவியை எடுத்து பெட்டியைத் திறந்து ரூபாயையும் களவுசெய்து எடுத்துக்கொண்டு வெளியில் சென்று அதைப் பத்திரப்படுத்திவிட்டு, தன் மீது யாரும் ஸந்தேகம் கொள்ளாதிருக்கும் பொருட்டு டெலிபோனிலும் கூப்பிட்டுச் சொல்லி யிருக்கிறான்," என்று சொல்லி முடித்தார்.

இதைக்கேட்ட அங்கிருந்தவர்கள் பதில் ஒன்றும் சொல்ல முடியாமல், இன்ஸ்பெக்டர் சொல்வதை ஆமோதிக்கவே—பாவம்—ஒன்றுமறியாத நமது சபாபதியின் பேரில் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது.

வெள்ளிக்கிழமை சுமார் இரண்டு மணியிருக்கும். சபாபதியை விசாரணைக்காக ஜட்ஜ் கனகசபை முன்புகொண்டு நிறுத்தினார்கள். வழக்கப்படி இன்ஸ்பெக்டர் நடந்ததை யெல்லாம் ஸவிஸ்தாரமாக உரைத்தார். ஒன்றின்மேல் ஒன்றாக குற்றம் சாற்றப்படுவதைக் கண்ட சபாபதி ஒன்றும் பேச முடியாதவனாகி கண்ணீரை தாரை தாரையாகப் பெருக்கினான். அதிகமாகக் கூறுவானேன். கொலை களவாகிய இரண்டு குற்றங்களும் சாட்டப்பட்டது. மரண தண்டனையும் விதித்தார்கள்.

குறித்த நேரம் வந்தது. சிறையில் எங்கும் ஒரே ஆரவாரமாயிருந்தது. ஜட்ஜும் மற்று முள்ளமேல் அதிகாரிகளும் வந்து சேர்ந்தார்கள். சபாபதி தூக்கு மேடையில் நின்றுகொண்டிருந்தான். அவன் இரு பக்கங்களிலும் இரு கொலையாளிகள் மின்னலையும் பழிக்கும் உருவிய கத்தியுடன் தண்டனையை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாயிருந்தார்கள். வெளியில் நின்று கொண்டிருந்த ஜனக்கூட்டத்தை ஒருவராலும் கணக்கிடமுடியாது. குற்றவாளியாகிய சபாபதி யாதொரு மனக்கலக்கமுமின்றி மிகவும் தைரியத்துடன் "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்," என்ற ஒரே நம்பிக்கை யோடிருந்தான். நேரம் நெருங்கிவிடவே அவன் மனமும் சற்று கலங்க ஆரம்பித்தது. மிகவும் பரிதாபமான குரலில், "ஐயோ! ஜகதீசா, ஒரு குற்றமும் அறியாத என்னை நீர் இக்கதிக்கு ஆளாக்குவது நியாயமா? உம்மை 'ஆபத்பாந்தவன்' என்றும், 'அனாதரக்ஷகன்' 'தீனபந்து' வென்றும் வேதங்களும் மற்றும் சாஸ்திரங்களும் முறையிடுகின்றனவே? இதுவரையில் நான் உன்னையே நம்பி இருந்தேனே! நீயும் என்னை கைவிட்டனையா! ஜகதீசா! என் உயிர்போவதைப்பற்றி நான் சிறிதும் மனவருத்தப்படவில்லை, ஆனால்......... ஆனால்......... நான் கனவிலும் நினைக்காத கொலைகளவு ஆகிய இவ்விரு குற்றங்களுக்காக என் உயிரைக் கொடுக்க வேண்டியதாயிற்றே என்பதை

நினைத்துத்தான் நான் வருந்துகின்றேன். இப்பெரும் பழியை நீக்கி, பின்பு என் உயிர் போவதாயிருந்தாலும் நான் வருந்தமாட்டேன். அப்பனே! ஆதிமூலமே என்று அழைத்த யானையிடத்தில் நீர் அன்பு பாராட்டவில்லையா? ஐயோ! இன்னும் இரண்டு நிமிஷத்தில் என் உயிரையும் வாங்கிவிடுவார்களே" என்று பலவாறு சொல்லி மனம் நொந்துகொண்டு, மூர்ச்சை அடைந்து பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கொலையாளி மீது சாய்ந்தான்.

அந்த நெருக்கடியான ஸமயத்தில் அக்கூட்டத்தில் திடீரென்று "நில்லுங்கள், நில்லுங்கள் அவசரப்படாதேயுங்கள்" என்று ஒரு சப்தம் கேட்டது. உடனே எல்லோரும் அச்சப்தம் வரும் திசையை நோக்கினார்கள். அச்சப்தமிட்டவர்கள், பதினெட்டு வயதென மதிக்கப்பட்ட ஓர் இளம்வாலிபனும் மற்றும் பத்து, பதினைந்து போலீஸ் வீரர்களுமே யாவர். அவர்கள் ஒரு பிச்சைக்காரனையும் பிடித்து வைத்துக் கொண்டிருந்தார்கள். ஐந்து நிமிட நேரம் சிறையில் கலவரமாயிருந்தது. ஜனங்களெல்லோரும் விஷயம் தெரிவதற்கு ஆவல் கொண்டிருந்தார்கள். அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டரும் மற்றுமுள்ள மேலதிகாரிகளும் வந்தவர்களை நோக்கி காரணம் யாதென்று விசாரிக்க, அவ்வாலிபன் தன்னிடமிருந்த பிச்சைக்காரனைக் காட்டி, "அந்தக் கொலையைச் செய்தவன் இவனே யாவன். சபாபதியல்ல. நான் சொல்லுவதை நிரூபிப்பதற்கு போதுமான சாக்ஷியங்களும் கூறுகின்றேன். தயவுசெய்து சற்று கவனமாய் கேட்கவேணுமென்று" சொன்னார்.

இன்ஸ்பெக்டர்:— தெருத் தெருவாய்த் திரிந்து கொண்டிருக்கும் ஏதோ ஒரு ஏழைப் பிச்சைக்காரனை இழுத்து வந்து இவன்தான் குற்றவாளி என்கிறாயே? சந்திரசேகருடைய செல்வாக்கென்ன, கௌரவமென்ன! மதிப்பென்ன! இவன் அவர்களை கொலை செய்யவா? எது? ஒருபொழுதுமிராது" என்று சொன்னார்.

இதைக்கேட்ட அவ்வாலிபன் சிரித்துக்கொண்டே, "பிரபுவே! நீங்கள் இப்பொழுது சில வேடிக்கைகளை இங்கே பார்க்கலாம். நான் இரண்டு நிமிடத்தில் வருகிறேன்," என்று சொல்லிக்கொண்டே அப்பிச்சைக்காரனை அறைக்கு இழுத்துச்சென்று, பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் ஜனத்திரள் முன்புகிறுத்தவே, ஜனங்களெல்லோரும், "இவர்தான், இவர்தான், விடாதேயுங்கள்," என்று உரக்க கூச்சலிட்டு ஓடி வந்தார்கள். இவர்தான் அன்றையதினம் ராஜேந்திரரைக் காண வந்த கிழவர்.

இன்ஸ்பெக்டர் கிழவரை பார்த்துவிட்டு, பிறகு அவ்வாலிபனை நோக்கி இவரைப் பற்றிய விருத்தாந்தமென்னவென்று கேட்க அவ்வாலிபன், "சுவாமி! சற்று பொறுத்துக்கொள்ள வேணும்.. இன்னும் சில வேடிக்கைகள் இதிலிருக்கின்றன. முற்றிலும் காண்பித்துவிட்டு எல்லாவற்றையும் ஸவிஸ்தாரமாகக் கூறுகிறேன்" என்று உரைத்துவிட்டு அக்கிழவரின் பொய்த் தாடி, மீசை, எல்லாவற்றையும் இழுத்து எறிந்துவிடவே ஜனங்களின் ஆச்சரியம் பதின் மடங்கு அதிகரித்தது.

கூட்டத்திலிருந்த சந்திரசேகருக்கு தான் காண்பது கனவா, நினைவா என்று ஒன்றும் புலப்படவில்லை. தன் பக்கத்தில் அழைத்துவரச்சொல்லி உற்று நோக்கினார். யார் நின்றார்கள்? மருமானாகிய நீலகண்டனே குனிந்த தலையுடன் நிற்கக்கண்டார். உடனே அவருடைய கண்கள் தீப்பொறிபோல் சிவந்தன. கைகள் இரண்டும் "படபட" வென்று துடிக்க ஆரம்பித்தன. அடக்க முடியாத கோபத்தினால் அவனை ஒரே அறையாய் அறைந்துவிடலாமென்று எண்ணினார். உடனே பக்கத்தில் நின்றுகொண்டிருந்தவர்கள் பிடித்துக்கொள்ளவே, "நீலகண்டா!





நீயா இதெல்லாவற்றிற்கும் மூலகாரணம்? இந்த மாதிரியாகவா உனக்கு புத்தி தோன்ற வேண்டும்? என் அருமைத் தங்கையின் ஒரே புதல்வனென்று நீ பிறந்தது முதல் உன்னை வைத்து தாலாட்டுவதும், கொஞ்சுவதும், நீ விரும்புவதையெல்லாம் வாங்கித்தருவதுமாயிருந்த உன் மாமனுக்கா இந்த கைம்மாறு. பட்டப்பகலில் படுகொலை செய்யும் இக்கைகளுக்கோ வைர மோதிரங்களும் மற்றும் ஆபரணங்களும் வாங்கி யிட்டேன். 'வளர்த்த கிடா மாரில் பாய்ந்தது' என்று சொல்லுவார்களே அதுவும் உன்பால் உண்மையாயிற்றே. உன் நெஞ்சம் பதரவில்லையா? கைகள் நடுங்கவில்லையா? உன் மனம் கல்லா?" என்று பலவாறு சொன்னார்.

உடனே இன்ஸ்பெக்டரும், மற்ற உத்தியோகஸ்தர்களும் அதிக ஆச்சர்யத்துடன் "இதென்ன, ஒன்றின்மேல் ஒன்று மர்மமாயிருக்கிறதே," என்று சொல்லி அவ்வாலிபரைப் பார்த்து "ஐயா! இவையெல்லாவற்றையும் எங்களுக்கு விவரமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்கவே, அவ்வாலிபன், "மகாகனம் வாய்ந்த கோர்ட்டாரவர்களே! இத்துடன் இவருடைய மூன்று அவதாரங்களும் ஆகிவிட்டது. இனி நான் நடந்த விருத்தாந்தம் யாவற்றையும் சொல்லுகிறேன் கேளுங்கள்," என்று பின்வருமாறு சொல்லலுற்றான்.

"கொலை நடந்த அன்று காலையில் நான் லக்ஷ்மி விலாசத்தின் வாயிலில் ஒரு காரியமாக நின்று கொண்டிருந்தேன். அப்பொழுது மருமானாகிய நீலகண்டன் பயணத்திற்காக விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தான். அவன் கையில் அணிந்துகொண்டிருந்த மோதிரம் எனது உயிர்த் தோழர் ஒருவருடையது போல் தோற்றப்பட்டமையால், அதைப்பற்றி அவரைக் கேட்கலாமென்று கொஞ்சதூரம் பின் தொடர்ந்தேன். ராஜேந்திரர் மாளிகை மறையவே இவர் ஒரு சிறு வீட்டிற்குள் நுழைந்தார். நான் அரைமணி நேரம் காத்திருந்தும் போனவர் திரும்பவில்லை. பிறகு ஒரு வயது சென்ற கிழவர் கதவைத் திறந்து ராஜேந்திரர் மாளிகை யிருக்குமிடத்தை நோக்கிப் புறப்பட்டார். நான் அவரை "நீலகண்டன் என்ன செய்கிறான்" என்று கேட்க, ஒன்றும் பேசாமல் சற்று வேகமாக நடக்க ஆரம்பித்தார். பிறகு நானே வீட்டிற்குள் நுழைந்து பார்க்கும்பொழுது ஒருவரையும் காணாமையால், கிழவர் போன திசையை நோக்கிஓடினேன். ஆனால் நான் லக்ஷ்மி விலாஸ் சேர்வதற்குள் அக்கிழவரே திரும்பி வருவதைக் கண்டேன். வரும்பொழுது அவரது மேல் சட்டையின் அடியில் ஒரு பைசா வட்டமளவு ரத்தக்கறை யிருந்ததாலும், நான் நீலகண்டன் கையில் பார்த்த மோதிரம் இவரிடமிருந்ததாலும், மேலும் அவருடைய முகச்சாயலே இவரிடமும் தோற்றப்பட்டதினாலும், பலத்த சந்தேகத்துடன், அவரைத் தொடர்ந்து மறுபடியும் நீலகண்டனைப் பற்றியும், மோதிரம் அவரிடம் வந்த வரலாற்றைப்பற்றியும் கேட்டதும், அவர் மிகுந்த கோபாவேசத்துடன் என்னை ஒரே தள்ளாய் தள்ளிவிட்டு விரைவில் நான் முன் சொன்ன வீட்டிற்குள் புகுந்து தாளிட்டுவிட்டார். எனக்கு சந்தேகம் அதிகரித்து இவர் இப்படியெல்லாம் வேஷம் போடுவதில் ஏதோ இருட்டு இருக்க வேண்டுமென்று நினைத்தேன். எப்படியாவது இவரைப் பிடிக்க எண்ணினேன். பிறகு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று பத்து, பனிரெண்டு பேர்களை அழைத்துக்கொண்டு அவ்விடம் வருகையில், வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு ஒரு பிச்சைக்காரன் வரக் கண்டோம். உடனே நான் பரபரப்புடன் "வேஷம் மாறி விட்டது பிடியுங்கள், விடாதேயுங்கள்" என்று சொல்லவே பிச்சைக்காரன் ஓட ஆரம்பித்தான். போலீஸ் வீரர்கள் ஓடிப்போய் அவனைப் பிடித்து கையில் விலங்கை மாட்டி, அவனிடமிருந்த கிழிந்த துணி மூட்டை ஒன்றைப் பரிசோதித்த பொழுது, அதில் நான் முன் சொன்ன மோதிரமும் ரூ. 50,000 கான்வி

நோட்டுக்களும் இருக்கக் கண்டோம். பிறகு அவனை போலீஸ்டேஷனுக்குக் கொண்டு போகும்போது தூக்கு தண்டனை நிறைவேற்ற போவதைக் கேட்டு ஓடி வந்தோம். ராஜேந்திரரின் கொலையைப் பற்றியும், அதற்காக சபாபதி என்பவன் மீது குற்றம் சுமத்தப்பட்டிருப்பதும் எனக்கு தெரிந்து என் சந்தேகம் அதிகரித்து மேல் விசாரணைகள் பல செய்தேன்'' என்று கூறினன்.

இதை எல்லாம் ஒன்று விடாமல் கேட்டுக் கொண்டிருந்த அனைவரும் மிக்க அதிசயித்து அவ்வாலிபனுடைய புத்திமதிக்காக மிகவும் மெச்சினார்கள். மூர்ச்சித்துக் கிடந்த நமது சபாபதியை மெதுவாக தூக்கு மேடையினின்று கீழே இறக்கி நடந்த விருத்தாந்தங்களனைத்தையும் கூறவே கதிரவனைக் கண்ட கமலம்போல் அவன் முகம் மலர்ந்தது. ஆரவாரித்தான். அவ்வாலிபனிருந்த இடத்திற்கு ஓடி, அவனைத் தழுவிக் கொண்டு, "ஐயா! நீர் என்னிடம் இவ்வளவு கருணை புரிந்து என் மீதிருந்த பழியை நீக்கி என்னை விடுவித்ததற்கு உமக்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகின்றேன். என்னை காப்பாற்றுவதற்காக கடவுளே உம்மை இங்கே அனுப்பியிருக்கிறார். ஆதலால் கடவுளுக்குரிய வந்தனத்தை உமக்கு செலுத்தி விடுகிறேன்,'' என்று சொல்லி அவர் காலில் விழுந்து நமஸ்கரிக்கச் சென்றான். அதைக்கண்ட வாலிபன் "ஐயா! சற்றுப் பொறும்'' என்று சொல்லி நீலகண்டனிடமிருந்து அகப்பட்ட மோதிரத்தை அவன் கையில் கொடுத்து, "இதைப்பற்றி தங்களுக்கு ஏதாகிலும் தெரியுமா?'' என்று கேட்டான்.

மோதிரத்தைக் கண்ட சபாபதி துக்கம் மேலிட்டவனாகி ஒன்றும் பேச முடியாமல் விம்மி விம்மி அழ ஆரம்பித்தான். அருகிலிருந்தவர்கள் எவ்வளவு தேற்றியும் அவன் பதிலொன்றும் சொல்லாமல் அடிக்கடி "மோகனா, மோகனா'' என்று மட்டும் புலம்பினான்.

இதைக்கண்ட இன்ஸ்பெக்டர், நீலகண்டனை அழைத்து அம்மோதிரம் அவனிடம் எப்படி வந்ததென்றும், சபாபதி யாரென்பதைப் பற்றியும் அவனுக்குத் தெரியுமா வென்றும் அதைப் பற்றின உண்மையைச் சொல்லென்றும் அதட்டிக் கேட்கவே, குற்றவாளியாகிய நீலகண்டன், "ஐயா! 'தன்வினை தன்னைச்சுடும்' என்ற வாக்கியத்திற்கிணங்க நான் செய்த குற்றமெல்லாம் வெளிவந்து என்னையே ஆபத்துக்குள்ளாக்கி விட்டது. இச்சபாபதி என்பவர் அடுத்த கிராமத்தில் பெரிய தனவந்தராயிருந்தவராவர். இவரிடம் நான் வெளிக்கு நண்பனாயிருப்பதுபோல் காட்டி இவருடைய சகல சொத்துக்களையும் சூதாட்டத்தில் பறித்துக் கொண்டேன். இம்மோதிரமும் அச்சூதாட்டத்தில் அவர் இழந்ததுதான். இது அவர் மனைவி மோகனாவால் அவருக்கு அளிக்கப்பட்டது. இவருடைய பணமெல்லாம் முடிந்துவிடவே நான் அவரிடம் மோகனாவிடமிருந்த சிறிது பணத்தை வாங்கும்படி வற்புறுத்த, அவரும் அதற்கிணங்கி அவளிடம் கேட்டார். மோகனா பணம் கொடுக்க மறுப்பதை அறிந்த நான் அவளிடம் துவேஷம் கொண்டு எப்படியாவது அவளை இவரிடமிருந்து பிரிக்க எண்ணி சில மரியாதை கெட்ட கடிதங்களையும் என் புகைப்படத்தையும், வீட்டு வேலைக்காரியிடம் கொடுத்து அவள் பெட்டியில் வைக்கும்படி செய்து விட்டேன். அதை தற்செயலாய்க் கண்ட இவர் அவள் மீது சந்தேகம் கொண்டதினாலும் பணத்தை இழந்த வெறுப்பாலும், யாரிடமும் சொல்லாமல் வெளியேறி விட்டார். இது தான் எனக்குத் தெரிந்தவை,'' என்று கூறி முடித்தான்.

இதையெல்லாம் கேட்ட சபாபதி தான் அநியாயமாகத் தன் மனைவி மோகனா மீது சந்தேகம் கொண்டதை நினைத்து மிகவும் வருந்தி இன்ஸ்பெக்டரைப் பார்த்து "ஸ்வாமி! என்னை இந்நிலைமைக்கு ஆளாக்கினவர் இவர். என்





பதை நான் சற்றும் அறியேன். என் எஜமானர் வீட்டிற்கு இவர் நேற்று மத்தியானந்தான் வந்தார். இவரை நான் யாரோ உறவினர் என்று நினைத்து கவனிக்கவுமில்லை. இப்பொழுது இவர் சொல்லைக் கேட்டுத்தான் இவரை அறிந்தேன். ஐயோ! ஒரு குற்றத்தையும் அறியாத மோகனா எக்கதிக்கு ஆளானாளோ? என்னைப் பிரிந்த அவள் உயிருடன் இருப்பாளென்பதும் சந்தேகமாயிருக்கிறது,'' என்று பலவாறு புலம்பி ரொம்பவும் துக்கித்தான்.

உடனே அவ்விடத்திலிருந்த வாலிபன், "ஆஹா! என் பிராணநாதா! இதோ உமது மோகனா வந்துவிட்டேன்,'' என்று சொல்லி யாவரும் அதிசயிக்கத்தக்க இளம் ரூபவதியாய் நின்றாள். உடனே அங்கிருந்தவர்கள் எல்லோரும் மிகுந்த ஆரவாரத்தோடும், ஸந்தோஷத்தோடும், "என்ன! ஒரு பெண்ணா இவ்வளவு புத்திகூர்மையுடன் வேலை செய்திருக்கிறாள். என்ன ஆச்சர்யம்! உத்தம மனைவி என்றால் இதுபோலல்லவோ இருக்க வேண்டும்'' என்று பலவாறு சொல்லி அவளைப் புகழ்ந்தார்கள்.

மோகனா எல்லோரையும் பார்த்து "கனவான்களே! என்னுடைய விருத்தாந்தத்தையும் நான் சொல்லுகிறேன். கணவனைப் பிரிந்த நான், எங்கும் சுற்றிப் பார்த்தும் அவர் தென்படாமையால், இனி இப்பெண்ணுடையுடனிருப்பது அபாயம் என்று நினைத்து ஆண் வேடம் பூண்டு ஊர் ஊராய் அவரைத் தேடலானேன். பிறகு கமலாபுரியில் புனைப்பெயர் பூண்டு சமையல் வேலை செய்து வருவதை அறிந்து, தினந்தோறும் காலையில் சென்று அவரை யறியாமலே அவருடைய க்ஷேமத்தைத் தெரிந்து கொண்டு வந்திருந்தேன். அப்படி வரும் பொழுதுதான் நீலகண்டனைப் பிடிக்க நேரிட்டது,'' என்று சொல்லி முடித்தாள்.

பிறகு ஜட்ஜி கனகசபை நீலகண்டன் அநியாயமாகப் பறித்த எல்லா செல்வங்களையும் சபாபதிக்குப் பிடுங்கிக் கொடுத்து சந்திரசேகரர், மோகனா முதலியவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி நீலகண்டனைக் கொல்லாமல் தீவாந்திர சிக்ஷை விதித்தார்.

சந்திரசேகரர், மோகனாவின் தைர்யத்தையும், புத்திகூர்மையையும் மெச்சி, உண்மையை விளக்கியதற்காக திரும்பிக் கிடைத்த ரூபாய் 50,000த்தையும் பரிசாகக் கொடுத்தார். பிறகு சபாபதி இழந்த செல்வம் கிடைத்ததனால் தேகம் பூரித்து முன்னிலும் பதின்மடங்கு ஆசையுடன் உத்தம மனைவியான மோகனாவோடு சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்.

# செவ்வாயுலகம்


**"கலாவதி"**

செவ்வாய் உலகத்தைப் பற்றிய பூரா விவரமும் அறியவும், அங்குள்ளவர்களைக் காணவும், பேசவும், நீண்ட நாட்களாக வான சாஸ்திரிகள் பெரும் ஆராய்ச்சிகள் செய்துகொண்டு வருகின்றனர். செவ்வாய் உலகத்தில் மனிதர் வசிக்கின்றார்கள் என்பது ஒரு சாரார் ஆராய்ச்சியின்முடிவு. மற்றொரு சாரார் அதை மறுத்து வந்தனர்.

எனவே, செவ்வாய் உலக உண்மைகளைக் கண்டுபிடித்தே தீரவேண்டுமென்னும் நோக்கத்துடன் காலிபோர்னியா மவுண்ட் விலிஸன் லேபரேட்டரி அதிகாரிகள் 200 அங்குல டெலஸ்கோப் ஒன்றைச் செய்து அதை நக்ஷத்திர மண்டலங்களைப் பார்ப்பதற்கென அமைத்திருக்கின்றனர். இந்த டெலஸ்கோப் மூலம் பல நக்ஷத்திர மண்டலங்களைப் பார்க்க முடியுமென்று டாக்டர் எட்வின் ஹப்பிள் என்பார் கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது:—

"வில்ஸன் மலையில் ஸ்தாபித்திருக்கும் இதர பிரம்மாண்டமான டெலஸ்கோப்கள் மூலம் நான் வான மண்டலத்தில் பல விசித்திரமான விஷயங்களை யெல்லாம் கண்டேன். ஆனால், இப்போது புதிதாக நிர்மாணித்திருக்கும் இராக்ஷச டெலஸ்கோப் மூலம் பார்க்க நேரிடுகையில் நான் இதுவரை கண்டிருக்கும் விசித்திரங்கள் மிகச் சாதாரணமாகி விடும் என்பது தான் எனது கருத்து. இந்தப் புதிய டெலஸ்கோப் மூலம் நாங்கள் இந்த அண்டத்தின் எல்லையைக் காணுதல் கூடும். இதுவரை வான சாஸ்திரிகளுக்கும் கிடைத்திராத ரகசியங்கள் பல இந்த டெலஸ்கோப் மூலம் அறியக் கூடும். செவ்வாய் உலகத்திற்கு நாம் ஒரு பலூன் மூலம் சென்றிறங்கி, அங்குள்ள விஷயங்களை யறிந்து செவ்வாய் உலக பூகோளம் ஒன்றைத் தயாரிப்பது போன்று இங்கிருந்து கொண்டே இந்த டெலஸ்கோப் மூலம் நாம் செவ்வாய் உலகத்தின் பூகோளத்தைத் தயாரித்து விடலாம். இந்த டெலஸ்கோப் மூலம் நாம் எவ்வளவு தூரம் பார்க்கக் கூடும் என்பதை இப்போது வரையறுத்துக் கூறிவிட முடியாது. அப்படிக் கூறினாலும், அந்தத் தூரத்தைக் குறிப்பிடும் அளவை நீங்கள் அறிந்து கொள்ள முடியாது. இந்தப் புதிய கருவியைப்பற்றி அறிய விஞ்ஞானிகள் அதிக அவசரப்படுகின்றனர். புதிய புதிய கிரஹங்கள் பலவற்றை இதன் மூலம் காணக்கூடும் என்றும், நாம் வசிப்பதைப் போன்ற கிரஹங்கள் பல நம் கண்களுக்குப் புலனாகுமென்றும் அவர்கள் கூறுகின்றனர். மேலும் தகராறிலிருந்து வரும் பிரச்சினையாகிய "செவ்வாயில் மனிதர்களுண்டா!" வென்பதையும் இதர கிரஹங்களில் மனித சஞ்சாரம் இருக்கிறதா வென்பதையும் சுலபமாக அறிந்து கொள்ளலாம் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் ஒரு பெருங்குறை யிருக்கிறது. செவ்வாய் உலகில் வசிக்கும் மனிதரை நாம் பார்க்கத்தான் முடியும். அவர்களுடைய உருவங்கள் நமக்குப் பிடிக்காவிட்டாலும், அவர்களுடைய நடை நமக்கு விருப்பமா யில்லாவிட்டாலும் நம் விருப்ப மின்மையை அவர்களுக்கு எடுத்துக் காட்ட முடியாது. அதாவது நாம் அந்த உலக மக்களுடன் பேசுவதற்கு இயலாது."



ஏழைப் பெண்

# ஏழைப் பெண்

## ஸ்ரீமதி பிரமீளா

“சிவசிவா! எவ்வளவு கஷ்டம்! எவ்வளவு கஷ்டம்!! ஜகன்மோகனாகாரம் கடினதரித்திரம்” என்ற இரண்டும் சேர்ந்து இப் பெண்ணாக உருவெடுத்திருக்கின்றன வல்லவா? அந்த கிழிந்தரவிக்கை, அந்த ஜீரணவஸ்திரம், தலைவிரிப்பு, ஐயையோ! போக்குப் புகலில்லாமல் ஒரு பெண்மணி அலைகின்றாள். இந்த நிலையைப் பார்த்தால் கல்மனம் கொண்டவர்களின் கண்களிலும் நீர் ததும்பும். அந்த திருஷ்டியைப் பாருங்கள். பரிதாபக் காட்சியைப் பற்றி சற்றே சிந்தியுங்கள்.

“சர்வேஸ்வரா! என்ன அறிவிலியானேன். மாமியார்வீட்டு பாக்கியமெல்லாம் சாஸ்வதமென்று நினைத்தேனே. ஒரு நாலெழுத்துக் கற்றுக் கொள்ளாது நிரக்ஷரகுக்ஷியாய் நின்று தவிக்கின்றேன் இன்று. கல்வியை அவமதித்து இவ்வாறு கெட்டலைந்து நிற்கதியானேன்” என்று உன்னி உன்னி நெஞ்சங் குமுறுகிறாள் அந்நங்கை. ‘இப்பொழுது அழுது என்ன பயன்’ என்று நினைப்பதுபோல விருக்கிறது அந்த ஸ்திரீயின் பார்வையில் தோன்றுகிற ஒரு தோற்றம். கண்போன பிறகு சூரிய நமஸ்காரத்தைப் பற்றிச் சிந்திப்பதை ஒக்கும் அவளுடைய பச்சாத்தாபம்.

இவள் தனவந்தர் குடும்பத்தில் பிறந்தவள்தான். ஒரு தாசில்தாரின் புத்திரி. தவப்புதல்வி. நடந்தால் கால் தேய்ந்து போகுமோ வென்று பயந்து அவ்வளவு அருமையாக அவளை வளர்த்தார்கள் அவள் பெற்றோர்கள். இன்று அக்கால்கள் கரடு முரடான கற்கள்மீது நடக்கின்றன.

இவள்பெயர் லக்ஷ்மீதேவி. “அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு ஏன்?” என அவள் பெற்றோர் நினைத்தார்கள். அறியாமை யென்ற படுகுழியில் அவளைத் தள்ளிச் செல்லமாக வளர்த்தார்கள்.

எட்டாவதுவயதில் கல்யாண மாயிற்று. ஆறு, ஏழுவருஷங்கள் கணவனுடன் குடித்தனம் செய்தாள். ஆனால் புத்திரப் பேறு இல்லை. அதோடு ஆரம்பமாயிற்று அவளுக்கு நாசகாலம். புருஷன் தத்தாரியாகத் திரிந்தான். பணத்தைவாரிச் செலவிட்டு இவளையும் விரட்டி விட்டான்.

அந்தக் காலத்தில் ஹம்சதூளிகா மஞ்சத்தில் அடிவைத்து நடந்தகால்களே, அதே லக்ஷ்மி அம்மாளே இப்படத்தில் காட்சி கொடுக்கிறாள். கையில் ஒரு காசில்லை. கடவுள் ஒருவர்தான் அவளுக்கு உற்றதுணை. அந்தச் சதிமணிக்கு மானமும் இன்று ஒரு துணையாக வந்திருக்கிறது. இனியாவது சரஸ்வதியைத் தொழுது கல்விபயில நிச்சயித்துவிட்டாள். இம்மட்டில் இப்பொழுதாவது கல்வியின் அவசியத்தை உணர்ந்தாளே! இன்னும் ஐந்து, ஆறு வருஷங்களில் அவளது வியாசங்கள் “கிரஹலக்ஷ்மி”யில் மிளிர்வது நிச்சயம்.

பிறவியில் மனிதரெல்லாம் மிருகப்பிராயம். கல்வியே அவர்களுக்கு மனிதத்துவத்தைக் கொடுக்கிறது. ஆகையால் சகோதரிகளே! கல்வியை யாவரும் இளமையிலேயே கற்றுக்கொள்ள வேண்டும். குறையாத செல்வமும், குன்றாத பூஷணமும் கல்வி தான்.

# கும்மி

"இனியன்"

1. கும்மியடி பாப்பா கும்மியடி—நம்
அன்னையர் யாவரும் வாழ்ந்திடவே
சின்னஞ் சிறுவர் சேர்ந்திட யாவரும்
அன்னவன் தாள்தொழ கும்மியடி.

2. ஒப்பில் பாரதி நம்மிந்திய நாட்டினில்
விளங்கினாரென்று கும்மியடி—
செப்புதற்கரிய சீருடன் கூடிய
கம்பன் தன் நாடென்று கும்மியடி.

3. வீரர்களனைத்து மகிழ்ந்த நாடென்று
தீரமாய் கேட்கவே கும்மியடி—அந்த
பாரத அன்னையின் பாதம் பணிந்திட
சாதகமாகவே கும்மியடி.

4. பச்சைப்பசே லென்று பொங்கிய நாடென்று
பார்த்தவர் யாவரு மகிழ்ந்திடவே—எங்கும்
கண்ணைக்கவரும் கண்ணியக்காட்சிகள்
உண்டென்று நன்றாகக் கும்மியடி.

5. வீணையி னொலியும் வார்குழலொளியும்
விளங்கிய நாடென்று கும்மியடி—இந்தப்
பாரினிலே எங்கும் பார்க்க முடியாதப்
பேரறி வாளரென்று கும்மியடி.

6. நாரத கானம் பெற்றயினாளென்று
பார்ப்போர் மகிழ்ந்திடக் கும்மியடி—இம்
மண்ணையும் விண்ணையு மாண்டவர் நாடென்று
விண் ஒலி எட்டிடக் கும்மியடி.

7. "சுதந்திரம் பெற்றோம் யாமடியல்லோம்" என்று
குதித்துக் குதித்துக் கும்மியடி—இந்தப்
பாரதமக்கள் வேறுயாவருமில்லை நம்
நாட்டினரே யென்று கும்மியடி.

8. இளங்கன்னியர் சீருடன் வாழ்நாடென்று
கேட்போர் மகிழ்ந்திடக் கும்மியடி—இப்
பாரதமங்கையர் கற்பு எங்கும் ஓங்கிட
பேரவா பொங்கிடக் கும்மியடி.

# வைத்தியப் பகுதி

## பற்கள் பாதுகாப்பு

டாக்டர் குமரன்

நாம் நமது பற்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுவதின் அவசியத்தைப்பற்றி அதிகம் எழுதவேண்டியதில்லை. தற்காலம் அநேக ஆராய்ச்சிகள் செய்ததின் மூலம், பெரிய வைத்திய நிபுணர்கள் மானிடருக்கு உண்டாகும் பெரும்பாலான நோய்களுக்கு ஆதிகாரணம் பல் சுத்தமின்மை என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். நம் உடலைக்காத்து வருவதற்கு இன்றியமையாதது ஆகாரம். ஆகாரத்தை உட்கொள்ளுவதற்கு ஆதாரமாய் இருப்பவைகள் பற்களே. அவைகள்தான் உணவை மென்று அனுப்புகின்றன. நாம் உட்கொள்ளும் ஆகாரம் ஜீரணிக்கவேண்டுமானால் பற்களும் உறுதியாக விருந்து ஆகாரத்தை நன்றாக அரைத்து அனுப்ப வேண்டும்.

பற்களில் நோய்கள் உண்டாவதற்குப் பலகாரணங்கள். உண்டு. முதலாவது பற்களைச் சுத்தமாக வைக்காததுதான். தினந்தோறும் காலை, மாலை இருவேளைகளிலும் பற்களை நன்றாய் துலக்கவேண்டும். இந்த முறை சிறந்த தேகாரோக்கியத்துக்காகவே நம் நாட்டில் ஆதிகாலந் தொட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. பல் துலக்க கண்ட பற்பொடிகளையும், பசைகளையும் வாங்கி உபயோகித்தல் கூடாது. அது அவ்வளவு நல்லதல்ல. பல்லை சுத்தமாகவும், பார்வைக்கு அழகாகவும் வைத்துக்கொள்ள சிறந்தவழி பற்குச்சிகளை உபயோகித்தலே. பண்டைக் காலந்தொட்டு இன்றுவரை நம்நாட்டு கிராமாந்தரங்களில் ஆலம் விழுதின் துண்டுகள், வேலங்குச்சி, வேப்பங்குச்சி முதலியவைகளை பல்துலக்க உபயோகித்து வருகிறார்கள். இவைகளை உபயோகப்படுத்துவதனால், பற்கள் கெட்டிப்படுவதுமன்னியில், சுத்தியும் ஆகின்றன. ஆலங்குச்சியிலும், வேலங்குச்சியிலும் இருக்கும் துவர்ப்புத் தன்மைக்குப் பற்களை இருகச் செய்யும் குணம் இருக்கிறது. அவைகளைக்கடித்து ஊறும் உமிழ்நீரை சற்று நேரம் வாயில் வைத்திருந்த பிறகு துப்புவது நலம். வேப்பங்குச்சி பற்களை நன்றாகத் துலக்கி பற்களில் உண்டாகும்படியான நோய்க்குக்காரணமாகிய பூச்சிகளைக் கொல்லுகின்றது. கசப்புக்குப் பூச்சிகளைக் கொல்லும் சக்தியுண்டு. பொதுவாக மரக்குச்சிகளினால் நம் பற்களைத் தேய்த்து சுத்தப்படுத்துவதால் அநேகவித நன்மைகளை அடைகின்றோம்.

குச்சியில் அதிகமாக தடித்த மயிர்கள் இல்லாதபடிக்கும், அதிக மெல்லியதாகவும் இல்லாதவாறும் பார்த்து மிருதுவான

குச்சியை உபயோகிக்க வேண்டும். இல்லாவிடில் ஈறில் குச்சி குத்தி இரத்தம் வெளிப்படும். குச்சியை உபயோகிக்கும் போது, பற்களிடையே உள்ள துவாரங்களில் படிந்து சரிவர சுத்தி செய்யும்படி பற்களின் மேலும் கீழுமாகக்குச்சியைச் செலுத்தித் தேய்க்க வேண்டும். மேற்படி துவாரங்களின் இடையிலும், பற்களில் உள்ள பள்ளங்களிலும் தான் அதிகமாகக் கெடுதிகள் ஏற்பட்டு பற்களை உபயோக மற்றவைகளாகச் செய்கின்றன. குறைந்தது நான்கு நிமிஷங்களாவது பல் தேய்க்க வேண்டும்.

பற்களில் காரை ஏற்படுமாயின் அதை உடனே தகுந்த பல் வைத்தியரிடம் காண்பித்து மேற்படி காரையை எடுத்து விடவேண்டியது அவசியம். காரையைப் போக்கவும், பொதுவாக வலியைத் தடுக்கவும் சுத்தமான உப்பை (Table salt) தினசரி பல் துலக்கும்போது உபயோகித்துவருவது நல்லது. பற்கள் கவனிக்கப்படாததால் கெட்டுப்போய் விட்டால் கெட்டுப்போன பற்களை எடுத்து விடுதல் சாலவும் சிறந்தது. அதனால் வியாதி மற்றப் பற்களுக்குப் பரவாமல் தடுக்கலாம். பல்வலி யிருந்தால் முகம் வீங்கி சில சமயங்களில் சுரம் கூட வரும். பையோரியா அதிகமாக விருந்தால் கடின பதார்த்தங்களை யுண்பதை நிறுத்தி விட வேண்டும். மிருதுவான பண்டங்களையே அச்சமயத்தில் உண்பது வியாதியைக் குணப்படுத்துவதற்கு சாதகமாக இருக்கும். சில கிராம வாசிகள் நாயுருவி இலை, காட்டாமணக்கு இலைகளையும் பல் விளக்க உபயோகிக்கிறார்கள்.

பையோரியா, பல்வலி, ஈறு வளர்தல், பல்லில் இரத்தம் வடிதல் முதலியவைகளைப் போக்க நற் பற்பசைகளை உபயோகித்தல் அவசியம். தவிர ஹைட்ரஜன் பெராக்சைட் முதலிய இதர திரவபதார்த்தங்களை ஜலத்தில் விட்டு நாள் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு தடவைகள் கொப்பளிக்க வேண்டும்.

பற்களின் இடுக்குகளில் தங்கிப் போயிருக்கும் உணவுப் பொருள்களில் தான் நோய் கிருமிகள் உண்டாகும். அதற்கு இடந்தராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உணவு அருந்து முன்னரும், அருந்திய பின்னும் வாயை நன்றாக சுத்த ஜலத்தை விட்டுக் கொப்பளித்து வந்தால் நல்லது.

முக்கியமாக குழந்தைகள் சரிவரப்பல் துலக்கும் வழக்கத்தை தாய்மார்கள் இளமையிலிருந்தே உண்டாக்க வேண்டும். அப்பழக்கம் சரிவர ஏற்படுமாயின் சிசுக்களின் வியாதிகள் அநேகம் ஒழியும். அவைகளின் பற்கள் கோரையாகவும், பல வரிசைகளோ அல்லது குரூபமாகவோ ஆகமாட்டா. முகமும் வசீகரமாக இருக்கும். தந்த சுத்தி செய்யும் வழக்கத்தை எல்லோரும் ஒழுங்காகச் செய்து வர வேண்டும். ஒருவருஷத்துக்கொருமுறை பல் வைத்தியரிடம் சென்று பற்களை வைத்திய முறைப்படி சுத்தம் செய்து கொள்வது நல்லது.



159940

# புனிதவதி

'மைதிலி'

பெயரும் புனிதம், மனதும் புனிதம், வாழ்க்கையும் புனிதம், ஒழுக்கமும் புனிதம். வணிகர் குலத்திற்கோர் மணியாய் விளங்கி, ஆணேனும் பெண்ணேனும், தன்பாலன்பு பூண்டார்க்கு அரன் அருள் செய்வான் என்பதை உலகத்தார்க்குப் பிரத்தியக்ஷமாய்க் காட்டிய புண்ணியவதி. காரைக்காலம்பதியில் வசித்த வணிகர் குல முதல்வனாகிய தனதத்தனுக்குத் தவப்புதல்வியாயமைந்தவள் புனிதவதி.

தனதத்தன் தனம் நிறைந்தவனேயல்லாமல் ஞானமும் உடையவனாதலின் தன் அருந்தவப் புதல்விக்குக் கல்வி யென்னும் செல்வத்தைப் பூரணமாக அளித்தான். புனிதவதி பயின்ற கல்வியின் சிறப்பைச் சேக்கிழார் அழகுபட,

"பணியணிவார் கழற்கடிமை பழகி வரும்
பாங்கு பெறத்
தணிவில் பெரு மனக்காதல் ததும்ப
வரு மொழி"

யெனக் கூறினார். சிவனிடத்தே தன் மனத்தைச் செலுத்துவதற்குதவியாயுள்ள நூல்களையே தையல் பயின்றாள்.

நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து வந்த நங்கைக்கு மணப்பருவம் நெருங்கியது. நாகையிலுள்ள நிதிபதி என்னும் வணிகனுடைய புதல்வன் பரமதத்தனுக்கு மனைவியாயினாள் புனிதம். தன் மாளிகையினருகிலேயே தன் புதல்விக்குமோர் இல்லத்தை அமைத்துத்தந்தான் தனதத்தன். புனிதவதியும் தன் கணவனுடன் இன்பமாக இல்வாழ்க்கையை நடத்தி வந்தாள்.

ஒரு தினம் பரமதத்தனைக் காணவந்தோர் சிலர் அவனுக்கிரு மாங்கனிகளை அளித்துச் சென்றனர். பரமதத்தன் அக்கனிகளைத் தன்னில்லத்திற்கனுப்பினான். மாங்கனிகளைப் பெற்ற புனிதவதி அதை ஒரு பக்கத்தில் வைத்து விட்டுத் தன் காரியத்தில் கண்ணாயிருந்தாள். அக்காலை பசி வேட்கை மிகுந்த ஓர் சிவனடியார் உணவு விரும்பி அவளில்லத்துள் புகுந்தார். 'வேதங்கள் மொழிந்தபிரான் மெய்த் தொண்டர்' உணவு விரும்பி நின்ற கோலத்தைக் கண்ணுற்ற காரிகை, தொண்டர் வரவால் களிப்பும், அவர் பசியால் வருந்தி நின்றதைக் காணத் துயரும் கொண்டவளாய், அவரை வரவேற்று உபசரித்து, அவருக்கு அன்னமிடுவான் கருதி உணவறையிற் சென்று நோக்கினாள். கறியமுதொன்றும் பாகமாகாதிருந்ததால், மாங்கனியை அடியார்க்களிக்க எண்ணங்கொண்டவளாய் ஒரு கனியை இலையிலிட்டாள். பசிப்பிணி தீர்ந்த சிவனடியார் புனிதவதியின் மெய்த் தொண்டின் தன்மையைக் கண்டு மனமகிழ்ந்து போற்றிச் சென்றார்.

வார்த்தக சாலையிலிருந்து, உணவு கொள்ள வீடு திரும்பினான் பரமதத்தன்.

m211, 837 122.1.3

கணவனை வரவேற்று அவனுக்கு இலை போட்டு பரிமாறினாள் புனிதம். கணவனனுப்பிய கனிகளில் எஞ்சி நின்ற மற்றொன்றை இலையிலிட்டாள். கனி அதி மதுரமாயிருந்ததினால் பரமதத்தன் மற்றொன்றையும் கொண்டுவருமாறு மனைவியைக்கட்டளையிட்டான். 'இதோ கொண்டுவந்து விட்டேன்' என்று சொல்லி உள்ளே வந்தாள் பெண்மணி. "சர்வேச்வரா, என்ன செய்வேன்? உன்னடியார்க்குப் பசிதீரும் பொருட்டு ஒரு கனியை அளித்தேன். கணவனோ இன்னொன்று வேண்டுமென்கிறார். இத்தர்ம சங்கடத்திற்கு என் செய்வேன்? பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தையருந்தி தேவர்களைக் காத்த நீலகண்டனே, இச்சமயத்தில் நீ தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்," என்று கண்களில் நீர் ததும்ப தில்லை ஈசனைத் பிரார்த்தித்தாள் புனிதவதி. அடியார் துயர் சகியாத அரன் உடனே பாவையின் கரத்தில் ஒரு கனி வந்திருக்கும்படி செய்தான். உடனே புனிதம் மிக்க மகிழ்ச்சி யுற்றவளாய் வெளியில் வந்து கடவுளருளால் கிடைத்த கனியைக் கணவனுக்கிட்டாள். தாவரவர்க்கத்தையே சிருஷ்டித்த எம்பெருமானருளால் கிடைத்த கனியின் சுவையின் தரத்தைச் சொல்ல முடியுமோ? கனியைப் புசித்த பரமதத்தன் தன் மனைவியை நோக்கி, 'புனிதம், இக்கனி முதலிலிட்ட கனியைப் போலல்லாமல் மிக்க இனிப்பாயுள்ளது. இதை எங்கு பெற்றாய்?' என்று கேட்டான். "ஈசனருளால் பெற்றேன்" என்று விடையளித்தாள் பாவை. "ஆயின் அவ்வீசனருளால் மற்றொன்றை கொண்டு வருவாய்," என்று மொழிந்தான் பரமதத்தன். பரமனின் அருளைப் பரிபூரணமாகப் பெற்ற புனிதம் மறைவில் சென்று, "ஆபத்சகாயனே, இப்பொழுது எனக்கு மற்றுமோர் கனியைத் தராவிடில் என் சொல் பொய்யாய் விடும். என் வாக்கின் உண்மையை நீ தான் நிலை நிறுத்த வேண்டும்," என்று ஈச்வரனை நோக்கித் துதித்தாள். பக்தர்களுக்கரியது எது? உடனே புனிதவதியின் கையினில் ஓர் கனி வந்தது.

கையில் வந்த கனியை வாங்கிய பரமதத்தன் அளவற்ற வியப்பும், தடுமாற்றமும் கொண்டவனாய், "நம்மனைவி மனிதப் பிறவியே யல்ல; அந்நாள் முதல் ஓர் தெய்வ மகளே யாவள்," என்று கருதி, புனிதவதியுடன் தொடர்பொன்றுமின்றி வாழ்ந்து வரலானான். அவ்வாறிருக்கையில் பரமதத்தனுக்குக் கடலோடி திரவியந்தேட வேண்டுமென்று ஓர் அவா உண்டாக அவ்வாறே ஒரு நன்னாளில் கப்பலேறி அயல் தேசஞ் சென்று அங்கு அளவிறந்த பொருளைச் சம்பாதித்தான். அங்கிருந்து திரும்பித் தன்னூருக்கு வராமல் பாண்டிமாநகரில் ஓர் நகரத்திற்குச் சென்று அங்கு அழகும் குணமும் நிறைந்த ஓர் பெண்மணியை மணந்து வாழ்ந்திருந்தான். ஆயினும் தெய்வத்தன்மை பொருந்திய தன் மனைவியை மறந்தானில்லை.

புனிதவதியோ தன் கணவன் சென்று நாட்கள் பலவாயினும் தன்னூர் திரும்பாமையால் மிக்க கவலையுற்றாள். அவளுடைய உறவினர்கள் பரமதத்தன் பாண்டி நாட்டில் மறுமணம் புரிந்து வாழ்ந்து வருவதைப் பற்றிக் கேள்வி யுற்றனர். இதையறிந்த புனிதவதி மிக்கத் துயருற்றவளாய், தன் கணவனைச்





சேருதற்கு விரும்பி தன் உறவினருக்குத் தெரிவிக்க, அவர்களும் புனிதவதியை பரமதத்தனிடம் சேர்ப்பதற்காக அழைத்துச் சென்றனர்.

தன் மனைவி வரும் செய்தியைக் கேட்ட பரமதத்தன் மிகுந்த அச்சமும் பக்தியும் கொண்டவனாய் தன் புதிய மனைவியோடும், தான் பெற்ற பெண்குழந்தையோடும் புனிதவதியிடம் வந்தான். புனிதத்தை நெருங்கியவுடன் பரமதத்தன் அவள் காலில் வீழ்ந்து வணங்கி "அம்மையே, உம்முடைய திருவருளினால் நான் இங்கு இனிது வாழ்கின்றேன். இப்பெண் குழந்தைக்கும் உம்முடைய பெயரையே வைத்திருக்கிறேன்" என்று கூறினான். கணவன் தன்னை வணங்கக்கண்ட புனிதவதி அச்சங்கொண்டு ஒதுங்கி நிற்க, உறவினர் பரமதத்தனை நோக்கி "நீ உன் மனைவியை வணங்கியதேன்?" என்று கேட்டார்கள். அவன், "இப்பெண்மணியின் சிறப்பை நீங்கள் அறிந்திலீர். இந்நங்கை சிவபெருமானின் அருளைப் பூரணமாகப் பெற்றவர். இவர் தெய்வமகளே யன்றி மனிதப்பிறப்பில்லை" என்று மாங்கனி சம்பவத்தை விவரமாக அவர்களுக்குக் கூறினான். இதைக்கேட்ட உறவினர் வியப்புற்றவர்களாய் புனிதவதியின் தெய்வபக்தியைக் கொண்டாடினார்கள்.

"என் கணவரோ என்னைக் கைவிட்டு விட்டார். என்னாயகனுக்காகவே இவ்வனப்பு நிறைந்த தேகத்தைத் தாங்கி நின்றேன். ஆனால் என்னாயகனுக்கு இனி இவ்வுடம்பு பிரயோசனப் படப்போவதில்லை. ஆதலின் உம்மிடத்து நின்ற ஏனைய கணங்கள் வணங்குதற்குரிய பேய்க் கணங்களின் வடிவத்தை, எனக்கு அளிக்கவேண்டும்," என்று சிவபெருமானைத் துதித்தாள். உடனே யாவரும் வணங்குதற்குரிய ஓர் பேய்வடிவத்தைப் பெற்றாள். கேவலம் ஓர் சாமானியப் பேயல்லாமல் அருள் நிறைந்து மேன்மை வாய்ந்த ஓர் பேய் வடிவமானாள் புனிதம்.

இவ்வாறு எலும்புந் தோலுமாய் வரும் புனிதவதியைக் கண்டு ஜனங்கள் அஞ்சி ஓடலாயினர். இதைக் கேள்வியுற்ற புனிதம், "அண்டர் நாயகனொன்னை அறிவரே லறியாவாய்மை யெண்டிசை மாக்களுக்கியா னெவ்வுருவாயென்ன?,' என்றாள்.

வடதிசையிலுள்ள தேசங்களை யெல்லாம் கடந்து சென்று கைலாயத்தை அடைந்து பசுபதியைத் தரிசிக்க விழைந்தாள் புனிதவதி. ஆங்காங்கு க்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டே கைலாயமலையினடியை யடைந்தாள். உலகெலாமுணர்ந்தோதற் கரியவன் வீற்றிருக்கும் புனிதமான பனிவரையில் காலால் நடந்து செல்ல அஞ்சி தலையால் நடந்து செல்லலானாள் புனிதம். என்னே தொண்டர் தம் அன்பு! இவ்வாறு தலையில் நடந்த கோலத்தைக் கண்டு உமையே அஞ்சி வியப்புற்றனளெனின் புனிதவதியின் பெருமையை அளவிட்டுக் கூற இயலுமோ?


"நாதா, இதோ இங்கு தலையால் நடந்து வரும் இவ்வெலும்புடம்பின் பாசந்தானென்னே?" என்று பார்வதி வியப்புடன் பரமேச்வரனை வினவ, "இவள் என்னை வழிபடுதற்கிடையூறு ஒன்று

மில்லாதிருப்பதற்காகவே இவ்வுடம்பை வேண்டிப் பெற்றனள்" என்று கூறினார் கைலையம்பதி.

இதற்குள் பரம சிவனின் பாதமடைந்த புனிதவதியை நோக்கி, பிரமனும் விஷ்ணுவும் தன்னுதியந்தத்தை அறியமுடியாது, எப்பொருளிலும் வியாபித்துள்ள சர்வேச்வரன் 'அம்மையே' என்று அன்பொழுகும் குரலினால் அழைத்தான். கண்களில் நீர் ததும்ப, நெஞ்சம் துடிக்க 'அப்பா' என்று அலறி அத்தனின் பாதத்தில் விழுந்தாள் புனிதவதி. தன்னடி பணிந்து நின்றவளை நோக்கி சிவபெருமான் 'விரும்பிய வரத்தைக் கேள்' என்றார். உடனே புனிதவதி,

இறவாதவின்ப வன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்
புண்டே லும்மை யென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டு
நான் மகிழ்ந்துபாடி
யறவா நீயாடும் போதுன்னடியின்
கீழிருக்க"

வென்று கூறினாள். அடியார் துணைவனான அரன், "பழையனூர்த் திருவாலங்காட்டில் நாம் ஆடியருளும் ஊர்த்துவ தாண்டவத்தை நீ தரிசித்து நம்மை எப்பொழுதும் பாடிக்கொண்டிரு," என்று அருளினான். அத்தனாணைப்படியே புனிதவதி பழையனூரை யடைந்து அங்கு பல நாளிருந்து, யாவருக்கும் எளிதில் கிட்டாத பரமபதத்தை அடைந்தாள். அவள் இயற்றிய அரிய நூல்களாகிய "திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி" முதலியவைகள் இன்னும் தமிழுலகில் மிக்க மதிப்புடன் விளங்குகின்றன.



சிங்கப்பூரிலுள்ள பர்மியர் கோவில்



திருப்பதி கோவிந்தராஜஸ்வாமி கோபுரமும், மலையும்

# திருப்பதி

திரு. எஸ். ஆர். வெங்கோபராவ்

ஸ்ரீ ராமாவதாரத்தில் சீதா பிராட்டிக்கு மிகவும் உதவிசெய்த 'சீதாகிருதி' யை கலியுகத்தில் மணம் செய்து கொள்வதாக வரமளித்தபிரகாரம் கலியுகம்வர ஸ்ரீமந்நாராயணன் கல்கி அவதாரம் எடுத்து துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனம் செய்யப் போகிருர்.

இவ்வுலகிலுள்ள தபோ மகிமையுள்ள ரிஷிகளனைவரும் ஒரு யாகம் செய்ய பிரயத்தனம் செய்தனர். அவ்வமயம் திரிகாலஞானியாம் நாரதர் அங்குவந்து 'ஹே! ரிஷி சிரேஷ்டர்களே! நீங்கள் செய்யும் யாகத்தை யாருக்கு அர்ப்பணம் செய்கிறீர்கள்' என, ரிஷிகள் மிகவும் கிலேசித்தவர்களாய் 'நாரத மகரிஷிகளே! தாங்கள் திரிலோக சஞ்சாரி. அப்படி நாம் பூஜிக்கத் தகுந்தவர்கள் யாராவது உளரோ?' என்று பயபக்தியுடன் கேட்டனர். அப்பொழுது நாரதர் 'இங்கிருக்கும் பிருகுரிஷியை நீங்கள் பிரம்ம, சிவ, விஷ்ணு லோகங்களுக்கனுப்புங்கள். அவர் யார் சிரேஷ்டமென்று கூறுகிருரோ அவரைப் பூஜித்து அவருக்கு அர்ப்பணம் செய்யலாம்' என நவின்ருர்.

ரிஷிகள், மிகவும் பெரியோரும், பக்த சிரேஷ்டருமான பிருகுரிஷியை மூன்று லோகங்களுக்கும் சென்று வர வேண்டினர். அவரும் சரியென்று முதலில் பிரம்மலோகம் சென்ருர். பிரம்மன் ரிஷி வந்ததைக் கவனிக்காமல் தன் சிருஷ்டியிலேயே கருத்தை யுடையவராயிருந்தார். எவ்வளவு நேரமிருந்தும் பிரயோஜன மற்றுப்போகவே ரிஷி கோபம் கொண்டு 'உனக்கு பூஜை யில்லாமல் போகக்கடவது' என சபித்து சிவலோகம் சென்ருர். அங்கு சிவபிரானும் பார்வதியும் அந்தப்புரத்தில் கொஞ்சிக் குலாவிக் கொண்டு இவரைக் கவனிக்காமலிருக்கவே ரிஷி மிகவும் பரிதபித்தவராய் விஷ்ணு லோகம் சென்ருர். அங்கு ஸ்ரீமந்நாராயணன் ஆதிசேஷன்மேல் சயனித்திருந்தார். அவர் பாதங்களை பூஜித்துக்கொண்டு லக்ஷ்மி இருப்பதை நோக்கினர். ஆனல் ஸ்ரீமந்நாராயணனும் இவரை கவனிக்காமலிருக்கவே பிருகுரிஷி மிகவும் கோபித்தவராய் விஷ்ணுவினருகே சென்று அவர் மார்பிலுதைத்தார். எம்பிரான் ஒன்று மறியாதவர்போல் 'சுவாமி தங்களைப் போன்றவரது பாததூளி என் ஹிருதயத்தில் பட்டதால் நான் பவித்ரனனேனுயினும் என் கல்போன்ற மார்பு தங்கள் பூபோன்ற பாதகமலங்களை எவ்வளவு கஷ்டப்படுத்தியதோ' என்றுகூறி அவரை உட்காரவைத்து அவர் பாதங்களைப் பூஜித்தார். அதைக்கண்ட பிருகுரிஷி மிகவும் சந்தோஷமடைந்து சாந்த ரூபியான நாராயணனைப் பணிந்து 'சுவாமி, தங்களைப்போன்ற உத்தமர் இலர்' எனக் கூறி அவரிடம் விடைபெற்று பூலோகம் வந்து சமஸ்த ரிஷிகளிடமும் ஸ்ரீமந்நாராயணனையே ஏகசித்த மனோபாவத்துடன் பூஜிக்கும்படி நடந்த வரலாற்றைக் கூறினர். தவமும் நன்கு நடைபெற்றது.

பிருகுரிஷி பகவானது மார்பில் உதைத்ததால் வக்ஷஸ்தலத்திலிருக்கும் லக்ஷ்மி மிகவும் கோபித்தவளாய் 'தங்களிடமுள்ள என்னை உதைத்தும் தாங்கள் அந்த ரிஷியை சபிக்காமலிருந்ததுமன்றி அவரைப் பூஜித்தீர். அவர் உதைத்ததால் நான் இனி

ஒருக்கணமும் உம்மிடம் இரேன்' எனக் கூறிப் புறப்பட்டு கொல்லாபுரத்திற்கு வந்து சேர்ந்தாள்.

ஸ்ரீமந்நாராயணன் லோகவிளம்பனார்த்தமாய், சதா தன்னிடம் லக்ஷ்மி இருந்தும், இல்லாமல் ஓடிவிட்டதாகப் பாவித்து லக்ஷ்மியைப் பின் தொடர்ந்தார்.

வெகு நாட்கள் அலைந்தபிறகு மகமேரு பர்வதம் வந்து சேர்ந்தார். இப்பொழுது ஸ்ரீனிவாசர், வெங்கடாசலபதி, பாலாஜி எனப்படும் எம்பிரான் எழுந்தருளியிருக்குமிடமே திருப்பதியாம்.

திருப்பதிக்கு சேஷாசலம், ரிஷபாசலம், அஞ்சனாசலம், வெங்கடாசலமென நான்கு பெயர்கள் உண்டு. திருமலை என்பது ஏழுமலைகள் கடந்து ஸ்ரீனிவாசர்' வசிக்குமிடம். இதற்கு சிறிது தூரத்தில் பாண்டவ தீர்த்தம், ஆகாசகங்கை,பாபநாசினி எனப்படும் புண்யதீர்த்தங்கள் உள. கோயில் வடபக்கத்தில் சுவாமிபுஷ்கரணி உளது. இந்தக்கோயில் நான்கு மலைகளுக்கு நடுவே இருந்தாலும் கோயிலினருகே சென்ற பிறகுதான் நன்கு தென்படுகிறது. இக்கோயிலின் தங்கக் கலசங்களும் தங்க விமானமும் இதற்கு மிகவும் அழகைக் கொடுக்கின்றன. இயற்கை யழகுடன் செயற்கை யழகும்சேர்ந்து மிகவும் ரம்மியமான யிடமாய் தேவேந்திரலோகமோ எனக் கருதும்படி யிருக்கிறது. 'கலியுக வைகுண்ட'மெனப் படுவதும் இதுவேயாம்.

கோயிலுட்சென்றதும் கிருஷ்ணதேவ ராயரது பதுமைகள் உள. அநேக பிரகாரங்கள் ஒன்றினுள் ஒன்றாயிருக்க துவஜஸ்தம்பத்தினருகிலுள்ள வாயிலுள் சென்றால் எம்பிரான் உள்ள பிரகாரமே. இங்கு அநேகர் நடைநமஸ்காரம் முதலியவைகள் செய்யுமிடம். அதற்கும் உட்சென்றால் ஜயவிஜயர்கள் உளர். ஸ்ரீனிவாசர் விக்ரஹம் அங்கிருந்தே தென்படுகிறது. மூர்த்தியினது ரூபம் சற்று சிரியதா யிருந்தும் கீர்த்திமாத்திரம் என்றென்றும் குறையவில்லை. இவருக்குச் சமானமான கடவுள் இல்லை என வெங்கடேசர் துதி கூறுகிறது. இவரை மிகவும் பயபக்தியுடன் யார் தரிசிக்கின்றனரோ அவர்களுக்கு சமஸ்த தோஷமும் பரிஹார மாவதோடு ஆயுராரோக்கிய ஐஸ்வரியமும், இல்லறவாழ்க்கையில் சுகமும் சௌபாக்கியமும், பரத்தில் வைகுந்தமும் கிடைப்பதென்ப துண்மை.

திருப்பதி எனப்படுமிடத்தில்தான் ஸ்ரீ கோவிந்தராஜஸ்வாமி தேவாலயமும், ஸ்ரீ ராமபிரான் தேவாலயமும் உள்ளன. திருப்பதியினருகில் கபிலதீர்த்தம் எனப்படும் மிகவும் அருமையான நீர்வீழ்ச்சியும், ஸ்ரீ கபாலீஸ்வரர் தேவாலயமும் இருக்கின்றன.

இவ்வூருக்கு இரண்டுமைல் தூரத்தில் சுவர்ணமுகி எனப்படும் அந்தர்காமினி நதியும், அதன் வடக்கே ஸ்ரீனிவாசரது மனைவியும் ஜகன்மாதாவுமான ஸ்ரீ பத்மாவதி யம்மன் தேவாலயமும், பத்மதீர்த்தமும் உள்ளன. இதை பத்மசரோவரம் என்றும், அலமேலுமங்காபுரம் என்றும் கூறுவர். இங்கு அநேக சத்திரங்கள் இருப்பதோடு மத்வ சபைகளும் இருக்கின்றன. மத்வமத சித்தாந்தத்தை முன்னணி வைக்க மிகவும் உழைத்த ஸ்ரீமான் கஞ்சி சுப்பராயரது சபையில் ஸ்ரீவேத வியாசரது கோயிலும் இருக்கிறது.

லக்ஷ்மி அவதார மெடுத்த ஸ்ரீ ஆகாச ராஜன் பட்டணமும் நாராயணவனம் என்பதும் புத்தூர் என்ற ஸ்டேஷனருகில் உள்ளன. இங்கும் இயற்கை யழகுடன் மிகுந்த அநேக இடங்கள் இருக்கின்றன.

திருப்பதி மகத்மியம் கூறி முடியாது. எம்பிரான் மகிமையை ஆயிரம் நாவினனும் ஆதிசேஷனால் வருணிக்க முடியாதெனில் யான் எம்மாத்திரம்!



# ஆஸ்திரேலியா

ஸ்ரீமதி ராமதிலகம்

ஆஸ்திரேலியா ஒரு கண்டமாகக் கருதப்பட்டு வந்த போதிலும் அதை ஒரு பெரிய தீவாகச் சொல்லலாம். தீவுகளில் பெரியது ஆஸ்திரேலியா. கண்டங்களில் சிறியதும் ஆஸ்திரேலியாவே. இக்கண்டம் இருப்பது வெகுகாலமாக நாகரிகதேசங்களுக்குத் தெரியாமலிருந்தது.

இதைப்பற்றி நினைத்தவர்களில் முதலானவர் போர்ச்சுகீசியர்களே. பின்னர், ஸ்பெயின் தேசத்தினரும், டச்சுக்காரரும் இந்த கண்டத்தைக் கண்டுபிடிப்பதற்கு பெருமுயற்சிகள் எடுத்துக்கொண்டார்கள். 1610-ம் வருஷம் பெர்னாண்டஸ் டி குரியோஸ் என்ற போர்ச்சுகீசியர் தான் ஆஸ்திரேலியாவைக் கண்டு பிடித்து விட்டதாக ஒரு புஸ்தகம் எழுதி பிரசுரித்தார். ஆனால் உண்மையில் அவர் கண்டது ஆஸ்தியேலியாவல்ல. பின்னர் 1616-ம் வருஷம் டச்சுக்காரரான டர்க்ஹார்ட்டாக் ஆஸ்திரேலியாவுக்குச் சமீபமாயுள்ள தீவு ஒன்றைக் கண்டுபிடித்தார். அதிலிருந்து அநேக பிரயாணிகளும், நிலம் தேடிப்போகிறவர்களும் அக்கண்டத்தின் கடலோரப் பிரதேசங்களை கண்டு சுற்றிப் பார்த்தார்கள். டச்சுக்காரர்தான் முதன் முதலில் இக்கண்டத்தைக் கண்டு பிடித்ததால் இதற்கு "புதிய ஹாலந்து" என்று பெயர் வழங்கிற்று. 1814-ம் வருஷத்துக்குப் பின்னர்தான் ஆஸ்திரேலியா என்ற பெயர் ஏற்பட்டது.

ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்த முதல் ஆங்கிலேயர் வில்லியம் டாம்பியர் என்பவர். இவர் 1688-99ம் வருஷங்களில் இம்முயற்சியிலீடுபட்டார். ஆனால் இந்தச் சிறிய கண்டத்தை பிரிட்டிஷாருக்கு அளித்த சிறப்பு கேப்டன் குக் என்பாருக்கே யுள்ளது. இவர் 1770-ம் வருஷம் தன் சகாக்களுடன் ஆஸ்திரேலியாவில் இரங்கி ஒரு யூனியன் ஜாக் கொடியை உயர்த்தி அக்கண்டம் பிரிட்டிஷாருக்குச் சொந்தம் என்று பிரகடனப் படுத்தி விட்டார். அதிலிருந்து இக்கண்டம் பிரிட்டிஷாரின் ஆளுகைக்குட் பட்டிருக்கிறது.

முதலில் இங்கு பிரிட்டிஷார் தீவாந்திர சிட்சைபெற்ற கைதிகளையே அனுப்பிவந்தார்கள். அது ஜன்மதண்டனை யடைந்தவர்களின் வாசஸ்தலமாகவே சுமார் 1851-ம் வருஷம் வரையிருந்து வந்தது.

ஆனால் 1851-ம் வருஷம் அங்கு ஏராளமாகத்தங்கச் சுரங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இதனால் லாபம் அடையும் பொருட்டு பெருவாரியாக ஆங்கிலேயர்கள் வந்து இந்நாட்டில் குடியேறினர். 1840-ம் வருஷத்திலிருந்தே தீவாந்திர சிக்ஷைக் கைதிகளை இங்கு அனுப்புவதை பிரிட்டிஷ் சர்க்கார் நிறுத்திவிட்டனர்.

ஜனங்கள் குடியேறி பலமாகாணங்கள் ஏற்பட்டன. அவைகளும் மாகாண சுய ஆட்சியை 1857-லிருந்து அனுபவித்தன. கடைசியில் 1901-ம் வருஷம் ஆஸ்திரேலிய ஐக்கிய ஜனநாயக அரசியல் நிர்மாணிக்கப்பட்டது.

## கண்டம்

இந்த கண்டம் ஆறுமாகாணங்களைக் கொண்டது. அவையாவன:—நியூ சவுத் வேல்ஸ், விக்டோரியா, குவீன்ஸ் லாந்து, தெற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, டாஸ்மானியா. வடதேசம், பாப்புவா, நியூகினியாவும் இதைச் சார்ந்தவைகள் தான். இதன் பரப்பு 2,974,581 சதுரமைல்கள். ஜனத்தொகை 5,247,000 (1920). தவிர சுமார் ஒரு லக்ஷம் ஆதிகுடிகளும் இருக்கிறார்கள்.



ஆஸ்திரேலியச் சிறுமிகள் தமாஷாக பொழுதுபோக்க மலைக்குச் செல்லுகிறார்கள்.

## அரசியல்

இது பிரிட்டிஷ் சக்கிரவர்த்திக்குட்பட்ட ஒரு குடியேற்ற நாட்டந்தஸ்துள்ளது. பெயரளவில் தான் பிரிட்டிஷ் அதிகாரம். உண்மையில் அவர்கள் சர்வ அதிகாரமும் அடைந்திருக்கிறார்கள். பார்லிமெண்டு முறையில் சர்க்கார் நடக்கிறது. செனட் என்ற ஒரு உயர்தரசபையும், ஜனப்பிரதிநிதி சபையையுங் கொண்டது பார்லிமெண்டு. மந்திரிசபை தேர்ந்து எடுக்கப்பட்டவர்களே அமைக்கிறார்கள். பேருக்கு கவர்னர் ஜெனரல் நிர்வாகத்தை மேற்பார்வைபார்க்கிறார். மாகாணங்களிலும் அதேபோல் தான்.

## வியாபாரம், தொழில்

இன்னும் இக்கண்டத்தில் பாதிக்கு மேல் குடியேறப் படாமலிருக்கிறது. முக்கிய தொழில் ஆட்டுமயிரினால் உற்பத்தி செய்யப்படும் கம்பளங்கள் முதலியன. விவசாயமும் நடக்கிறது. சுரங்கங்களிலிருந்து தங்கம், வெள்ளி, ஈயம் வெட்டியெடுக்கப்படுகின்றன.

## முக்கிய நகரங்கள்

சிட்னி, நியூகேஸில், மெல்போர்ன், பலாரட், பெண்டிகோ, பிரிஸ்பேன், ராக்





ஹேம்ப்டன், அடிலெயிட், பேர்த் முதலியன. ஐக்கிய சர்க்காரின் தலைநகரம் சமீபகாலம் வரை மெல்போர்னாக விருந்தது. இப்பொழுது கான்பெர்ரா என்ற புது நகரமே தலைமை ஸ்தானமாக விருக்கிறது.

இந்த கண்டத்தின் சீதோஷ்ண நிலை மிதமானது. அதிக உஷ்ணமும் இல்லை. ரொம்பக் குளிர்ச்சியும் இல்லை.

## ஜனங்கள்

ஆஸ்திரேலிய மக்கள் அநேகமாக பிரிட்டிஷாரைப் போன்றவர்கள் தான். தாய்நாட்டுப்பற்று அதிகமுடையவர்கள். சுதந்திரமான வாழ்க்கை நடத்துகிறார்கள். சமூகவாழ்வில் கட்டுப்பாடுகளும், சட்டதிட்டங்களும் அதிகம் கிடையாது. பெருந்தன்மையும், தாராளமனதும் உடையவர்கள். புதிதாக வருபவர்களிடம் ஆஸ்திரேலியர்கள் வெகு அன்புடன் பழகுகிறார்கள். அவர்கள் உள்ளம் தெளிவானது. கபடமற்றவர்கள். தங்கள் செயல்களிலும், பேச்சுவார்த்தைகளிலும் கபடமின்றி இருக்கின்றார்கள். சந்தோஷமும் குதூகலமும் அவர்களுடன் பிறந்த இயற்கை குணங்கள்.

விடுமுறை நாட்களை கேளிக்கைகளிலும் கூத்துகளிலும் செலவிடுவார்கள். அவர்களின் முக்கிய விளையாட்டு கிரிக்கட். மற்றும் லீவுநாட்களில் நண்பர்கள், குடும்பத்தார்கள் முதலியவர்கள் வனபோஜன விருந்து செய்வார்கள். அடிக்கடி வனபோஜனம் செய்வதில் அவர்களுக்கு விருப்பம். டீ பைத்தியம் அவர்களுக்கு ஜாஸ்தி. சமுத்திரஸ்நானம் செய்வதும் அவர்கள் பொழுதுபோக்குக்கு சந்தோஷமான ஒரு விளையாட்டு. குதிரை பந்தயம் ரொம்பவும் நடக்கிறது.

ஜனநாயகமும், சமரசப் பான்மையும் நிலவுகின்றன. சமூக உயர்வு தாழ்வுகள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். இதர நடையுடை பாவனைகள், பழக்க வழக்கங்களில் பிரிட்டிஷாரையே பின்பற்றி வருகிறார்கள்.

## பிரதம மந்திரிகள்

அங்கு நிலவும் சமரஸத்திற்கும், சமத்துவத்துக்கும் உதாரணமாக அக்கண்டத்தின் பிரதமந்திரிகளாக விருந்தவர்களே திருஷ்டாந்தமாக இருக்கிறார்கள். ஆஸ்திரேலிய ஐக்கியநாடு ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இதுவரையில் இருந்த பிரதம மந்திரிகளில் ஒருவர் சொற்பசம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தரின் மகன்; இன்னொருவர் கோச்சுவண்டிகள் செய்யும் தச்சனின் குமாரர்; வேறொருவர் கழனிகளில் வேலைசெய்யும் ஏழைக் கூலியின் புதல்வர்; மற்றொருவர் சுரங்கக்கூலி; ஒருவர் நித்தியக் கூலியாக இருந்தவர். இதுபோலவே முயற்சியும் சாமர்த்தியமுள்ள எவரும் முன்னுக்குவர சாதனமுண்டு.

தொழில் செய்வதில் சமர்த்தர்கள். கோதுமைதான் முக்கியமான விவசாயப் பொருள். ஆடுமாடு வளர்த்தலும், பழவகைகள் பயிர் செய்வது முண்டு. ஜனத்தொகையில் பெரும்பாலோர் முக்கியமான ஆறு நகரங்களில் மட்டும் வசிக்கிறார்கள்.

ஆஸ்திரேலியாவில் நூதன மரஞ்செடி கொடிகளும், பறவை பக்ஷிஜாலங்களும், மிருக இனங்களும் அதிகம். பறவைகளில் 'காதல்பட்சி' என்று ஒன்று இருக்கிறது. "சிரிக்கும் பறவை" மனிதரைப்போல்

சிரிக்குமாம். கங்காரு என்ற விசித்திர மிருகம் இங்குதான் காணப்படுகிறது.

## பழங்குடிகள்

ஆஸ்திரேலியாவில் ஆதிகாலந்தொட்டு வசித்துவந்த பழங்குடிகள் இன்னும் அங்கங்கே சில கூட்டங்களிருக்கின்றன. பிரிட்டிஷார் வந்து குடியேறிய பின்னர் இவர்கள் க்ஷீணதசை யடைந்து அவர்கள் தொகை நாளடைவில் மிகக் குறைந்து விட்டது. இவர்கள் நூறுவருஷமாக பிரிட்டிஷாருடன் பழகியும் தங்கள் புராதன அநாகரிகத்தைக் கைவிடவில்லை. கல்வியும், நாகரிகமும் இவர்களிடம் பரவவில்லை. பலகொடிய பழக்கங்களும், வழக்கங்களும், எண்ணங்களும் இன்னும் கையாளப்பட்டு வருகின்றன. மூடநம்பிக்கைகள் வெகு அதிகம். ரொம்பவும் உயரமாக, சுமார் எட்டடி உயரமுள்ளவர்கள். நல்லதேகக்கட்டு. சாக்கலேட் நிறம். உடம்பில் பலவிதக் கலர்களைக் கோலம்போல் பூசிக்கொண்டு அழகு செய்து கொள்வார்கள். பூசைகள் போடுவதற்கும் அதுமாதிரியே பலவிதங்களில் வர்ணத்தைப் பூசிக்கொண்டு இருப்பார்கள். யுத்தத்துக்குப் போகுமுன் ஆயுதங்களை வைத்துப் பாட்டுப்பாடி பூஜை போடுவார்கள். மந்திரிக்கப்பட்ட வர்ணங்களை உடலெல்லாம் பூசிக்கொள்வார்கள். லிலி புஷ்பங்களைக் கண்டால் இவர்களுக்கு ரொம்பவும் பிரியம். லிலியைக் கறியாகச் சமைத்து உண்பார்கள். அவைகளைப் பறிக்க ஸ்திரீகள் தான் சந்தோஷமாக குளங்களில் இறங்குவார்கள். லிலித் தண்டை பச்சையாகவே தின்பார்கள். வேரைச் சுட்டு அருந்துவார்கள். அதன் விதைகளை நிறையச் சேர்த்து கற்களின் உதவியால் மாவாக்கி தோசைசுட்டு உண்பார்கள். மற்றப்படி மீன், மாமிசம் முதலியவைகள் தான் இவர்களுக்கு ஆகாரம். துக்கசம்பவங்களில் தங்கள் மார்பில் சூடுபோட்டுக் கொள்வார்கள். அவர்கள் முக்கிய ஆயுதம் ஈட்டி. இந்த வகுப்பினர்களில் அருந்தா, வாரமுங்கா, பிம்பிங்கா, நமில்ராய் முதலிய கூட்டத்தார் முக்கியஸ்தர்கள்.



# ச மை ய ல்

## ரஸகுல்லா

ஸ்ரீமதி சுந்தரி

அறுசுவை யுண்டிகளில் இனிப்புப் பதார்த்தங்கள் ஒன்று. தித்திப்புப் பண்டங்கள்செய்வதில் பேர்போனவர்கள் வங்காளிகளே. இவ்விதபக்ஷணங்கள் செய்வதில் அவர்கள் கைதேர்ந்தவர்கள். அவர்கள் பாகமுறையும் சிறந்தது. வங்காளிகள் செய்யும் இனிப்புப் பண்டங்களில் மிகவும் ருசியானதும் விரும்பத்தக்கதும் ரஸகுல்லாவே. இதுமட்டும் சரியாக வாய்த்து விட்டால் தின்பதற்கு வெகு இன்பமாயிருக்கும். அது செய்யும் விதமாவது:—

பாலாடை 1 பவுண்டு, சவ்வரிசிமாவு ½ அவுன்சு, சர்க்கரை 5 பவுண்டு, சுத்தமான தண்ணீர் 1½ பவுண்டு, நல்ல கெட்டி ஷர்பத்து தேவையான அளவு இவைகளை எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

ஜவ்வரிசிமாவையும் பாலாடையையும் கலந்து தாம்பாளத்தில் போட்டு பிசைய வேண்டும். நன்றாகப் பிசைந்தபின் அந்த மாவை ஆறு கூறுகளாகப்பிரித்து கையினால் பந்து போல் உருண்டையாகச் செய்யவேண்டும். ஜவ்வரிசிமாவு சேர்ப்பது உருண்டை பிடிக்க வசதியாக இருப்பதற்காக மட்டும்தான். அது ருசியைக் குறைத்து விடும். அதிகமாகச் சேர்க்கக் கூடாது. ரஸகுல்லா நன்றாய் தயார் செய்வதற்கு இருப்புச் சட்டி நன்றாய்க் காய்ந்திருக்க வேண்டும். அடுப்பும் தகதகவென்று எரிய வேண்டும்.

பின்னர் சர்க்கரையைத் தண்ணீரில் போட்டு ஒரு ஆழமான பாத்திரத்தில் காய்ச்சவும். பாகு சரியான பக்குவம் அடைந்தபின் உருண்டைகளை ஒவ்வொன்றாக மெதுவாக அந்தப்பாகில் போடவும். அவைகள் சரியாக வேகும் வரை, அதாவது சுமார் இருபது நிமிஷங்கள் அதை அடுப்பிலேயே வைத்திரு. ரஸகுல்லா பக்குவமாக இருப்பதற்கு பாகு ரொம்பவும் கெட்டியாகிப்போக விட்டு விடாதபடி அப்போதைக்கப்போது பாகில் சிறிது ஜலம் ஊற்றிவர வேண்டும். அதற்காக பாகு ரொம்பவும் தண்ணீராகப் போகவும் விட்டுவிடக் கூடாது. நீராவியாகப்போகும் ஜலத்தைச் சரிப்படுத்த வேண்டியே தண்ணீர் சேர்க்கச் சொல்லுவது. ஆகையால் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஒரு நிமிஷத்துக்கொருதடவை மூன்று அல்லது நான்கு தடவைகள் கொஞ்ச ஜலத்தை பாகின் மேல் லேசாகத் தெளிக்க வேண்டும். தெளிக்கும் தண்ணீர் உருண்டைகளில் படக்கூடாது. ஐந்து நிமிஷத்தில் உருண்டை கண்ணுக்குத் தெரியாது.

உடனே பாலேடு நீக்கியால் உருண்டைகளை எடுத்துத் தயாராக வைத்திருக்கும் ஷர்பத்தில் போடவும். இந்த ஷர்பத்துப் பாகு பாலாடை உருண்டைகள் வெந்த பாகைவிட கெட்டியாக இருக்க வேண்டும். தவிர அதுவும் சூடாக விருக்க

வேண்டும். இல்லையானால், குளிர்ந்திருந்தால், சூடான பாகிலிருந்து குளிர்ந்த பாகில் போட்டால் உருண்டைகள் உருவத்தில் சுருங்கி உருக் கெட்டுவிடும். ரொம்பவும் ருசியாயிருக்க வேண்டுமானால் வரவரக்குறையும் உஷ்ணத்தன்மையான பல பாகுகளில் முக்கி எடுக்கலாம்.

ரஸகுல்லா சரியாக வெந்து விட்டதா இல்லையா வென்று பார்க்க ஒரு சுலபமான வழியிருக்கிறது. வெந்துகொண்டிருக்கும்போதே ஏதாவது ஒரு உருண்டையை எடுத்து தயாராக இருக்கும் குளிர்ந்த பாகில் போட வேண்டும். உருண்டை உதிர்ந்தால் பக்குவமடையவில்லை யென்று தெரியும். அப்படியே உருக்குலையாமலிருந்தால் நன்றாக வெந்து விட்டதென்பது விளங்கும். அந்நிலையில் அவைகளை எடுத்து சூடான பாகில் போடலாம். நல்ல ரசகுல்லாவை ஒரு கடி கடித்த உடனே வாய் நிறைய ரசம் வந்து விடும்.

### ஸ்பாஞ்சு ரஸகுல்லா

இதற்கு ஸ்பாஞ்சு ரஸகுல்லா என்ற பெயர் ஏற்பட்டது அது ஸ்பாஞ்சுபோல் சிறு துவாரங்கள் நிறைந்திருப்பதால் தான். இதில் ரசம் அதிகம் சாடும். இது தயார் செய்வதில் ஜவ்வரிசிமா சேர்க்கப்படவில்லை. பாலாடை ஒட்டிக்கொள்ள ஒருவித வஸ்துவும் உபயோகிக்கப்படவில்லை. அதனால் அருந்த இது அதிக ருசியாக இருக்கிறது. ஆனால் செய்வது கஷ்டம். இதைச் செய்ய சுத்தமான பால் ஆடை வீட்டில் தயார் செய்து ஆடை சூடாகவிருக்கும்போதே உருண்டையாக்கப்பட்டு சாதாரண ரசகுல்லா செய்யப்படுவதுபோல் ரொம்ப கவனமாய்ச் செய்ய வேண்டும். கால தாமதம் சற்றும் ஏற்படக்கூடாது. பாகு கொதித்துக் கொண்டே யிருக்கவேண்டும். இல்லாவிடில் உருண்டைகள் உதிர்ந்து விடும்.

---

## மாமியார்கள் கிளர்ச்சி

மாமியார் மீது இருந்து வரும் துவேஷத்தை ஒழிக்கும் பொருட்டு அமெரிக்காவில் டெக்ஸாஸ் பிரதேசத்தை சார்ந்த அமாரில்லோ என்னு மிடத்தில் மாமியார் விழாவை ஆடம்பரத்துடன் நடத்தினார்கள். இந்த விழாவுக்குத் தலைமை வகித்தவர் டெக்ஸாஸ் கவர்னர். கவர்னர் பேசுவதையும் மாமியார் பெருமை என்னவென்பதையும் அறியும் பொருட்டு சுமார் 50000 ஜனங்களுக்குமேல் கூடியிருந்தார்கள். ஊர்வலங்கள் சிறப்பாக நடந்தன. மாமியார் ஏராளமாக வந்திருந்தார்கள். கவர்னர் மாமியார்களின் பெருமையைப் பற்றிப் பேசினார். "மருமகன் மாமியார் மீது துவேஷம் கற்பிப்பது அற்பத்தனமானது. அவர்களே மருமக்களின் இன்பத்துக்கும், துன்பத்துக்கும் மூல காரணமாயிருக்கிறார்களென்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. மாமியார் என்றால் இப்பொழுது மருமக்கள் மாருக்கு வேடிக்கையாக இருக்கிறது. இந்த துவேஷம் ஒழிந்து, மாமியார் மீது நம்பிக்கையும், அன்பும் ஏற்பட வேண்டும்" என்று கவர்னர் பேசி முடித்தார்.



# விசித்திரம் ஆனால் வாஸ்தவம்

### 129-வயது மாப்பிள்ளை

129 வயதுள்ள ஹஸன் பாபா என்னும் ஒரு துருக்கியர் 37 வயதுள்ள பாத்திமா காணம் என்னும் மாதை மணமுடித்திருக்கிறாராம். திடகாத்திரமும் தெளிவான பார்வையும் வாய்ந்திருக்கும் இவர் இன்னும் வாரத்துக்கு மூன்று முறை 24 மைல் நடந்து வருவதை அப்பியாசமாகக் கையாண்டு வருகிறாராம். அவரது 40வது பிராயத்தில் 'கிரிமியன்' யுத்தத்தில் சேர்ந்திருந்தாராம். முஸ்தபா கமாலின் சுதந்திரப் போரிலும் ராணுவ வீரராய் உழைத்தாராம். இவருக்கு நரை இப்போதுதான் வருகிறதாம்.

... ... ...

### மரத்திற்கு இஞ்செக்ஷன்

மருந்தை இஞ்செக்ஷன் செய்வதன் மூலம் உள்ளுக்குச் செலுத்தியதனால் இறந்துபோகக்கூடிய நிலைமையிலிருந்த ஒரு சீமைஅத்தி மரத்தைக் கெண்டியிலுள்ள கிழக்கு மாலிங் ரிஸர்ச் ஸ்டேஷனிலுள்ளவர்கள் உயிர்ப்பித்திருக்கின்றனராம். அம்மரமானது காய்கள் காய்க்காமலும் இலைகள் மஞ்சள் நிறமாயும் உள்ளதாகக் காணப்பட்டது. முதலில் நாமிரம், துத்தநாகம், மாங்கனீஸ் முதலியவைகளை இலைகளுக்கு இஞ்செக்ஷன் செய்து பார்த்தார்கள். பலன் ஏற்படாதிருந்ததால் கடைசியாக இரும்பை இஞ்செக்ஷன் செய்ததில் இலை மறுபடியும் பசுமையாக மாறிற்றும். பிறகு அம் மரத்திற்கே இரும்புத்திரவ இஞ்செக்ஷன் செய்தார்கள். பத்து நாட்களில் மரம் பிழைத்து விட்டதாம்.

... ... ...

### நாலுவயது நீச்சு வீரன்

ரங்கூனில் நாலுவயது சென்ற மாங்கியார் என்ற பர்மியக் குழந்தை ஐராவதி நதியை நீந்திக்கடக்கிறதாம். அந்தக் குழந்தை இரண்டு வயதிலே நீந்தத் தொடங்கியதாம். அது எந்த நேரமும் தண்ணீரில் கிடந்து நீந்திக் கொண்டிருக்கிறதாம்.

... ... ...

### நீலி மனைவி

போலந்தில் வசியும் ஒருமாது தனது கணவன் அன்னிய மாதருடன் உறவு கொண்டாடுவதுபற்றி ஆத்திரம் கொண்டு கணவன் கழுத்தில் நாய்ச் சங்கிலியைக் கட்டி நாய்க்கூட்டில் வைத்துப் பட்டினி போட்டு, இனி வேறு எவளையும் கருத மாட்டேன் என்று சத்தியம் வாங்கிய பின் அவிழ்த்து விட்டனராம்!

... ... ...

### மான் வேலையாள்

புடாபெஸ்டில் ஒரு கடையில் ஒரு கலைமான் வேலையாள்போல வேலை செய்து வருகிறதாம். அது வருகிறவர்களை வரவேற்கிறதாம். மாதர்களாயிருந்தால் அவர்கள் கரங்களை முத்தமிடுகிறதாம்.

## 110-ல் இளமை

வங்காளத்தில் கூல்ஞ நகரில் காசிநாத போஸ் என்பவருக்கு 110 வயதாகிறது. ஆயினும் அவர் பற்கள் உறுதியாயிருக்கின்றனவாம். வக்கீலான அவர் ஒழுங்காக நீதி ஸ்தலத்திற்குப் போய் வருகிறாராம்.

... ... ...

## "டெஸ்ட் டியூப்" குழந்தைகள்

"டெஸ்ட் டியூப்" மூலம் குழந்தைகள் என்றால் நேற்றுவரை அது விஞ்ஞானிகள் செய்யும் விபரீதம் என்றே கருதி வந்தீர்களல்லவா? ஆனால் அதில் ஆச்சரியத்துக்குரிய விஷயம் ஒன்றுமில்லையென்றும், ஆண் சம்பந்தமின்றிப் பெண்கள் கருத்தரிப்பது சுலபமென்றும் "டெஸ்ட் டியூப்" ஆராய்ச்சிகள் பல நடத்தியிருக்கும் நியூயார்க்கைச் சேர்ந்த டாக்டர் பிரான்ஸிஸ் டி. ஸேமூர், டாக்டர் ஆல்பிரட் கோயர்னர் ஆகியவர்கள் கூறுகின்றனர்.

"டெஸ்ட் டியூப்" என்பது வைத்தியர்கள் ரஸாயனக் கலவை ஆராய்ச்சிக்காக உபயோகிக்கும் கண்ணாடிக் குழல். அதில் ஆணுடைய விந்துவை எடுத்து, பெண்ணின் நாதத்துடன் கலந்து ஆராய்ச்சிகள் நிகழ்த்தியதன்பின், ஆண் சம்பந்தமின்றியே பெண் கருத்தரிக்கும் முறை கண்டுபிடிக்கப்பட்டதால், அப்படிப் பிறந்த குழந்தைகளுக்கும் "டெஸ்ட் டியூப்" குழந்தைகள் என்றே கூறப்பட்டது. கடந்த ஐந்து வருடகாலமாக இதே முறையில் பல குழந்தைகள் பிறக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது.

## கண்ணாடி நூல்

இக்காலத்தில் விஞ்ஞானம் வானத்தை வில்லாக வளைக்கவும் கண்டுபிடித்து விடும் போலிருக்கிறது. முடியாதென்கிறீர்களா? மணலைக் கயிராகத் திரிக்கும்போது ஏன் வானத்தை வில்லாய் வளைக்க முடியாது? கண்ணாடியும் ஒரு விதமான மண்தான். அமெரிக்காவில் கண்ணாடியிலிருந்து நூல் செய்து ஆடைகள் உண்டாக்கும் வழியைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

... ... ...

## இருபத்தைந்து பவுன் முத்தம்

ஹாலிவுட்டில் முத்தங் கொஞ்சுவதில் நிபுணர் ஒருவர் இருக்கிறார். ஒருதரம் அவர் முத்தம் கொஞ்ச இருபத்தைந்து பவுன் கொடுக்க வேண்டுமாம். இவர் முத்தங் கொஞ்சுவதில் வெகு சாமர்த்திய சாலியாயிருப்பதே எல்லோரும் இவர் மீது காதல் கொண்டிருப்பதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

... ... ...

## கிளிக்கு ரூ. 9000

பால்டிமோர் என்ற விடத்தில் ஒரு அம்மையார் தனது இரண்டு கிளிகளின் போஷணைக்காக ரூ. 9000 உயில் எழுதி வைத்து விட்டு இறந்திருக்கிறாள். அவள் பெயர் ஸ்ரீமதி ராகேல்வீம்ஸ். அவள் அந்த கிளிகளிடத்துக் கொண்ட காதலாலேயே ரூ. 9000 அவைகளுக்குக் கொடுக்கத் துணிந்திருக்கிறாள் என்று கூறப்படுகிறது. இந்த 9000 ரூபா மூலதனத்தைக் கொண்டு அவளுடைய மருமகன் தியோடர் என்பவர் அந்தக் கிளிகளைக் காப்பாற்றி வருவார்.





## பூகம்பத்தை அறிவிக்கும் மீன்கள்

'பூனைமீன்' என்பது ஜப்பானிலுள்ள ஒருவகை மீனின் பெயர். அம்மீன்கள் கூட்டமாகத் தண்ணீரின் மட்டத்தில் நீந்தினால் அதன் பின் பூகம்பம் உண்டாகுமாம்.

... ... ...

## "முத்தம் வேண்டாம்"

"முத்தம் வேண்டாம்" என்று தடுப்பதற்காக வியன்னாவில் ஓர் சங்கம் பெண்களால் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதாம். இதில் 5000-க்கு மேற்பட்ட பெண்கள் அங்கத்தவர்களாக இருக்கிறார்களாம்.

... ... ...

## காதல் அளக்கும் கருவியா?

காதலின் ஆழத்தை அளக்கக் கூடவா இயந்திரத்தைக் கண்டு பிடித்து விட்டார்கள்? ஆம் கண்டு பிடித்தவர் ருமானியா தேசத்தவரான புரபசர் ஜார்ஜ் மாரினெஸ்கோ.

ஈயத்தால் செய்யப்பட்ட இரண்டு தட்டுகளுக்கும் கேல்வனோமீடர் என்னும் அளவைக் காட்டும் கருவிக்கும் இடையே பல மின்சார கம்பிகள் யாருடைய மனதின் ஆழத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமோ அவருடைய இருகைகளிலும் அவ்விரண்டு தட்டுகளைக் கட்டி விட்டு, காதலிப்பதாக சந்தேகிக்கப்படும் பெயர்களை ஒவ்வொன்றாய்ச் சொல்ல வேண்டும். காதலிக்கும் பேர்வழிகளின் பெயர் உச்சரிக்கும் போது, கேல்வினோ மீடரிலுள்ள ஊசி இப்படியும் அப்படியும் ஊசலாடும். காதல் அதிகமானால் அதிகமாகவும் குறைவானால் குறைவாகவும் அந்த ஊசி ஊசலாடும்!

... ... ...

## பேசும் கோழி

லண்டனிலுள்ள உயிர்ப் பிராணிக் காட்சி சாலையில் டாக்டர் டேவிட் கேட்ஸ் என்பார் பிராணிகளுடைய பாஷையைப் பற்றி ஆராய்ச்சி செய்து வருகிறார். இன்னும் முடிந்தபாடில்லையாயினும், கோழி ஒன்பது வார்த்தைகள் பேசுகிறதென்றும், அந்த ஒன்பது விதமான சப்தங்கட்கும், ஒன்பது அர்த்தங்கள் உண்டென்றும், அந்த ஒன்பது வார்த்தைகளையும் உச்சரிக்கக் கற்றுக் கொள்ள ஒரு கோழிக்குஞ்சுக்கு 240 நாட்களாகின்றனவென்றும் அவர் கூறுகிறார்.

... ... ...

## பெண் பாதங்கள் 25,000 பவுன்

ஹேஸல் பிக்போர்டு என்பவள் சிறந்த நடிகை. அவள் வயது பதினெட்டே. இவள் வின்டிசிட்டி என்ற நகரில் வசித்து வருகிறாள். தன் பாதங்களிரண்டையும் இவள் 25,000 பவுனுக்கு இன்ஷூர் செய்திருக்கிறாள். இவளுடைய பாதங்களைப் போல் அழகான பாதங்களையுடைய வேறொருவள் அமெரிக்கக் குடியரசிலேயே இல்லையாம்.

# செய்தித்திரட்டு

## வஸ்துக்களை மறைக்கும் கிரணம்

தற்போதைய புதிதாகக் கண்டு பிடித்த விஷயங்களில், ஸ்டீபன் பிருகில்லால் கண்டு பிடிக்கப்பட்ட 'வஸ்துக்களை மறைக்கும் ஒளி' முக்கியமானது. சமீபத்தில் லண்டனில் நடந்த மோட்டார் பொருட் காட்சி சாலையில் இவர் கண்டு பிடித்த கருவியின் சுவிச்சைத் தொட்டவுடனே அங்கிருந்த மோட்டார்கள் யாவும் மறைந்தன.

இவர் கண்டு பிடித்திருக்கும் கருவி ஒருவித ஒளியைக் கொடுக்கிறது. இவ்வொளி படரும் எல்லா வஸ்துக்களும் திடீரென் மறைகின்றனவாம்.

இக்கருவிகள் சீக்கிரத்தில் மேடைகளிலும் உபயோகிக்கப் படும். இதனால் ஒரு மேடையிலுள்ள வாத்திய கோஷ்டி திடீரென மறையும். ஆனால் பாடல்கள் மாத்திரம் கேட்கும். பின்னர் சிறிது நேரத்தில் வாத்தியங்கள் மாத்திரம் தோன்றும். நடிகர்கள் திடீரென்று மேடையிலிருந்து மறைவர். அல்லது சபைக்கு அவர்களின் பாதங்கள் மாத்திரம் தெரியும். இவ்வாலிபர் இந்த மாந்திரீக கிரணத்தால் ஆகாய விமானங்களையும் மறையச் செய்ய முயற்சித்துக் கொண்டிருக்கிறார். நாளுக்கு இவர் ஆயிரம் பவுன் சம்பாதிப்பதாகத் தெரிகிறது.

... ... ...

## முஸோலினி மகன் மணம்

ஸினர் முஸோலினியின் மூத்த குமாரரான ஸினர் விட்டோரியோவுக்கும், ஸினரினா ஆரஸலோ புவோலிக்கும் விவாகம் நடை பெற்றது.

மணமகன், மணமகள் இருவருக்கும் வயது 22.

... ... ...

## பெண்களுக்கு ராணுவப் பயிற்சி

துருக்கிப் பெண்களுக்கு பள்ளிக் கூடங்களில் ராணுவப் பயிற்சி யளிக்கும்படி துருக்கி கல்வி மந்திரி உத்திரவிட்டிருக்கிறார். விமானப் பயிற்சி யளிப்பதற்குத் தகுதியான பெண்களையும் தெரிந்தெடுக்கும்படி உத்திரவிட்டிருக்கிறார்.

.... .... ....

## மனிதன் மறைய நூதன யந்திரம்

மிலான் நகரத்தில் பிரொபஸர் மான்ஸின் ஒரு ஆச்சரியமான யந்திரத்தைக் கண்டுபிடித்து ஒருவித ஒளியை உண்டாக்குகிறார். அந்த ஒளி யார் மீது பட்டாலும் அவர் உடனே மறைந்து விடுவார். நம் கண்ணுக்கு அவர் தென்படமாட்டார்.

.... .... ....

## செடிகளுக்கு போர்வை

பனி பொழியும்போது மனிதர்கள் கம்பளியால் தம்மை மூடிக்கொள்வதுபோல அமெரிக்காவில், பனியால் பயிர்கள் கரிந்து போகாதிருப்பதற்காக வயல்களில் காகிதப்போர்வை விரிக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் நிலத்தை இவ்வாறு போர்வை போட்டு மூடுவதற்கு 80 நிமிஷம்தான் பிடிக்கிறது. செலவும் மிகவும் குறை. ஒரு ஏக்கருக்கு சுமார் 30 ரூபாய்தான் செலவாகும். இது அமெரிக்க விவசாயிகளுக்கு மிகவும் லாபமாக இருக்கிறதாம்.



.... .... ...

## ஸ்திரீகள் சொத்துரிமை மசோதா

திரு தேஷ்முக் அவர்களால் இந்தியா சட்டசபையில் கொண்டு வரப்பட்ட ஸ்திரீகள் சொத்துரிமை மசோதா பிப்ரவரி 4உ நிறைவேறியது. இதனால் ஹிந்து விதவைகளுக்கு சொத்து பாத்தியதை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. சபை இம் மசோதாவை அங்கீகரிக்க வேண்டுமென்று திரு தேஷ்முக்கும், சட்ட மெம்பர் சர். என். என். சர்க்காரும் உருக்கமான பிரசங்கங்கள் செய்தார்கள். ஸ்திரீகளின் அடிமைத்தனத்தை அகற்ற வேண்டுமென்று திரு. சர்க்கார் பேசியது கவனிக்கத்தக்கது.

.... .... ....

## கலப்பு விவாஹ மசோதா

டாக்டர் பகவான் தாசால் கொண்டு வரப்பட்ட ஹிந்து கலப்புமண மசோதா இந்தியா சட்டசபையால் நிராகரிக்கப்பட்டது. சர்க்காரும் அவர் கோஷ்டியாரும் மசோதாவின் நோக்கத்தை எதிர்த்து ஓட்டு செய்ததால் மசோதா தள்ளபட்டது. இது ஸ்திரீகளுக்கு ஒரு தோல்வியே.

... ... ...

## சுரங்கங்களில் ஸ்திரீ தொழிலாளர்.

இந்தியாவில் பூமிக்குக்கீழ் கனிகளில் 1937 ஜுலை முதல் தேதி முதல் ஸ்திரீ தொழிலாளர்கள் நியமிக்கப்படக் கூடாதென சபையுடன் கூடிய கவர்னர் ஜெனரல் புதிய உத்தரவு பிறப்பித்திருக்கிறார். சுகாதார வேலையில் ஈடுபட்டிருக்கும் ஸ்திரீ தொழிலாளர் இதில் பாதிக்கப்படவில்லை. ஆனால் இனி கனிகளில் ஸ்திரீ தொழிலாளர் செல்வது ஒரு பாஸ் முறைக்குட்படுத்தப்படும். அது சம்பந்தமான விவரங்களும் இதற்கென விருக்கும் ஒரு ரெஜிஸ்டரில் பதிவு செய்யப்படும்.

கவர்ன்மெண்டார் 1890-ம் வருஷம் முதல் இவ்விஷயத்தை ஆலோசித்துவந்திருக்கின்றனர். 1901-லும், 1923-லும் நிறைவேற்றப்பட்ட இந்திய கனிச்சட்டத்தின்படி கனிகளில் ஸ்திரீ தொழிலாளர் வேலை செய்வதைத் தடுக்க ராஜப்பிரதிநிதிக்கு அதிகார மளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கனித்தொழில் அதிகாரிகள் இதற்கேற்ப தங்கள் வேலையைச் சரிப்படுத்திக் கொள்ள அவகாச மளிக்க வேண்டி யிதில் இவ்வளவு தாமத மேற்பட்டிருக்கிறது. 1923-ல் இந்தக் கனிச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பொழுது 90,000 ஸ்திரீ தொழிலாளர் கனிகளில் வேலை செய்து வந்தனர். மொத்த கனித்தொழிலாளரில் இது மூன்றிலொருபாகமாகும்.

... ... ...

## காரனேஷன் கோச்வண்டி.

ஆறுவது ஜார்ஜ் மன்னர் தான் சிம்ஹாசனம் ஏறப்போகும் போது ஏறிப்போகும் கோச்வண்டி 241 அடிநீளமாம், அதன் நிறை நான்கு டன்கள். அது 1761-ம் வருஷம் சுமார் 8000 பவுன் செலவில் கட்டப்பட்டது. எட்டுக்குதிரைகள் அவ்வண்டியை இழுத்துச் செல்லும்.

# கதம்பம்

## மனைவியை அடகுவைத்த சோஷலிஸ்ட்

டோக்கியோ நகரசபைத் தேர்தலுக்கு நிற்க விரும்பிய ஒரு ஜப்பான் வாலிபன் தேர்தல் டிப்பாசிட்டுக்காகத் தனது மனைவியை ஒரு விபசார விடுதியில் 100 பவுனுக்கு அடகுவைத்தான். தேர்தலில் அவனுக்கு வெற்றிகிடைத்தது. அவனுடைய சகாக்கள் அம்மாதை மீட்க 10 பவுன் வரையில் சேர்த்திருக்கிறார்களாம். இவன் ஸோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவன்.

... ... ...

## என்ன முறை?

டான்ஜிம்மர் என்ற 23 வயது சார்ல்ஸ் நகரக் குடியானவனும் அவனுடைய தந்தை 61 வயது ஜாக்கபும் இரு சகோதரிகளை மணந்து கொண்டனர். அவர்களது உறவு முறை எவ்வளவு வேடிக்கை!

... ... ...

## கணவன் மதிப்பு!

கப்பல் விபத்தில் இறந்து போன கணவனுக்காக கம்பெனி 1,167 பவுன் நஷ்ட ஈடு தரவேண்டுமென்று காதரைன் ஹாலண்டு என்ற மாது வழக்குதொடர்ந்தார். நீதிபதி நஷ்ட ஈட்டை அனுமதித்தார். கணவன் இறக்கும் போது வயது 39. அவர் 65 வயதுவரை வேலை செய்திருக்கலா மென்ற கணக்கின் பேரில் சம்பளக் கணக்கிட்டு நஷ்ட ஈடு கோரப்பட்டது.

... ... ...

## புலியை மிரட்டிய கண்கள்

பெருவில் உள்ள ஒரு இந்தியத் தொழிலாளி, ஒரு நாள் கலப்பையில் பூட்ட மாடுகளைத் தேடிச்சென்றானும். புலி அவனைப் பார்த்தது; அவன் புலியைப் பார்த்தான். இரண்டுபேரும் இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர். சில நிமிஷங்களில் புலி வேறு திசையில் திரும்பி பாய்ந்து சென்று விட்டதாம்.

... ... ...

## கெமால் சிலை

ஒரு லக்ஷத்து அறுபதினாயிரம் பவுன் செலவில் துருக்கி சர்வாதிகாரி கெமால் பாஷாவின் உருவச்சிலை யொன்றை மிகப் பெரிய அளவில் செய்து அதை உயரமான மலையுச்சியில் வைத்து பலமைல் தூரத்துக்குத் தெரியும்படி செய்யவேண்டுமென துருக்கியில் ஒரு திட்டம் போடப்பட்டிருக்கிறது.

... ... ...

## முசுடு

ஆல்பியன்கிளோ என்னும் 72 வயது வாய்ந்த ஒருவர் தமது மனைவி இறந்த பின்பு சமுத்திரக் கரையில் இரு பாய்மரக் கல்ங்களில் ஒரு வீட்டை நிர்மாணித்துக் கொண்டு தனியாக வசிக்கிறார். பெண்களிடம் தமக்குள்ள துவேஷம் காரணமாகவே அவ்வாறு வசிக்கிறாராம். அவர் தம் வீட்டில் பல இடங்களிலும் பெண்களைப்பற்றிய நிந்தனைகள் அடங்கிய பல பழமொழிகளை எழுதியிருக்கிறாராம்.

... ... ...

## காதல்பெருக்கு

அமெரிக்க ஐக்ய தேசத்திலுள்ள டெக்ஸாஸ் என்னுமிடத்தில் ஒருவர் தமது காதலியைத் காதல் பெருக்கின் காரணமாகக் கட்டியணைத்துக் கொண்டாராம். மிக்க பலத்துடன் அணைத்து விட்டதால் அம்மாதின் விலா வெலும்புகளில் நாலு முறிந்து போய் விட்டனவாம். எனவே காதலி என்று சொல்லப்பட்ட அம்மாது ஆயிரம் பவுனுக்கு அந்த ஆடவர் மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

# பஞ்சாங்கம்

| இங்கிலீஷ் | தமிழ் | வாரங்கள் | 1937ஹு மார்ச்சுமீ தாதுஹு மாசிமீ-பங்குனிமீ — திதி, நக்ஷத்திரம், தியாஜ்யம் முதலியவை. |
|---|---|---|---|
| 1 | 18 | திங் | சது 28-36, சித் 33-21, ரா 19-37. |
| 2 | 19 | செவ் | பஞ் 34-36, ஸ்வா 40-35. [வார் சாத்துமுறை. |
| 3 | 20 | புத | ஷஷ் 41-9, விசா 48-17, சே 0-23, திருநகர், ஆழ் |
| 4 | 21 | வியா | ஸப் 47-42, அநு 55-55, சே 3-34. |
| 5 | 22 | வெ | அஷ் 53-34, கேட் 60-0, தி 11-32, ஸீதா ஜனனம். |
| 6 | 23 | சனி | நவ 58-10, கேட் 2-50, தி 24-33, ராமதாஸ நவமி. |
| 7 | 24 | ஞாய | தச 60-0, மூல 8-29, தி 4-6, ரா 4-27, திருதினஸ். |
| 8 | மாசிமீ 25 | திங் | தச 1-0, பூரா 12-25, ரா 3-36, ஸ்மார்த்த ஏகாதசி. |
| 9 | 26 | செவ் | ஏகா 1-50, உரா 14-23, தி 24-22. |
| 10 | 27 | புத | துவா 0-36, உப 56-50, ஸ்ரீவ 14-19, தி 24-0. |
| 11 | 28 | வியா | சசி 52-38, அவி 12-24, தி 29-22, மஹா சிவராத்திரி. |
| 12 | 29 | வெ | ● 46-38, சத 8-56, தி 23-42. |
| 13 | 30 | சனி | பிர 39-34, பூட் 4-20, உப 54-40, தி 26-12, மீனரவி |
| 14 | 1 | ஞாய | துவி 32-4, ரே 53-20, தி 25-40. [45-38. |
| மார்ச்சுமீ 15 | 2 | திங் | திரி 24-26, அசு 47-45, ரா 16-51, திரிதியா திதி. |
| 16 | 3 | செவ் | சது 17-11, பர 42-34, தி 9-41, சாந்த சதுர்த்தி. |
| 17 | 4 | புத | பஞ் 10-30, * 38-1, தி 10-17, ஷஷ்டி திதி. |
| 18 | 5 | வியா | ஷஷ் 4-35, உப 55-4, ரோ 34-24, தி 15-36. |
| 19 | 6 | வெ | அஷ் 55-42, மிரு 31-45, ரா 22-16 கரிநாள். |
| 20 | 7 | சனி | நவ 52-49, ஆரு 30-11, கணநாதர். [யனம் 0-5. |
| 21 | 8 | ஞாய | தச 50-57, புந 29-38, சே 3-53, ரா 19-47, மேஷா |
| 22 | பங்குனிமீ 9 | திங் | ஏகா 50-5, பூச 30-4, திருநாராயணபுர வைரமுடி. |
| 23 | 10 | செவ் | துவா 50-11, ஆயி 31-28, தி 2-49, நரசிம்ம துவா. |
| 24 | 11 | புத | திர 51-14, மக 33-46, தி 2-37, ரா 24-46, மயிலை |
| 25 | 12 | வியா | சசி 53-17, பூர 37-3, திருவான்-நடனம். [அறுபத். |
| 26 | 13 | வெ | ○ 56-1, உத் 41-19, சே 0-20, பங்குனி உத்திரம், ஹோலி, காமதகனம், ருத்திரபாத தரிசனம். |
| 27 | 14 | சனி | பிர 60-0, ஹஸ் 46-35, தி 4-10, திருதினஸ்பிருக். |
| 28 | 15 | ஞாய | பிர 0-32, சித் 52-49, தி 8-40, கரிநாள், வாதிராஜர். |
| 29 | 16 | திங் | துவி 5-32, ஸ்வா 59-53, தி 8-28, காரைக்காலம். |
| 30 | 17 | செவ் | திரி 11-29, விசா 60-0, தி 15-40, [illegible] திதி. |
| 31 | 18 | புத | சது 17-52, விசா 7-31, தி [illegible], [illegible] |

சென்னை-600 005

# பிரசவ அட்டவணை

[பொதுவாக ஸ்திரீகள் கர்ப்பந்தரித்து 280 நாட்களில் பிரசவிக்கிறார்கள். கடைசித் தூரத்துக்கப்புறம் முதல்நாளிலிருந்து கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியது. கீழ்க்கண்ட அட்டவணையில் உதாரணமாக ஜனவரி 1வ கர்ப்பம் கொண்டவள் அக்டோபர் 8வ குழந்தை பெறுவாள் என்று முதலில் காட்டப்பட்டிருக்கிறது. அதுபோலவே மேல்வரிசையிலுள்ள தேதியில் கர்பந்தரித்தவள் அந்த எண்ணுக்கு நேரே கீழ்வரிசையிலுள்ள தேதியில் பிரசவிப்பாள்.]

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜனவரி |
| அக்டோபர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | நவம்பர் |
| பிப்ரவரி | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | | | | பிப்ரவரி |
| நவம்பர் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | | | | டிசம்பர் |
| மார்ச்சு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மார்ச்சு |
| டிசம்பர் | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | ஜனவரி |
| ஏப்ரல் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஏப்ரல் |
| ஜனவரி | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | | பிப்ரவரி |
| மே | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | மே |
| பிப்ரவரி | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மார்ச்சு |
| ஜூன் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | ஜூன் |
| மார்ச்சு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | ஏப்ரல் |
| ஜூலை | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஜூலை |
| ஏப்ரல் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | மே |
| ஆகஸ்டு | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | ஆகஸ்டு |
| மே | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஜூன் |
| செப்டம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | செப்டம்பர் |
| ஜூன் | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | | ஜூலை |
| அக்டோபர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | அக்டோபர் |
| ஜூலை | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | ஆகஸ்டு |
| நவம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | | நவம்பர் |
| ஆகஸ்டு | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | | செப்டம்பர் |
| டிசம்பர் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | டிசம்பர் |
| செப்டம்பர் | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | அக்டோபர் |


# அமிருதா

மானடருக்கு ரக்தமே உயிர். அதுவே பிராணுதாரம். ரக்தம் சுத்தமாகவும், போதிய அளவும் உடம்பில் இருந்து, அதன் ஓட்டமும் சரியாக இருந்தால்தான் தேகம் ஆரோக்கியமாக இருக்கும். அசுத்த ரக்தமே மனிதருக்குச் சம்பவிக்கும் எல்லா வியாதிகளுக்கும் மூலகாரணம்.

அத்தகைய கெட்ட ரக்தத்தை சுத்தி செய்து மனிதரின் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவதில் சிறந்தது எங்களுடைய அமிருதா ஒன்றே என அதை உபயோகித்தவர் அனேகர் நற்சாட்சி கூறுகின்றனர்.

அமிருதாவினுல் தீரும் ரோகங்கள் அனேகம். மேகப்படை, தேமல், சொரி, கண்டமாலை, படை, தலைநோய், வயிற்றில் எரிச்சல், கண் எரிச்சல், பலஹீனம், தூக்கக்குறைவு, மூத்திர சம்மந்தமான எல்லா வியாதிகள், ரசகந்தக பாஷாணுதி விஷதோஷங்களால் ஏற்படும் சகல ரோகங்களும், ஸ்வப்பன ஸ்கலனம், சுக்கில ஸ்ராவம், மந்த புத்தி, சுகசங்கடங்கள், கீல் நோய் முதலியவற்றை அமிருதா தீர்த்து வைக்கும் அரிய மருந்து.

அமிருதாவினுல் நல்ல தேக பலம், சுத்த ரத்த விருத்தி, சரீர ஆரோக்யம், இந்திரிய புஷ்டி, வாக்கு வல்லமை, யோசனுசக்தி முதலியவை உண்டாகும்.


இது பல புண்ய க்ஷேத்திரங்களிலிருக்கும் சிறந்த மூலிகைகளினுலும், பழ வகைகளினுலும், புஷ்ப வகைகளினுலும் தயார் செய்யப்பட்ட ஓர் சிறந்த டானிக். இதை வாலிபர் முதல் வயோதிகர்வரை யாவரும் உபயோகிக்கலாம்.

"அமிருதா" என்ற பெயருக்குத் தக்கபடி இனிப்பாயும், சுவாசனையுள்ளதாயும், தயார் செய்யப்பட்டுள்ளது.

இதன் விலை 12 அவுன்ஸ் ரூ. 3 0 0
" 6 " " 1 10 0

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.**



அவன்தான் ஜொலிகல் டாக்கீஸாரின் "நவயுவன்" என்ற படத்தில் ஓர் காட்சி.


## "நவயுவன்" அல்லது "கீதாஸாரம்"

அவன்தான் ஜொலிகல் டாக்கீஸாரின் "நவயுவனில்" சில முக்கிய காட்சிகளைப் படம் பிடிப்பதற்காக அக்கம்பனியாரின் மானேஜர் திரு. எஸ். கோவிந்தராம அவர்களும், இப்படத்தில் கதாநாயகனாக நடிக்கும் திரு. வி. வி. சடகோபன் பி.எ.யும், பட டைரக்டர் திரு. மைக்கேல் ஓம்லேவ் அவர்களும் மார்ச்சு மாத ஆரம்பத்தில் இங்கிலாந்து செல்லுகிறார்களென்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். காட்சிகளைத் தத் ரூபமாகப் படம் பிடிக்க இவ்வளவு பெருந்தொகை செலவு செய்வது இக்கம்பெனியாரே. எனவே படம் சினிமா உலகில் நவயுகத்தை ஆரம்பிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

Trade Mark

Regd. No. 1983

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா எட்டு

விலை பேசரி சைஸ் கமலம் ஒன்றுக்கு அணா ஆறு

ஒரிஜினல்

## கல்ச்சர் வைரங்கள்

கல்ச்சர் வைரம் எங்களிடம் தவிர வேறு இடங்களில் கிடையாது.

கேட்லாக் இனாம்!

சொ. அருணாசலம் செட்டி,

மு. ராமசாமி செட்டி,

வைரப்பு வியாபாரம், திருச்சினாப்பள்ளி.



ஸ்நானத்தினால் சுகப்பட வேண்டுமானால்

கேரளா சந்தண சோப்பையே உபயோகியுங்கள்.

கேரளா சோப் இன்ஸ்டிடியூட், கள்ளிக்கோட்டை.

## அழகான அச்சுவேலைகளுக்கு

நல்ல அச்சுவேலையால் அழகுபடுத்தலாம். நாங்கள் கலர் வேலைகள் மிகவும் நன்றாய் செய்பவர்கள் என்பது ஒரு முறை பரீக்ஷித்தால் தெரியும். விபரத்திற்கு எழுதவும். வேலைகளை மிகவும் அழகாகச் செய்வதோடு குறித்த காலத்தில் அச்சிட்டுக் கொடுக்கும்வல்லமையுள்ளவர்கள் யாரென்பதை உங்கள் அனுபவத்திலேயே தெரிந்துகொள்ளலாம்.

**லோத்ரா பிரஸ், மதராஸ்.**

உங்கள் உள்ளம் நாடிக்கொண்டிருப்பது!

உங்கள் கேழ்வை ஞானத்தில் அகப்படாதது!

பிரமிப்பையும் மனவெழுச்சியையும் தூண்டுவது!

---

## நவயுவன்

அல்லது

## கீதாஸாரம்

### இதோ வருகிறது!

டைரெக்ஷன்:

மைக்கேல் ஆமலெவ்

நக்ஷத்திரங்கள்:

வி. வி. சடகோபன், B.A.

பி. ஆர். ஸ்ரீபதி.

பி. என். சேஷகிரி பாகவதர்.

ஸ்ரீமதி. கோமதி.

**மஹோன்னத சமூகப் படம்**

தயாரிப்பு:—

## அஸன்தாஸ் கிளாஸிகல் டாக்கீஸ்,

கலீல் மான்ஷன்ஸ், மவுண்டு ரோடு, சென்னை.

---




போலிகளைக் கண்டு உஷார்!!!

## அமிர்தாஞ்சனம்

சகல வலிகளையும் போக்கும்

**இந்திய திவ்யாமிர்தம்**

**அமிர்தாஞ்சனம் லிமிடெட்,**

பம்பாய், மதருஸ், கல்கத்தா.

---

உங்களுக்கு தேவையான ஆப்டோன், லயன், அழகிய கலர் பிளாக்குகள் முதலியவைகளை கைதேர்ந்த ஆட்களைக் கொண்டு, நேர்த்தியாகச் செய்து குறித்த காலத்தில் கொடுப்போம். வெகுகாலமாக எம். எஸ். எம். ரயில்வே கம்பெனிக்கும் பிரபல பிலிம் கம்பெனிகளுக்கும், புஸ்தக பிரசுரங்களுக்கும் நாங்களே பிளாக்குகள் செய்து கொடுத்துக் கொண்டு வருகிறோம். ஒரு முறை தங்களது ஆர்டர்களை கொடுத்து பரீக்ஷியுங்கள்.

விபரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

**கே. ரத்னம் அண்டு கோ.,**
*(Late of Klein & Peyryl),*
291, ஹைரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

---

சிறந்த வைரங்கள்

● தேர்ந்த நகைகள்

○ சுத்த வெள்ளிச் சாமான்களுக்கு

● உத்திரவாத மானவர்கள்

## பாபாலால்ஸ்

216, சைனாபஜார், சென்னை.

கேட்லாக் இனாம்.

# மாதவி ஸ்னோ

இது அநேக புஷ்பங்களினின்றும் எடுக்கப்பட்ட அத்தர்கள் நிறைந்துள்ள ஒரு வாசனையான பனிபோன்ற பரிமள பதார்த்தம். இதில் கொஞ்சம் விரலில் எடுத்துக்கொண்டு முகத்தில் பூசிக்கொண்ட மாத்திரத்தில் விரைவில் மாயமாக சர்மத்தில் மறைந்து, முகத்திற்கு காந்தியையும் தேஜஸையும் உண்டாக்கும். முகம் பளிங்குபோல் நிர்மலமாயிருக்கும். முகத்திலுண்டாகும் சோபை, மச்சம், முகப்பருவுகள் முதலியவைகளைப் போக்கும். மேலும் முகம் குளிர்ச்சியாயும், பனிநீரை தடவிக்கொண்டது போலுமிருக்கும்.

விலை புட்டி அணா 8

கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.

## மாலதி க்ரீம்

இது பாதம் பருப்பின் பாலி[illegible] செய்யப்பட்ட சுகந்தமுள்ள நவனீதம். ஸ்திரீ, புருஷர்கள் தலைவாரிக் கொள்[illegible]வதற்குமுன் கொஞ்சம் தலையில் தடவிக் கொண்டால் [illegible] பட்டுப்போல் அழகாக இருக்கும். குளிர்ச்சியைத் தந்து அழகையும், வசீகரத்தையும் கொடுப்பது. மாலதி அத்தர் சேர்ந்தது.


விலை புட்டி அணா. 8

## மல்லிகா

இது குழந்தைகளுக்கான லேபம். சந்தன அத்தர், மல்லிகைப் பூச்சார், காஷ்மீர் புனுகு முதலியவற்றால் செய்யப்பட்டது. குழந்தைகள் ஸ்நானம் செய்த உடன் உடம்பில் தடவினால் பொன் மேனியைக் கொடுத்து சகல சர்மவியாதிகளையும் போக்கும். இந்த லேபத்தை உபயோகப்படுத்தினால் குழந்தைகள் ரப்பர் பொம்மைகளைபோல் புஷ்டியாயிருப்பார்கள்.

விலை புட்டி அணா. 8

கேஸரி குடீரம், எழும்பூர், மதராஸ்.




**சுவை மிகுந்த உண்டிகள் — பானங்கள்.**

இணையற்ற ரகம் — வகையான உபசாரம் — உல்லாசமான இடம்

நல்ல காற்றோட்டம் — முதல் தரமான வசதி.

# சாஸ்திரி ஹோட்டல்,

**89, சிக்பேட், பெங்களூர் சிடி.**

தங்க[illegible]டல்கள் பரிசுபெற்ற பிரக்யாதியான

கேஸரி

# பற்பசை



பற்களுக்கு வசீகரத்தையும், ப்ரகாசத்தையும், மதுரத்தையும் கொடுக்கும்.

பற்களை முத்துப்போல் அழகாகச் செய்வது மன்னியில்

**சகலவித பல்நோய்களையும் தீர்க்கும்.**

**விலை அணா 8.**

# லோத்ராவின் மகிமை

## சிறந்த ஔஷதம்

ஸ்ரீமதி அன்னா சாண்டி, எம்.ஏ., பி.எல்., அட்வகேட், ஆசிரியை, "ஸ்ரீமதி", திருவனந்தபுரம்:—"நான் தங்கள் லோத்ராவை உபயோகித்தேன். ரூதகசம்பந்தமான எல்லா வியாதிகளுக்கும் லோத்ராவே தலை சிறந்த ஔஷதம். அது அருந்த ருசியாயிருப்பதும், பத்தியமில்லாமலிருப்பதும் மேலும் குறிப்பிடத்தக்கது."

## தடைப்பட்ட மாதவிடாய்

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி அம்மாள், கொள்ளேகால், மைசூர்:—"கடந்த மூன்று வருஷங்களில் எனக்கு மாதவிடாய் சரியாக ஏற்படவில்லை. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் தூரம் வந்தது. இதனால் எனக்கு இடுப்பிலும், கணுக்களிலும் நோவு ஏற்பட்டது. நான் ரொம்பவும் மெலிந்து விட்டேன், என் உடல் எனக்கு பெரும் பாரமாகத் தோன்றியது. உடனே உங்கள் லோத்ரா இரண்டு புட்டி யருந்தினேன். என் வியாதி என்னை விட்டு நீங்கியது. இன்னும் ஓரிரண்டு பாட்டில் மருந்து சாப்பிட நான் விரும்புகிறேன். மேலும் என்னைப் போன்ற உபாதைகள் உள்ள எல்லோரும் லோத்ராவை உபயோகிக்குமாறு நான் சிபார்சு செய்கிறேன்."

## சகோதரிகளின் அனுபவம்

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—"லோத்ராவை உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருதுசூலை கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்."

## ஆச்சரியமான குணம்

ஸ்ரீமதி கர்த்தா, கொரளி அம்மஜூத் ஹவுஸ், இரிஞ்சலக்கூடம், கொச்சி:—"கடந்த பத்து வருஷங்களாக நான் மாதவிடாய் சம்பந்தமான தொந்தரவால் ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்தேன். உங்கள் லோத்ரா என்னை ஆச்சர்யப்படத்தக்கவிதத்தில் அக்கஷ்டத்தினின்றும் விடுவித்து விட்டது."

## கர்ப்பாசய ரோக நிவாரணி

ஸ்ரீமதி மிஸ். அம்மாகுட்டி அம்மாள், சங்கீத உபாத்தியாயினி, சர்க்கார் ஹைஸ்கூல், திருச்சூர்:—"நான் நெடுநாட்களாகப் பலவிதமான கர்ப்பாசயரோகத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். அநேக விதமான வைத்தியங்கள் செய்தும் குணம் கொடுக்கவில்லை. கடைசியாக உங்களது (கேசரி) லோத்ராவை உபயோகித்த ஒரு வார தினத்திற்குள் காரடி வித்தையைப்போல் குணம் அடைந்தேன். அதன் மகிமை சொல்லமுடியாது."

எங்கும் கிடைக்கும்.

**கேஸரி குடீரம், எழும்பூர், சென்னை.**

# QUEEN OF TONICS







| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |